தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:287 | 02-05-2026 | சனிக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி

# மேற்கு வங்காளத்தில் 15 வாக்குச்சாவடிகளில் இன்று மறுவாக்குப்பதிவு: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**கொல்கத்தா, மே 2:**

மேற்கு வங்கத்தில் இரு தொகுதிகளில் உள்ள 15 வாக்குச்சாவடிகளில் இன்று (சனிக்கிழமை) மறுவாக்குப்பதிவு நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மேற்கு வங்க தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாநில தேர்தல் அமைப்பிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த மறுவாக்குப்பதிவு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், வாக்குப்பதிவு இன்று(மே 2) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அதன்படி, மாக்ரஹாட் பாச்சிமில் 11, டைமனண்ட் ஹார்பரில் 4 என 15 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடைபெறுகிறது.

2 ஆம் கட்ட வாக்குப்பதிவின்போது வந்த புகார்கள், முறைகேடுகளை தொடர்ந்து தேர்தல் ஆணையம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. மேலும் ஃபால்டா தொகுதி தொடர்பான புகார்கள் குறித்த அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தொகுதியிலிருந்து அதிக எண்ணிக்கையிலான புகார்கள் பெறப்பட்டன. 294 தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்கத்தில் இரு




கட்டங்களாக பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது.

முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கு கடந்த ஏப். 23-ஆம் தேதியும், இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 142 தொகுதிகளுக்கு கடந்த ஏப். 29-ஆம் தேதியும் வாக்குப் பதிவு நடைபெற்றது. 6.81 கோடி வாக்காளர்கள் உள்ள இந்த மாநிலத்தில் இரு கட்டங்களிலும் சேர்த்து 92.47 சதவீத வாக்குகள் பதிவாகின. நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகு மேற்கு வங்கத் தேர்தலில் அதிகபட்ச வாக்குப் பதிவு இதுவாகும். முதல் கட்டத் தேர்தலில் எந்த வாக்குச்சாவடியிலும் மறுவாக்குப் பதிவு நடத்த பரிந்துரைக்கப்படவில்லை.

ஆனால், இரண்டாம் கட்டத் தேர்தலில் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில் அடங்கிய 77 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பொதுவாக, வாக்குப் பதிவு இயந்திரம் பழுது, வாக்குச்சாவடி கைப்பற்றப்படுதல், வாக்காளர்கள் மிரட்டப்படுதல், வாக்குப் பதிவு ரகசியம் மீறப்படுவது உள்ளிட்ட பிரத்யேக காரணங்களைக் குறிப்பிட்டு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், வாக்குப் பதிவு முகவர்கள், பார்வையாளர்கள் எழுப்பும் புகார்களின்பேரில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படும்.

மேற்கண்ட 77 வாக்குச்சாவடிகளில், வாக்குப் பதிவு இயந்திரங்களில் முறைகேடு, இயந்திரங்கள் மீது ரசாயனப் பொருள்களைத் தடவுவது, கண்காணிப்பு கேமரா செயல்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்துவது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மறுவாக்குப் பதிவு கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருந்தன.

அதன்பேரில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பிறப்பித்த உத்தரவின்படி, சம்பந்தப்பட்ட இடங்களில் தேர்தல் சிறப்புப் பார்வையாளர் சுப்ரதா குப்தா கள ஆய்வு மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜபல்பூரில் சுற்றுலாப் பயணிகள் படகு கவிழ்ந்து 9 பேர் பலி, 5 பேர் காணவில்லை!

**ஜபல்பூர், மே 2:**

மத்தியப்பிரதேசம் மாநிலம், ஜபல்பூரில் உள்ள பர்கி அணையில் சுற்றுலாப் பயணிகள் படகு கவிழ்ந்ததில் 9 பேர் பலியாகினர், 5 பேர் காணவில்லை, 15 பேர் மீட்கப்பட்டடுள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் ராணுவத்தினர் மாயமானவர்களை தேடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

மத்தியப்பிரதேசம் மாநிலம், ஜபல்பூர் மாவட்டத்தில் நர்மதா ஆற்றின் குறுக்கே பர்கி அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையில் சுற்றுலாப் பயணிகளுக்காக படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பர்கி அணையில் வியாழக்கிழமை சொகுசு சுற்றுலா படகில் 29 சுற்றுலாப் பயணிகள் சென்றுள்ளனர். படகு அணையின் மையப்பகுதியில்



சென்றுகொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. படகில் இருந்தவர்கள் தண்ணீரில் தத்தளித்து கொண்டு உதவிக்கு சத்தமிட்டு அழைத்துள்ளனர். தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் தண்ணீரில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 15 பேரை பத்திரமாக மீட்டுள்ளனர். 4 பேரை சடலங்களாக மீட்டுள்ளனர், 10 பேரைக் காணவில்லை.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் ராணுவத்தினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அந்த மாநில அமைச்சர் ராகேஷ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சுற்றுலாப் பயணிகள் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளதாகவும், பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போன 5 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அமைச்சர் தர்மேந்திர லோதி தெரிவித்துள்ளார்.

# சிலிண்டர் விலை உயர்வு: முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

**சென்னை, மே 2:**

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.993 உயர்ந்து ரூ.3,237 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில், தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிலிண்டர் விலை உயர்வு தொடர்பாக வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

மக்களின் துயரை எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்!

தேர்தலுக்கு முன்பே கணித்ததுபோல், தேர்தல் முடிந்தவுடன் எல்.பி.ஜி. விலையை உயர்த்தியிருக்கிறது மத்திய பா.ஜ.க. அரசு. உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்கவில்லை. இப்போது மேற்காசிய போர் என்ற நெருக்கடியை வைத்து, மக்களின் நலனை எண்ணாமல், விலையை ஏற்றுவது சரியல்ல.

இந்த எல்.பி.ஜி விலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து, இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

# மதுரை சித்திரை திருவிழா: பச்சை பட்டுடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார் கள்ளழகர்!

**மதுரை, மே 2:**

மதுரை சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம், லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று அதிகாலையில் கோலாகலமாக நடைபெற்றது. தல்லாகுளம் கருப்பணசாமி கோவிலில் இருந்து ஆயிரம் பொன் சப்பரத்தில் புறப்பட்ட அழகர், அதிகாலை பச்சை பட்டுடுத்தி தங்கக் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் இறங்கினார். அப்போது கூடியிருந்த பக்தர்கள் "கோவிந்தா" முழக்கத்துடன் தண்ணீரை பீய்ச்சி அடித்து வரவேற்றனர். வைகையில் எழுந்தருளிய கள்ளழகரை வெள்ளிக் குதிரை வாகனத்தில் வீரராகவப் பெருமாள் வரவேற்றார்.

காலை 7.25 மணி வரை கள்ளழகர் வைகை ஆற்றில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பிறகு, பகல் 12 மணிக்கு கள்ளழகர் ராமராயர் மண்டபம் செல்கிறார். அங்கு பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்கிறார்கள். வேடம் அணிந்த



பக்தர்கள் கள்ளழகர் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து குளிர்விக்கும் தீர்த்தவாரி நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து இன்று இரவு 9 மணிக்கு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோவிலுக்குச் சென்று அங்கு எழுந்தருள்கிறார். அங்கு நாளை அதிகாலை ஏகாந்த சேவையும், மதியம் தேனூர் மண்டபத்தில் மண்டுக முனிவருக்குச் சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வும் நடைபெற உள்ளன. விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான தசாவதாரக் காட்சி, நாளை நள்ளிரவு 12 மணி முதல் ராமராயர் மண்டபத்தில் விடிய விடிய நடைபெற உள்ளது. இதில் பெருமாளின் பத்து அவதாரங்களையும் பக்தர்கள் தரிசிக்கலாம். மறுநாள் காலை மோகினி அவதாரத்தில் வீதி உலா வரும் அழகர், மே 4-ம் தேதி அதிகாலை பூப்பல்லக்கில் எழுந்தருளி, பின்னர் தல்லாகுளம் கருப்பணசாமி கோவிலில் விடைபெற்று மீண்டும் அழகர்மலைக்குத் திரும்புவார்.

லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதால், மதுரை மாநகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 5,000-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர், மேலும் டிரோன்கள் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் தின விடுமுறை என்பதால் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, சிறப்புப் பேருந்துகள் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகளைத் தமிழக அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகம் விரிவாக செய்திருந்தது.

## இன்றைய பஞ்சாங்கம்

வெள்ளிக்கிழமை
(02–05–2026)
பராபவ ஆண்டு,
சித்திரை–19

சூரிய உதயம் 5.50

திதி:
பிரதமை நள்ளிரவு 12.47 வரை பிறகு துவிதியை,

நட்சத்திரம்:
விசாகம் (முழுவதும்)..

யோகம் :
சித்த யோகம்.

நல்ல நேரம்
காலை 7.00 – 8.00.
மாலை 5.00 – 6.00.

இராகு காலம்
காலை 9.00–10.30 மணி.

எமகண்டம்
நண்பகல் 1.30–3.00 மணி.

குளிகை
காலை 6.00 – 7.30 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மே 2-வது வாரத்தில் தென்மேற்குப் பருவமழை! இந்திய வானிலை!



**புதுடெல்லி, மே 2:**

அரபிக்கடலில் மே இரண்டாவது வாரத்தில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இதன் காரணமாகப் பருவமழை முன்னதாக தொடங்குவதற்கான சூழல் நிலவுகிறது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் மே 4-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், வெப்பத்தை தத்தணிக்கும் விதமாகத் தென்மேற்குப் பருவமழை இந்தாண்டு முன்னதாக தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக ஜூன் 1-ஆம் தேதி கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும். இந்தாண்டு மே இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்திலேயே தொடங்க வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதியோடு, பருவமழைக்கான தொடக்கமாக அமையும் என்பதால் மே 7-ம் தேதிக்கு மேல் பல்வேறு பகுதிகளில் மழைப்பொழிவு ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாகத் தமிழகத்தின் தென் மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் நல்ல மழைப்பொழிவைஎதிர்பார்க்கலாம்.

அக்னி நட்சத்திரம் தொடங்கவுள்ள நிலையில், பகலில் வெப்பநிலை அதிகரித்தாலும், இரவில் வெப்பச்சலனம் காரணமாகக் கோடை மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதோடு இந்தாண்டு பலத்த காற்றுடன் நல்ல மழைபொழிவு இருக்கும் வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-10

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்



சோம்பலை விரும்பி மேற்க் கொண்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர் பிறர் இடித்துக் கூறி இகழ்கின்ற சொல்லைக் கேட்கும் நிலைமை அடைவர்.

# சிந்திக்க ஒரு நொடி



பணத்தால் வாங்கக்கூடிய விசயங்களுக்கு மட்டும் பணத்தை செலவிடுங்கள்...

பணத்தால் வாங்க முடியாத விஷயங்களுக்கு நேரத்தை செலவிடுங்கள்

**உஷா முத்துராமன்**

# குன்னூரில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையை திறந்து வைத்தார் எம்பி ஆ.ராசா



சென்னை கேசவர் தேவராஜ முதலி தெருவில் முதல் திருநாள் காலையில் சுவாமிகள் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்னர்.

## ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி குருட சேவை



நெல்லூர் தால்பகிரி ஸ்ரீரங்கநாத பெருமாள் சன்னதி ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி குருட சேவை புரப்பாடு.

## பௌர்ணமி சிறப்பு பூஜை அன்னதானம்



**வாடிப்பட்டி, மே.02:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ரயில் நிலையம் அருகில் சொக்கையா சாமி ஜீவசமாதியில் சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி சிறப்பு பூஜை நடந்தது. இந்த பூஜையையொட்டி மதியம் 12 மணிக்கு விநாயகர், முருகன், சொக்கையா சுவாமி ஆகியோருக்கு அபிஷேக, ஆராதனை, அர்ச்சனைகளுடன் சிறப்பு அலங்காரமும் பூஜையும் செய்யப்பட்டது.

இதில் பஜனை பாடல்கள் பாடி கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதான கூடத்தில் அன்னதான வழங்கப்பட்டது. இது ஏற்பாடுகளை சொக்கையா சுவாமி மடத்தின் நிர்வாக தலைவர் கே. மணிகண்டன் செய்திருந்தார்.

# வசந்தோற்பவம் திருமஞ்சனம் ஸ்ரீபூதாத்வாழ்வார்




நேற்று ஸ்தலஸாயன பெருமாள் பிரமோற்சவம் நாள் 7 மாலை வசந்தோற்பவம் திருமஞ்சனம் ஸ்ரீபூதாத்வாழ்வார் அவதார ஸ்தலத்தில்.

# இராமநாதபுரம் கோதண்டராமர் கள்ளழகர் திருக்கோலம்



இராமநாதபுரம் கோதண்டராமர் கள்ளழகர் திருக்கோலம்

# மகாபிஷேகம்



தலக்காடு ஸ்ரீகருத்திநாராயணர் மகாபிஷேகம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாபநாசம் மைய கொடிஏற்று விழா



**பாபநாசம், மே 02:**
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாபநாசம் மைய கொடியை மாவட்ட பொருளாளர் தோழர் ஏ ராஜேந்திரன் கொடியினை ஏற்றி வைத்தார். மற்றும் ஏ ஐ டி யூ சி மாநில செயலாளர் தோழர் ஆர் தில்லைவனம் மற்றும் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் ஆர் பரமசிவம் மற்றும் ஒன்றிய செயலாளர் தோழர் பொன் சேகர் பாபநாசம் ஒன்றிய குழு நிர்வாகிகள் ஈச்சங்குடி ஜீவானந்தம் தோழர் கள் வேலா.முரளிதரன் மகேந்திரன் ராமதாஸ் நாகராஜன் ஆட்டோ சங்க நிர்வாகிகள் மற்றும் தோழர்களும் கலந்து கொண்டனர்.

# தோழர் R. கலா அரசு பணி நிறைவு பாராட்டுவிழா




**மயிலாடுதுறை, மே 02:**
தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநில தலைவரும், மயிலாடுதுறை மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத்தலைவருமான தோழர் R. கலா அவர்களின் அரசு பணி நிறைவு பாராட்டுவிழாவில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நாகை மாவட்ட மேனாள் மாவட்ட செயலாளரும், தீக்கதிர் பத்திரிகையின் நாகை செய்தியாளருமான தோழர் அ. தி. அன்பழன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிய நிகழ்வு ...

## சீர்காழி சட்டை நாதர் கோயிலில் தீர்த்தவாரி திருவிழா



**சீர்காழி, மே , 02 :**
தருமை ஆதீனத்திற்கு சொந்தமான மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாள் உடனாகிய ஸ்ரீ பிரமபுரீஸ்வர சுவாமி பிரமோற்சவத்தை முன்னிட்டு சீர்காழி அனைத்து செட்டியார் சமூகத்தினரால் நடத்தப்படும் பத்தாம்நாள் திருவிழா தீர்த்தவாரி சீர்காழி ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாள் உடனுறை ஸ்ரீ பிரமபுரீஸ்வரசுவாமி ஆலயத்தில் நடைப்பெற்றது. காலை 11.00 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் தீர்த்தம் கொடுத்தருளும் நிகழ்ச்சியும் அதனை தொடர்ந்து அன்னதானம் நிகழ்ச்சியும் இரவு 7.00 மணிக்கு அவரோவணமும் பஞ்சமூர்த்திகளும் புஷ்ப அலங்காரத்துடன் திருவீதி உலாவிலும் பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமிகளின் திருவருளை பெற்றார்கள். இவ்விழா சிறப்புற நடைபெற ஏற்பாடுகளை சீர்காழி தாலுக்கா அனைத்து செட்டியார் சமூகத்தினர் செய்தார்கள்.

# உழைப்பாளர் தினம்: தூய்மை பணியாளர்களுக்கு மரியாதை ஜேசிஐ இந்தியா சார்பில் கௌரவிப்பு




**இராசிபுரம், மே 02:**
ராசிபுரம் அருகே உள்ள வெண்ணந்தூர் அத்தனூரில், உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு 100-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு பெண்ணாடை அணிவித்து கௌரவித்து, மதிய உணவு வழங்கிய நிகழ்ச்சி நடைபெற்றது.

தலைமைத்துவத் திறன், சமூகப் பொறுப்பு மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்தும் நோக்கில் செயல்படும் ஜேசிஐ இந்தியா அமைப்பு சார்பில், மே 1 ஆம் தேதி உழைப்பாளர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் அத்தனூர் பேரூராட்சியில் பணியாற்றும் சுமார் 100-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு பெண்ணாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து, அவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

ஜேசிஐ வெண்ணந்தூர் தலைவர் A. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், ஜேசிஐ இந்தியா மண்டல துணைத் தலைவர் வித்யாதேவி, ஜேசிஐ நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு, தூய்மை பணியாளர்களின் சேவையை பாராட்டினர்.

# காட்பாடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பணியாளருக்கு பணி நிறைவு: ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் நலச்சங்கம் பாராட்டு!



**வேலூர், மே 02:**
காட்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சமூக அறிவியல் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றி பணிநிறைவு பெற்ற ஆர்.ஜீவா, ஆய்வக உதவியாளராக பணிநிறைவு பெற்ற டி.மணி ஆகிய இருவருக்கும் பள்ளி வளாகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியை கோ.சரளா தலைமை தாங்கினார். பள்ளி உதவித்தலைமையாசிரியர் எம்.மாரிமுத்து வரவேற்று பேசினார். ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் நலச்சங்க மாவட்ட தலைவர் முனைவர். செ.நா.ஜனார்த்தனன், அ.கலைச்செல்வன், உயர்நிலை உதவி தலைமையாசிரியர் பி.கணேசன், இடைநிலை உதவி தலைமையாசிரியை பி.ரோசலின் பொன்னி உள்ளிட்டோர் சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி பேசினர். ஆசிரியர்கள் சுகந்தி, திலகலட்சுமி, எஸ்.வெங்கடேசன், நிவேதிதா, ஆகியோர் வாழ்த்தி பேசினர். அறிவியல் ஆசிரியர் பி.பாலச்சந்தர் நன்றி கூறினார்.

## வீடுகளுக்கான சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகம் 100 சதவீதம் உறுதி: மத்திய அரசு தகவல்



**புதுடெல்லி, மே 2:**

மேற்கு ஆசிய போர் பாதிப்பின் மீள் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு துறை அதிகாரிகளின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடந்தது. இதில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரி வாயுத்துறை இணைச் செயலாளர் சுஜாதா சர்மா கூறியதாவது:-

வீட்டு உபயோகத்துக்கான கியாஸ் சிலிண்டர் வினியோகம் 100 சதவீதம் உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்பதிவுக் காலத்தை திறம்பட நிர்வகிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. எந்தவொரு வினியோகஸ்தரிடமும் தட்டுப்பாடு இல்லை.

ஆன்லைன் முன்பதிவுகள் கிட்டத்தட்ட 98 சதவீதம் வரை அதிகரித்துள்ளன. சுமார் 93 சதவீத சிலிண்டர் வினியோகங்கள், வினியோக அங்கீகார குறியீடு அமைப்பு மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. வணிக சிலிண்டர் வினியோகம் சுமார் 70 சத வீதமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்களை கொண்ட 3 பேர் குழு, மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து, வணிக எல்.பி.ஜி.யின் தொடர்ச்சியான விற்பனையை உறுதி செய்து வருகிறது. இந்த மாதம், சுமார் 1,92,532 டன் வணிக எல்.பி.ஜி. விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சென்னையிலிருந்து சிறப்பு பேருந்துகள் மூலம் 2.13 லட்சம் பேர் பயணம்



**சென்னை, மே 2:**

மே தின தொடர் விடுமுறை மற்றும் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு,சென்னையிலிருந்து சிறப்பு பேருந்துகள் மூலம் 2.13 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

மே தின தொடர் விடுமுறை மற்றும் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு, பொதுமக்கள் பயணம் மேற்கொள்ள வசதியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழங்கள் மூலமாக சென்னையிலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் விபரம் வருமாறு, 30.04.2026 முதல் 01.05.2026 அதிகாலை 3 மணி நிலவரப்படி, வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகள் முழுமையாக இயக்கப்பட்டதுடன், கூடுதலாக 1,784 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 3,876 பேருந்துகள் இயக்கப்பட்டு, 2,13,180 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இன்று பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்படும் என அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் யார் ஆட்சி? கருத்துக் கணிப்பில் குழப்பம்



**சென்னை, மே 2:**

தமிழக சட்டசபை தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் யார் ஆட்சி என்பதில் குழப்பமான நிலை உள்ளது.

சில நிறுவனங்கள் நடத்திய கருத்து கணிப்பு தி.மு.க. ஆட்சி தான் மீண்டும் அமையும் என்று சொல்கிறது. மற்றும் சில நிறுவனங்கள் நடத்திய கருத்து கணிப்பு அண்ணா தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்று கூறுகிறது.

மற்றொரு நிறுவனம் த.வெ.க. ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளது.

இப்படி ஒவ்வொன்றும் மாறுபட்ட முடிவுகளை அறிவித்து உள்ளதால் யார் ஆட்சி என்பதில் குழப்ப நிலை தான் உள்ளது.

கருத்து கணிப்பு முடிவை பார்த்து ஒவ்வொருவரும் தங்கள் ஆட்சி தான் என்று உற்சாகத்தில் உள்ளனர்.

இந்த குழப்பத்திற்கெல்லாம் மே 4ந் தேதி அன்று காலை 11 மணி அளவில் முடிவுகள் தெரிய வந்துவிடும். அதுவரை இந்த கருத்து கணிப்பு முடிவுகள் விவாதம் தொடர்ந்து கொண்டே இருக்கும். தமிழகத்தில் கடந்த 23-ந் தேதி (வியாழக்கிழமை) 17-வது சட்டசபை தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தலுடன் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடந்த நிலையில், நேற்று (29-ந்தேதி) மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு 2-வது கட்ட வாக்குப்பதிவு நடந்தது. ஏற்கனவே, புதுச்சேரி, கேரளா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கு கடந்த 9-ந் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்து முடிந்திருக்கிறது.

இந்த நிலையில், தமிழகம் உள்பட 5 மாநில சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகள் மே மாதம் 4-ந் தேதி (திங்கட்கிழமை) எண்ணப்பட இருக்கின்றன.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மார்ச் 15-ந் தேதி சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தகவல்கள் வெளியாகின.

ஆனால், தேர்தல் தேதி நெருங்கும் சமயத்தில் வெளியான கருத்து கணிப்புகளில், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று கூறப்பட்டன. தமிழக அரசின் உளவுத்துறையும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று அரசுக்கு அறிக்கை கொடுத்ததாக தகவல் வெளியானது. வாக்குப்பதிவு நாளான 23-ந் தேதி, வாக்களித்தவர்களை வைத்து பார்க்கும்போது, த.வெ.க.வுக்கு அதிக வாக்குகள் பதிவாகியிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், மேற்கு வங்காளத்தில் நேற்று 2-வது கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில், வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் 5 மாநிலங்களுக்கும் வெளியாகின. கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருந்ததால், அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் இருந்து வருகிறார்கள். என்.டி.டி.வி. - பீப்பிள்ஸ் பல்ஸ், மேட்ரிஸ், ரிபப்ளிக் பி மார்க், சாணக்கியா ஸ்ட்ராட்டஜிஸ், மும்பை சட்டபஜார், அக்னி, மின்னம்பலம் ஆகிய 7 நிறுவனங்கள், ஆளுங்கட்சியான தி.மு.க.வே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளன.

அதே நேரத்தில், வோட் வைப், ஜே.வி.சி. - டைம்ஸ் நவ், சி.என்.என். - நியூஸ்18 ஆகிய 3 நிறுவனங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியை பிடிக்கும் என்று தெரிவித்துள்ளன.

ஆனால், இந்தியா டுடே - ஆக்சிஸ் மை இந்தியா தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியை பிடிக்கும் என்று கருத்து கணிப்பு வெளியிட்டுள்ளது. இப்படி, தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெவ்வேறாக இருப்பதால், "ஆட்சியை பிடிப்போம்" என்ற நம்பிக்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் தலை சுற்றலில் உள்ளனர். ஆனால், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பு முடிவுகள் வெளியானதில், தி.மு.க. முன்னிலையில் இருப்பதால், அக்கட்சி நிர்வாகிகள் "வெற்றி நமதே" என்று நம்பிக்கையுடன் உள்ளனர்.

தேர்தல் முடிவு வந்த பிறகுதான், எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு சரியானது, எந்த நிறுவனத்தின் கருத்து கணிப்பு தவறானது என்பது வெளிச்சத்துக்கு வரும். ஆகையால் தேர்தல் முடிவுகளை எதிர்நோக்கி மக்கள் ஆர்வத்தில் உள்ளனர்.

## தமிழ்நாடு விளையாட்டு மையத்தில் 2026-27 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு




**கரூர், மே 2:**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (எஸ்டிஏடி) விளையாட்டு விடுதிகள் மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் 2026-27 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து கலெக்டர் ரவிகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி, தங்குமிடம் மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. 2026-27 கல்வியாண்டில், 10 முதல் 17 வயதுக்கு உட்பட்ட, 6, 7, 8, 9 மற்றும் 11-ஆம் வகுப்பில் சேரவுள்ள மாணவ, மாணவியர்களுக்கான மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறவுள்ளன.

தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கையுந்துபந்து, கிரிக்கெட் (மாணவர்களுக்கு மட்டும்), கைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான தேர்வுகள், மாணவர்களுக்கு மே 7-ஆம் தேதி காலை 7 மணிக்கும், மாணவியர்களுக்கு மே 8-ஆம் தேதி காலை 7 மணிக்கும் கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெறும். குத்துச்சண்டை, வாள்விளை யாட்டு, ஜூடோ, பளுதூக்குதல், வுஷூ, நீச்சல், மல்யுத்தம், டேக்வாண்டோ, மல்லர்கம்பம், ஸ்குவாஷ் உள்ளிட்ட விளையாட்டுகளுக்கான மாநில அளவிலான நேரடி தேர்வுகள் மே 12-ஆம் தேதி காலை 7 மணிக்கு தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெறவுள்ளன.

மேலும், முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட, 6, 7 மற்றும் 8-ஆம் வகுப்பில் சேரவுள்ள மாணவ, மாணவியர்களுக்கான டென்னிஸ், ஜிம்னாஸ்டிக்ஸ், கனோயிங், கையாக்கிங், வில்வித்தை, சைக்கிளிங், இறகுப்பந்து, மேசைப்பந்து உள்ளிட்ட விளையாட்டுகளுக்கான மாநில அளவிலான தேர்வுகள் மே 6-ஆம் தேதி காலை 7 மணிக்கு சென்னை மற்றும் செங்கல்பட்டில் நடைபெறும்.

விண்ணப்பதாரர்கள் ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், விளையாட்டு சான்றிதழ்கள், பள்ளி அடையாள அட்டை அல்லது நன்னடத்தைச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை WWW.SDAT.TN.GOV.IN என்ற இணையதளத்தில் மே 3-ஆம் தேதி மாலை 6 மணிக்குள் பதிவேற்ற வேண்டும். இணையவழி விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும். மேலும் விவரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தை 04324-299826 அல்லது 7401703493 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## வாக்களிக்காத 6 கிராமங்களில் மறுவாக்குப் பதிவு கிடையாது!

**சென்னை, மே 2:**

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 23 அன்று நடைபெற்றது. இதில், புதுக்கோட்டை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. ஆர். பாலகுறிச்சி, சீகம்பட்டி, ரெகுநாத பட்டி, கோபால்பட்டி, வைரவன்பட்டி, விடத்தலான்பட்டி ஆகிய இந்த 6 கிராம மக்களும், தங்கள் ஊர்களை திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இணைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, வாக்களிக்காமல் தேர்தலைப் புறக்கணித்தனர். இந்நிலையில், இந்த 6 கிராமங்களுக்கும் மறுவாக்குப் பதிவு நடத்தக் கோரி, லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வியாழனன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில், தேர்தல் முடிந்த பின் எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும் என கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி அமர்வு, மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 83.89 சதவிகிதம் வாக்குப் பதிவாகியுள்ளன. இது கடந்த தேர்தலைவிட 6 சதவிகிதம் அதிகமாகும்.

## 6 மாவட்டத்திற்கு கனமழை எச்சரிக்கை!

**சென்னை, மே 2:**

வட உள்கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை சுமார் 0.9 கிலோமீட்டர் உயரத்தில் வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால் மழை ஏற்படும் என்று வானிலை மையம் விளக்கியுள்ளது.

மே 2 அன்று நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய 8 மாவட்டங்களிலும் கனமழை பெய்யக்கூடும். மே 3 மற்றும் 4 தேதி களில் தமிழகத்தில் சில இடங்களில் லேசான முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

## குழந்தைகளை தூண்டிவிட்ட குற்றச்சாட்டு: விஜய் மீது நடவடிக்கை எடுக்க டிஜிபிக்கு பரிந்துரை

**சென்னை, மே 2:**

தவெக தலைவர் விஜய் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காவல்துறை இயக்குநர் மற்றும் தேர்தல் ஆணையத்துக்கு தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. தேர்தல் பிரச்சாரத்தின்போது மேடையில் பேசிய விஜய், பெற்றோர்களை தவெக-விற்கு வாக்களிக்கச் சொல்லி குழந்தைகள் அடம்பிடிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்தப் பேச்சுக்கு பல்வேறு தரப்புகளிலிருந்தும் புகார்கள் எழுந்தன. அரசியல் நோக்கங்களுக்காக குழந்தைகளை தூண்டிவிடுவது சட்டவிரோதமானது என்றும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வலுத்தன. குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், விஜய் சிறார் நீதிச் சட்டம் 2015-இன் பிரிவுகளான 75 மற்றும் 83-ஐ விஜய் மீறியுள்ளார் என்றும், தேர்தல் விதிமுறைகளை மீறியதற்காக அவரிடம் முறையான விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. மேலும் விஜய்யின் பேச்சுகள் சமூக வலைதளங்களிலும் யூட்யூபிலும் பரவி வருவதால் அவற்றை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் காவல்துறை இயக்குநரகத்துக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வெளிநாடு தப்ப முயன்ற அஸ்வத்தாமன் கைது! விமான நிலையத்தில் சுற்றிவளைப்பு



**சென்னை, மே 2:**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 20-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளி வந்தஅஸ்வத்தாமன் என்பவர், வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்தார். அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயல்வதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அவரது நடவடிக்கை களை ரகசியமாக கண்காணித்து வந்த தனிப்படை போலீசார், பாங்காக் செல்வதற்காக, அஸ்வத்தாமன் விமானத்தில் ஏற முயன்றபோது, அவரை பெங்களூரு விமான நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

## மூலப்பொருட்கள் விலை உயர்வு: உள்நாட்டு ஆடை உற்பத்தி 40 சதவீதம் குறைவு



**திருப்பூர், மே 2:**

திருப்பூரில் வெளிநாட்டு ஆடை வர்த்தகத்துக்கு இணையாக உள்நாட்டு ஆடை வர்த்தகம் முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கிருந்து கேரளம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஆடைகள் அதிகம் அனுப்பி வைக்கப்படுகிறது. திருப்பூரில் உள்நாட்டு ஆடை தயாரிப்பில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனியன் நிறுவனங்கள் உள்ளன.

கோடை காலத்துக்கான ஆடை தயாரிப்பு ஆர்டர்கள் பெறப்பட்டு ஆடைகள் அனுப்பி வைத்துள்ளனர். கோடை விடுமுறைக்கு பிறகு பள்ளிகள் திறப்பை முன்னிட்டு மாணவிகளுக்கான உள்ளாடைகள், சிம்மிஸ், சார்ட்ஸ், மாணவர்களுக்கான உள்ளாடைகள் தயாரிப்பு ஆர்டர்கள் வரத்தொடங்கியுள்ளன. ஆனால் தற்போது நூல் விலை உயர்வு காரணமாகவும், ஆட்கள் பற்றாக்குறை காரணமாகவும் ஆர்டர்களை எடுக்க தயங்கி வருகிறார்கள்.

கடந்த 3 மாதங்களில் நூல் விலை கிலோவுக்கு ரூ.24 வரை உயர்ந்துவிட்டது. வெளிநாடுகளில் போர் சூழல் காரணமாக மூலப்பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் நீடிக்கிறது. இதன் காரணமாக ஆடை தயாரிப்பு செலவு 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்து ள்ளனர்.

ஏற்கனவே தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் (சைமா) சார்பில் ஆடைகளின் விலையை 7 சதவீதம் உயர்த்துவது என சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த விலை ஏற்றம் கட்டுப்படியாகவில்லை என்றாலும், வேறு வழியின்றி ஆடை தயாரிப்பை தொடர்வதாக உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து சைமா சங்க துணைத்தலைவர் பாலசந்தர் கூறும் போது, 'மூலப்பொருட்கள் விலை உயர்ந்து விட்டதால் ஆடை களின் உற்பத்தி விலை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. தேர்தல் காரணமாக வெளிமாநில, வெளிமாவட்ட தொழிலாளர்கள் சொந்த ஊர் சென்றுள்ளனர். ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

# மதுரை ரவுடி கொலை வழக்கில் கஞ்சா வியாபாரிகள் 3 பேர் கைது

**விருதுநகர், மே 2:**

சேர்ந்த பிரபல ரவுடி கொலை செய்யப்பட்ட வழக்கில், விருதுநரைச் சேர்ந்த கஞ்சா வியாபாரிகள் 3 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் ஒருவரைத் தேடி வருகின்றனர். மதுரை மாவட்டம், பெருங்குடி பகுதியைச் சேர்ந்தவர் முத்துராமன் (55). பிரபல ரவுடியான இவர், கஞ்சா வியாபாரம் செய்து வந்தார். இவர், மதுரை சிறையில் இருந்த போது, விருதுநகரை சேர்ந்த கஞ்சா வியாபாரிகள் சிலரு டன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் 13 அன்று ரவுடி முத்து ராமன் காரில் விருதுநகர் வந்துள்ளார். பின்பு, நண்பர் களான விருதுநகரைச் சேர்ந்த கஞ்சா வியாபாரிகளை சந்தித்துள்ளார். இதையடுத்து, மீசலூர் காட்டுப் பகுதிக்கு முத்து ராமனை அழைத்துச் சென்ற விருதுநகர் கஞ்சா வியாபாரி கள் 4 பேர் கொண்ட கும்பல், அவரை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். மேலும் அவரது கார், 2 கிலோ கஞ்சா ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தப்பிவிட்டனர். ரவுடி முத்துராமன் கொலை தொடர்பாக, சூலக்கரை காவல்நிலைய போலீசார் மற்றும் தனிப்படையினர் விசா ரணை நடத்திவந்தனர். இந்நிலையில், விருதுநகர் பட்டு தெருவைச் சேர்ந்த ஜெகன் (32), யானை குழாய் பகுதி யைச் சேர்ந்த யுகசுதன் (25), பாத்திமா நகரைச் சேர்ந்த ஜெயசூர்யா (24) ஆகியோரை சூலக்கரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் ஒருவரை போலீசார் தேடி வருகின்றனர்.

## இராஜபாளையத்தில் மணல் திருட்டு

**இராஜபாளையம், மே 2:**

இராஜபாளையம் வடக்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் முருகன் தலைமையில் அய்யனார் கோவில் சாலையில் ரோந்து சென்றனர். அப்போது எஸ்.வளைவு அருகே சென்றபோது மேற்கிலிருந்து கிழக்காக டிராக்டர் வந்துள்ளது. காவல்துறை யினரை கண்டதும் நடுவழியில் டிராக்டரை நிறுத்திவிட்டு அதில் வந்தவர்கள் தப்பி ஓடிவிட்டனர். டிராக்டரை பரிசோதனை செய்ததில் சுமார் ரூ.10,000 மதிப்புள்ள மணல் அய்யனார் கோவில் ஆற்றில் அனுமதியின்றி எடுத்து வந் தது தெரியவந்தது. இதையடுத்து மணலுடன் டிராக்டரை கைப்பற்றப்பட்டது. தப்பியோடியவர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

## சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் வைத்திருந்தவர் மீது வழக்கு

**திருவில்லிபுத்தூர், மே 2:**

சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்ப னைக்கு வைத்திருந்தவர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கிருஷ்ணன் கோவில் காவல்நிலையம் எல்லைக்கு உட்பட்ட அருணாச்சலா லாட்ஜ் அருகே சார்பு ஆய்வா ளர் கவுதம் விஜய் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, நாச்சியார்புரம் பகுதியைச் சேர்ந்த பாலகுமார் என்பவர் அரசு அனுமதி இன்றி டாஸ்மாக் லேபிள் ஒட்டப்பட்ட 26 மதுபாட்டில்களை விற்பனைக்கு வைத்தி ருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பாலகுமார் மீது வழக்குப்பதிவு செய்யப் பட்டது.

# சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சேனைமுதன்மையார் புறப்பாடு

**சென்னை, மே 2 :**



திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு நேற்று சேனைமுதன்மையார் புறப்பாடு நடந்தது.

சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில், ஆண்டுதோறும் சித்திரை மாத பிரம்மோற்சவ விழா கொண்டாடப்படுவது வழக்கம்.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழா இன்று (1-ம் தேதி) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இவ்விழாவுக்கு முன்னோட்டமாக, நேற்றுமுன்தினம் இரவு புஷ்பப் பல்லக்கு சேவை நடைபெற்றது. பல்லக்கில் பெருமாள் எழுந்தருளி வீதி உலா வந்தபோது, திரளான பக்தர்கள் தரிசித்தனர்.

அதனைத் தொடர்ந்து, நேற்று விழாவுக்கான அங்குரார்ப்பணம் எனும் முளையிடுதல் நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து, பிரம்மோற்சவ விழா எவ்வித இடையூறுமின்றி செம்மையாக நடைபெற வேண்டி, சேனாதிகாரியான விஷ்வக்சேனர் நேற்று மாட வீதிகளில் உலா வந்து முன்னேற்பாடுகளைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து இன்று காலை கொடியேற்ற நிகழ்வுடன் விழா முறைப்படி தொடங்குகிறது. இன்றிலிருந்து 10 நாட்களுக்கு, தினமும் காலை, இரவு வேளைகளில் வெவ்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் 7-ம் தேதியும், 8-ம் தேதி பல்லக்கில் வெண்ணெய் தாழி கண்ணன் திருக்கோலத்தில் சுவாமி புறப்பாடும், 9-ம் தேதி இரவு கொடியிறக்க நிகழ்வும் நடைபெறும். 10-ம் தேதி இரவு 10 மணிக்கு சிறிய திருத்தேர் நிகழ்வுடன் விழா நிறைவடைகிறது.

# பத்மாவதி தாயார் கோயில் வசந்தோற்சவம் தொடக்கம்

**திருப்பதி, மே 2:**



திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் வருடாந்திர வசந்தோற்சவம் வைகானச ஆகம விதிகளின்படி நடைபெறுவது வழக்கம். இவ்விழா நேற்று வெகு சிறப்பாக தொடங்கியது.

கோயிலில் நேற்று காலை சுப்ரபாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் பின்னர், மதியம் 2 மணியளவில் உற்சவ மூர்த்தி ஊர்வலமாக வெள்ளிக்கிழமை தோட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் தாயாருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடந்தன.

இரவு 4 மாட வீதிகளில் தாயார் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இரண்டாவது நாளான இன்று காலை வசந்தோற்சவத்தைமுன்னிட்டு பத்மாவதி தாயார் காலை 9.30 மணியளவில் 4 மாட வீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

வெள்ளிக்கிழமை தோட்டம் முழுவதும் சுமார் 15 வகை மலர்களால் 500 கிலோ பூக்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது பக்தர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது.

# கும்பகோணம் சாரங்கபாணி மற்றும் சுந்தரேஸ்வரர் கோயிலில் சித்திரை பெருவிழா தேரோட்டம்

**கும்பகோணம், மே 2:**



கும்பகோணம் சாரங்கபாணி கோயில் மற்றும் சுந்தரேஸ்வரர் கோயிலில் சித்திரை பெருவிழாவையொட்டி திருத்தேரோட்டம் ஏப்.30-ம் தேதி நடைபெற்றது.

ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் இந்த விழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். தமிழகத்திலேயே 3-வது பெரிய தேராக, உயரமான தேராக கருதப்படும் இந்த தேரின் தேரோட்டம் நடைபெற்றது.

பிரதான விழாவான ஏப்.30-ம் தேதி அதிகாலை 5.15 மணிக்கு மேல் 6.15 மணிக்குள் பெருமாள் தாயாருடன் திருத்தேரில் எழுந்தருளலும், காலை 8.45 மணிக்கு மேல் 9.15 மணிக்குள் திருத்தேரோட்டம் நடைபெற்றது..

தேரில் உபயநாச்சியார்கள் உடனாய சாரங்கபாணி சுவாமி சிறப்பலங்காரத்தில் காட்சியளித்தனர்.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாரங்கா சாரங்கா என முழக்கமிட்டபடி தேரின் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர். தொடர்ந்து இரவு 7 மணிக்கு தீர்த்தவாரி நடைபெற்றது.

வரும் மே 9-ம் தேதி ஸப்தாவர்ணம், காலை 11 மணிக்கு 81 கலச ஸ்நபன திருமஞ்சனம், 19-ம் தேதி இரவு 8 மணிக்கு நூதன அன்னபட்சி கண்ணாடி பல்லக்கில் சாரங்கபாணி, சக்கரபாணி, சக்கரவர்த்தி திருமகன் ஆகிய 3 பெருமாள் வீதியுலா புறப்பாடு நடைபெறுகிறது.






## நலம் தரும் மருத்துவம்

# கோடையை சமாளிக்க உதவும் எட்டுவித வீட்டு பானங்கள்!

கோடைக்காலம் வந்துவிட்டாலே, 'உஸ்... அப்பா... என்னா வெயிலு' என்று பலரும் புலம்பித்தள்ள ஆரம்பித்து விடுவார்கள். புலம்புவதை விட்டுட்டு, உடலுக்குக் குளிர்ச்சி தரும் எட்டு வித பானங்களை அவ்வப்போது அருந்தி, உடல் உஷ்ணத்தைக் குறைக்கலாமே. அந்த எட்டுவித ஹோம்மேட் குளிர் பானங்கள் குறித்து இந்தப் பதிவில் பார்ப்போம்.

*பிரசித்திபெற்றதும் புத்துணர்ச்சி அளிக்கக்கூடியதுமான லெமன் வாட்டர் தயாரிப்பது மிகவும் எளிது. ஒரு டம்ளர் தண்ணீரில் லெமன் ஜூஸைப் பிழிந்து சிட்டிகை அளவு உப்பும், சர்க்கரையும் சேர்க்க லெமன் வாட்டர் தயார். உடலுக்குத் தேவையான வைட்டமின் C மற்றும் நீரேற்றம் தரக்கூடியது இந்த ஜூஸ்.

* ஜீரணத்துக்கு உதவக்கூடிய புரோபயோட்டிக் சத்துக்கள் நிறைந்தது பட்டர் மில்க். யோகர்டில் தண்ணீர் கலந்து வறுத்த ஜீரகப் பவுடர் மற்றும் உப்பு சேர்க்க குளிர்ச்சியான பட்டர் மில்க் ரெடி.

* சூழ்நிலை உஷ்ணத்தால் உடல் நீரிழப்பை எதிர்கொள்ளும்போது உயிர் காக்கும் தோழனாய் முன் நிற்பது இளநீர். இதிலுள்ள இயற்கையான சர்க்கரை, மக்னீசியம், சோடியம் மற்றும் பொட்டாசியமானது உடனடி சக்தியளித்து நீர்ச்சத்தை சமநிலைப்படுத்துகிறது.

* தண்ணீரில் இஞ்சிச் சாறு, ஜீரகம், புதினா இலை, கொத்தமல்லித் தழை உப்பு சேர்த்து தயாரிக்கப்படுவது, 'ஜல்ஜீரா' எனப்படும் பானம். இது உடலுக்குக் குளிர்ச்சியையும் புத்துணர்வையும் தருவதோடு, செரிமானத்தையும் மேம்படுத்துகிறது.

* வாட்டர் மெலன் துண்டுகளில் உப்பும் ஐஸ் வாட்டரும் சேர்த்து ஜூஸாக்கி அருந்த உடலுக்கு உடனடி குளிர்ச்சி கிடைப்பதுடன், உடலும் மனதும் ரிலாக்ஸ் ஆகும்.

* ஒவ்வொரு இந்தியனுக்கும் விருப்பமானது வெப்ப மண்டலத் தாவரமான கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் கரும்பு ஜூஸ். கரும்பு ஜூஸுடன் லெமன் ஜூஸ், இஞ்சிச் சாறு, புதினா மற்றும் பல்வேறு ஸ்பைசஸ் சேர்த்து தயாரிக்கப்படுவது இது. இதிலுள்ள ருசியும் ஆரோக்கியமும் புத்துணச்சி தரும்; நீரிழப்பைத் தடுக்கும்.

* வெள்ளரித் துண்டுகளுடன் உப்பும் நீரும் சேர்த்தரைத்து தயாரிக்கப்படுவது வெள்ளரி ஜூஸ். இது உடலுக்குக் குளிர்ச்சியையும் நீர்ச்சத்தும் தரக்கூடியது.

*மங்குஸ்தான் பழத்துடன் வெல்லமும் ஐஸ் வாட்டரும் சேர்த்தரைத்து தயாரிக்கப்படுவது கோகம் (KOKUM) ஜூஸ். இது தாகத்தைத் தணிக்கவும் நீரிழப்பைத் தடுக்கவும் உதவும். இதிலுள்ள நார்ச்சத்து சீரான செரிமானம் தந்து எடை இழப்பிற்கு உதவுகிறது.

கொளுத்தும் கோடை வெயிலை எளிய இயற்கை முறைகளில் வெல்வோம்!

# பூமியை 1.5 அடி உயரத்துக்கு மூடும் அளவுக்கு தங்கம்... எங்கே தெரியுமா?

தங்கம் என்ற வார்த்தையை கேட்டதுமே அனைவரின் கண்களும் ஒரு நிமிடம் பளபளக்கும். ஆபரணங்கள் மீதும் முதலீடுகள் மீதும் நமக்கு இருக்கும் ஆர்வம் அளப்பரியது. ஆனால் நாம் இவ்வளவு நாட்களாக பயன்படுத்திக் கொண்டிருக்கும் தங்கம் பற்றிய ஒரு மிகப்பெரிய ரகசியத்தை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் வெளியிட்டுள்ளார்கள். நமது கற்பனைக்கு கூட எட்டாத அளவுக்கு ஒரு பிரம்மாண்டமான தங்கப் புதையல் நமது பூமிக்குள்ளேயே பாதுகாப்பாக ஒளிந்திருக்கிறது.

பூமியின் மையத்தில் பொக்கிஷம்!

நாம் இன்று கழுத்திலும் கைகளிலும் அணிந்திருக்கும் தங்கம் மொத்த தங்கத்தில் வெறும் 1 சதவீதம் மட்டுமே என்பது ஆச்சரியமான ஒரு உண்மை. மீதமுள்ள 99 சதவீத தங்கம் நமது பூமியின் மையப்பகுதியில் மிக ஆழமாக புதைந்து கிடக்கிறது.

அங்கே இருக்கும் மொத்த தங்கத்தையும் எப்படியாவது வெளியே கொண்டு வந்துவிட்டால் ஒட்டுமொத்த உலகத்தையும் சுமார் ஒன்றரை அடி உயரத்திற்கு ஒரு தங்கப் போர்வையால் மூடிவிட முடியும் என்று விஞ்ஞானிகள் அடித்துச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு மாபெரும் தங்க இருப்பு நமது காலடியில் பல ஆயிரம் கிலோமீட்டர் ஆழத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது.

தங்கம் எப்படி இவ்வளவு ஆழத்திற்கு சென்றது?

பூமி உருவான ஆரம்ப காலகட்டத்தில் அது ஒரு நெருப்பு குழம்பாகத்தான் இருந்தது. அப்போது இரும்பு மற்றும் தங்கம் போன்ற அதிக எடை கொண்ட தனிமங்கள் எல்லாம் ஈர்ப்பு விசை காரணமாக பூமியின் அடிப்பகுதியை நோக்கி வேகமாக இழுக்கப்பட்டன. நாளடைவில் பூமி குளிர்ந்த போது அந்த கனமான தனிமங்கள் அனைத்தும் பூமியின் மையத்திலேயே நிரந்தரமாக தங்கிவிட்டன.



இதனால் பூமியின் மேற்புறத்தில் மிக மிகக் குறைந்த அளவிலான தங்கம் மட்டுமே எஞ்சியது.

இதை நினைக்கும் போது இயற்கை எவ்வளவு புத்திசாலித்தனமாக தனது பொக்கிஷங்களை பாதுகாக்கிறது என்பதை நம்மால் எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

பூமியின் மேல் பகுதியில் தங்கம் இல்லை என்றால் நாம் இப்போது வெட்டி எடுக்கும் தங்கம் எங்கிருந்து வந்தது என்பது பலருக்கும் தோன்றும். பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு விண்வெளியில் சுற்றித் திரிந்த ஏராளமான விண்கற்கள் பூமியின் மீது பயங்கரமாக மோதின. அந்த விண்கற்கள் தங்களோடு சுமந்து வந்த தங்கம் தான் இப்போது பூமியின் மேற்பரப்பில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கிறது.

அந்த தங்கத்தை தான் நாம் இப்போது சுரங்கங்கள் அமைத்து ரொம்பவே கஷ்டப்பட்டு வெளியே எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆக மொத்தம் நாம் அணியும் தங்கம் எல்லாமே விண்வெளியில் இருந்து வந்த ஒரு ஏலியன் பொருள் என்று கூட சொல்லலாம்.

மையப்பகுதிக்கு செல்ல முடியுமா?

இவ்வளவு தங்கம் அடியில் இருக்கும் போது அதை ஏன் நாமே சென்று எடுத்து வரக்கூடாது என்று பலரும் யோசிக்கலாம். ஆனால் அது இப்போதைக்கு துளியும் சாத்தியமில்லாத ஒரு காரியம். பூமியின் மையப்பகுதியில் இருக்கும் வெப்பமும் அதீத அழுத்தமும் எந்த ஒரு மனிதனாலோ அல்லது இயந்திரத்தாலோ தாங்க முடியாத அளவுக்கு மிகக் கொடூரமானதாக இருக்கும்.

தற்போதுள்ள எந்த ஒரு அதிநவீன தொழில்நுட்பத்தாலும் அந்த ஆழத்தை எட்டிப் பிடிப்பது நினைத்து கூட பார்க்க முடியாத ஒரு விஷயம்.

தங்கத்தின் மீது மனிதர்களுக்கு இருக்கும் மோகம் பல போர்களுக்கும் பொருளாதார மாற்றங்களுக்கும் காரணமாக அமைந்திருக்கிறது. அப்படி நாம் உயிரைக் கொடுத்து தேடும் ஒரு விலைமதிப்பற்ற பொருள் நமக்கு மிக அருகிலேயே பல ஆயிரம் கிலோமீட்டர் கீழே யாருக்கும் சொந்தமில்லாமல் அமைதியாக உறங்கிக் கிடக்கிறது. என்றாவது ஒரு நாள் மனிதனின் அறிவியல் வளர்ச்சி அந்த தங்கத்தை வெளியே கொண்டு வருமா என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# காலம் காண்பிக்கட்டும்



ஹோம் கார்டாக கோவிலுக்கு போயிருந்த மாடசாமி, கூட்டி வந்த பெண்ணை, பாக்கியம் ஏற இறங்கப் பார்த்தாள். பத்து பன்னிரெண்டு வயதிருக்கும். பொருத்தமில்லாமல் குட்டை பாவாடையும் கிழிசல் பனியனும் போட்டிருந்தாள். "யாருடா " என்று இவள் கேட்க; ஆடி வீதியில் ரெண்டு மூணு நாளாக சுத்திட்டு இருக்குது. ராவுக்கு எங்கே போகும்னு தெரியல்லை. ஏதும் கேட்டா மலங்க மலங்க பார்க்குது. ஒண்ணும் சொல்லமாட்டாம அழுதுட்டு நின்னுச்சு. டேசனுக்குத்தான் கூட்டி போகலாம்னு இருந்தேன். திரும்பி பார்க்க போலிஸ் காரங்க ரெண்டு பேர் இதோட வம்பு இழுத்துட்டு இருந்தாங்க. புள்ள பயந்து," சித்தப்பான்னு கத்திக்கிட்டே அதுவா எங்கிட்ட ஒண்டிக்கிச்சு. பார்க்க பாவமாய் இருந்திச்சு. ஒண்டிக் கட்டை என்னோடு வைச்சு பாக்க ஏலாது. நீங்க வீட்டு வேலைக்கு ஆள கொண்டு விடுன்னு, சொன்னது ஞாபகம் வந்தது. கூட்டியாந்துட்டேன்."
என்றான்.

'உன் பேரன்ன?' என்று கேட்க ' சரசு' என்றாள். சித்தியுடன் அஞ்சு கிராமம் பக்கத்தில் ஒரு ஊரிலிருந்து மதுரை வந்ததாகவும்,' இரு இப்ப வரேன்'னு வன்னி மரத்தடி வினாயகர் கோவிலில் விட்டுவிட்டு போனவள் திரும்பலை." என்று சொல்லி மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

பேச்சில் மலையாள நெடி,இருந்ததால் நாகர்கோவில் பக்கம் என்று புரிந்து கொண்டாள்." மாடசாமி ஊரில் கொண்டு போய் விடலாம். "என்று சொன்னதும், அந்த குழந்தை பெரிய குரலெடுத்து அழுது, " ஊருக்குப் போகலை, சித்தி வையும். அடிக்கும். வீட்டு வேலை எல்லாம் பார்ப்பேன். என்னை இங்கேயே வைச்சுக்கிடுங்க. அஞ்சாப்பு வரை படிச்சிருக்கேன்." என்றாள். யாராவது தேடிவந்தால், என்ன பதில் சொல்வது, என்று கவலை பிடித்துக் கொண்டது. பாக்கியத்துக்கு என்ன செய்வது; என்றே புரியவில்லை. மாடசாமி, " அம்மா! அவங்க வேணுமின்னேதான் இதை கோவிலில் விட்டுவிட்டு போயிருக்காங்க. ஒரு நாதியும் இல்லை. சோறு துணி கொடுத்து வீட்டு வேலைக்கு பழக்கி வைச்சுக்கங்க. ஐயா கிட்டேயும் நான்தான் சொன்னேன்னு சொல்லிடுங்க. அவரு புரிஞ்சுப்பாரு." என்று கிளம்பி விட்டான்.

சின்னப் பெண்ணாய் இருக்கிறாளே; சட்டப்படி இவளை வேலைக்கு அமர்த்த முடியாது. மேலும் ஒரு பெண் பிள்ளையின் பொறுப்பை எப்படி கொண்டு செலுத்துவது?" என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தவளை, அவள் கணவன் சிவராஜ், எழுப்பினான்.

ஹாலில் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்த சரசு பற்றி,பாக்கியம் சொல்ல; சிவராஜ் அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் தகவல் சொல்லி வந்தான்.ஆய்வாளர் உதவியுடன், சரசுவை அரசு பள்ளியில் படிக்க வைக்கும் முடிவெடுத்தனர். " ஏங்க !ஸ்கூலில் ' பர்த் சர்டிஃபிகேட்' கேட்பாங்களே' என்றதும்; " ஆம் விசாரிக்கலாம். என்றபடியே காலண்டரைப் பார்க்க, அது , 1-5-2026 என்று காண்பிக்க; இவள் நம்மிடம் வந்த நாளையே, இவள் பிறந்த நாள் எனக் கொள்ளுவோம்; என்ன; சரசு?" என்று வினவ, அவள் முதல் முறையாக புன்னகைத்து' என் பிறந்த நாள் 1-5- 20016" என்றாள். இப்போதைக்கு இதைச் செய்யலாம். இனிவரும் நாட்களில் என்ன செய்யலாம்; என்பதைக் காலம் காண்பிக்கட்டும்." என்றார் சிவராஜ்; துள்ளித் குதித்தோடும் சரசுவைப் பார்த்தபடி.



**-சசிகலா விஸ்வநாதன்**

# கண்கள் இரண்டானால்



என்ன உமா சொல்ற? என்னால நம்பவே முடியலையே..... குரல் தழுதழுக்க போனில் பதட்டத்தோடு கேட்டாள் வித்யா.

நல்லாத் தான் வித்யா இருந்தாங்க லேசா வயிறு வலிக்குதுன்னாங்க . டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போலாம்னு கிளம்பினோம். அம்மாவ கார்ல உட்கார வச்சுட்டு வாசல் வரைக்கும் வந்த அப்பாவை வீட்டுக்குள்ளே அனுப்பிட்டு வந்து நானும் கார்ல ஏறினேன். அசதில தூங்கறாங்கன்னு நினைச்சேன். ஆஸ்பத்திரி வந்து பார்த்தா அம்மா இறந்துட்டாங்கன்னு சொல்றாங்க. எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல. நீ உடனே புறப்பட்டு வா.

சரி இதோ கார் புக் பண்ணி வரேன். எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியல. எப்படியும் பெங்களூர்லேந்து வர எட்டு மணி நேரம் ஆயிரும். வந்தர்றேன். அங்க நீ கொஞ்சம் பாத்துக்கோ என்றபடியே போனை வைத்தாள் வித்யா.

அப்பாக்கு 90 வயசு. அம்மாக்கு 85 வயசு. ரெண்டு பேரும் கோயம்புத்தூர்ல தனியா இருந்தவங்கள போன வாரம் தான நம்ம போய் பாத்துட்டு வந்தோம். எங்களோட வந்து இருங்கன்னாலும் இருக்கல. அதுக்குள்ள இது எப்படி நடந்தது பலதையும் சிந்தித்தவாறு கண்ணீருடன் கிளம்ப ஆயத்தமானாள் வித்யா.

தனக்குப் பக்கத்துத் தெருவில் இருந்த தம்பிக்குப் போன் செய்தாள். அவனும் அழுதபடியே இதை நம்ப முடியவில்லை என்று புலம்பினான்.

போனை வாங்கிய தம்பி மனைவி, அக்கா! இத என்னாலையும் நம்ப முடியல போன வாரம் நாம போன போது கூட நல்லாத் தானே பேசிட்டு இருந்தாங்க. நமக்கு சமைச்சு கொடுத்தாங்களே! இது எப்படி?

அதான் தெரியல ஜெயந்தி. வயசானாலும் திடீர்னு இப்படி நடக்கும்னு நம்ம எதிர்பார்க்கலையே!

சரிக்கா கிளம்புவதற்கு என்ன செய்யறதுன்னு பார்ப்போம். நம்ம ஜனனிக்கும் இந்த வாரத்துல டெலிவரி ஆயிடும்னு டாக்டர் சொல்லி இருக்கார். நான் அங்க வராம இருக்கவும் முடியாது. இவ கூடயும் ஆளில்லை. அவ மாமியார வேணா துணைக்கு வச்சிட்டு நான் கிளம்புறேன். ஒரு கார் வச்சு நாம எல்லாரும் ஒண்ணா சேர்ந்து போயிருவோம் என்றபடியே போனை வைத்தாள் தம்பி மனைவி.

தம்பி மகள் ஜனனி முதல் பேத்தி என்பதால் அம்மாவுக்குக் கொள்ளைப் பிரியம். ஜானிக்கும் பாட்டி என்றால் அப்படி ஒரு பிரியம். ஜனனி இதை எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறாள் என்று சிந்தித்தபடியே கிளம்ப ஆயத்தமானாள் வித்யா.

பெங்களூரில் இருந்து கோவை வந்த 8 மணி நேரப் பயணமும் அழுகையும் புலம்பலுமாகவே கடந்தது.

மாமியாரின் மரணம் வருத்தம் என்றாலும் பிரசவ நேரத்தில் மகளைத் தனியே விட்டு வந்தது வேதனையைக் கொடுத்தது. இரண்டிற்கும் இடையில் அவதிப்பட்டாள் தம்பி மனைவி.

அப்பா ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார். 60 வருட திருமண வாழ்க்கையின் நிறைவை, அவருடைய தனிமையை அவரால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது எல்லோருக்கும் குழப்பமாக இருந்தது.

ஜனனிக்குப் பெண் குழந்தை பிறந்ததை போனில் சொன்ன மருமகன் மற்றொரு அதிர்ச்சியையும் சொன்னார். குழந்தைக்குக் கண்ணில் ஏதோ குறை உள்ளது. கண் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதாக டாக்டர் சொல்லியதை அழுதபடியே சொன்ன மருமகனுக்கு என்ன ஆறுதல் சொல்வது என்று புரியாமல் வித்யாவிடம் புலம்பினான் தம்பி.

தம்பி! கொஞ்சம் மனசத் தேத்திக்கோ அம்மா இறந்தது நமக்கெல்லாம் வருத்தம்னாலும் அம்மா வாழ்ந்து முடிச்சவ. இப்ப நாம யோசிக்க வேண்டியது குழந்தைக்கு என்ன செய்யறதுன்னு. முதல்ல அதுக்கு என்ன பண்ணனும்னு பாரு. இங்க நாங்க பார்த்துக்கிறோம் என்று ஆறுதல் சொன்னாள் வித்யா.

ஆமா! அங்க டாக்டர் என்ன சொன்னாராம்?

குழந்தைங்கறதனால சீக்கிரமா ஏத்துக்குமாம். பெரிசா பிரச்சனை இல்லையாம். கண்ணுக்கு ஏற்பாடு பண்ணியிருக்காங்களாம். இன்னும் ரெண்டு நாள் ஆகும்னு சொல்றாரு.

எதிர்பார்த்தது நடந்தால் வாழ்க்கையில் என்ன சுவாரசியம் இருந்து விடப் போகிறது. மனதை தேற்றிக்கொண்டு குழந்தைக்கு அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்கள்.

எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்தது என்று போன் வந்ததும் துக்கத்திலும் ஒரு மகிழ்ச்சி பிறந்தது.

உருவாக இருந்த அம்மா சாம்பலாகி ஒரு வாரமாகி விட்டது. கடந்த கால நினைவுகளை அசைபோட்டபடியே ஹாலில் உட்கார்ந்திருந்த வித்யாவிற்கு ஷோகேஸிலிருந்த சர்டிபிகேட்டைப் பார்த்ததும் அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

அம்மா கண் தானம் செய்ததற்கான சர்டிபிகேட் . அம்மா நம்மை விட்டு எங்கும் போகவில்லை. நம்மோடு தான் இருக்கிறாள் என்று எண்ணி கண்களைத் துடைத்துக் கொண்டாள் வித்யா.ஜனனி குழந்தையை எப்பொழுது பார்ப்போம் என்று மனம் ஏங்க ஆரம்பித்தது.



**-தமிழ்நிலா**

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 3



Banumathi Nachiyar

## குறள் 9

வாயுவினா லாய வுடம்பின் பயனே
பாயுவி னெல்லை யது

விளக்கம்

பிராணவாயு விந்தில் கலந்து பாய்ந்த அளவே இவ் உடம்பின் ஆயுளின் அளவாகும் என்பது கருத்து. ஒவ்வொரு தேகத்திற்கும் ஆயுளின் அளவினை விந்துக்களில் கலந்து செல்லும் பிராணவாயுவினால் ஆன அளவே ஆகும் என்பது ஔவையாரின் கருத்தாகும்.

## குறள் 10

ஒன்பது வாசலு மொக்க வடைத்தக்கா
வன்பதி வொன்றா மரன்

விளக்கம்


ஐம்பொறிகளினால் ஏற்படும் ஐம்புலன்களோடு, நவ துவாரங்களையும் ஒருபட அடைத்தக்கால் அன்பில் அரன் கலந்திருப்பவனாய் ஆவான்.

யோகஞ் செய்வோர் நவ துவாரங்களையும் அடைத்தே செய்ய வேண்டியது என்பர். அவர்களுடைய ஆசையில், அன்பில் கலந்திருப்பான் சிவபெருமான் எனவும் கூறுவர்.

அன்பில் சிவன் கலந்திருப்பான் என்பதை அன்பும் சிவமும் ஒன்றே ஆகும் என்பார் திருமூலர்.

அன்பு சிவம் இரண்டென்பர்
அறிவிலார்
அன்பே சிவமாவதாரும்
அறிவிலார்
அன்பே சிவமாவதாரும்
அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே!

(தொடரும்).



# கோவிலில் அகல் தீபம் ஏற்றும் பொழுது பழைய அகல் விளக்கைப் பயன்படுத்தலாமா? கூடாதா?




இறை வழிபாட்டில் மிகவும் முக்கியமானது அகல் தீபம் ஏற்றுவது ஆகும். நீங்கள் மண் அகல் விளக்கு ஒன்றில் ஏற்றும் தீபத்திற்கு பத்து காமாட்சியம்மன் விளக்கு ஏற்றுவதற்கு சமமாகும். அதே போல 100 குத்து விளக்குகளை ஏற்றுவதற்குச் சமமாகும். எனவே அகல் தீபம் ஏற்றுவது என்பது மிகவும் விசேஷமான பலன்களைக் கொடுக்கக் கூடியது. நீங்கள் ஏற்றும் அகல் விளக்கில் ஒற்றைப்படை, இரட்டைப்படை என்ற எண்ணிக்கை எதுவும் கிடையாது. அகல் விளக்கிற்கு மட்டும் இதில் விதிவிலக்கு. எத்தனை தீபங்கள் வேண்டுமானாலும் ஏற்றி வழிபடலாம். குறிப்பிட்ட பரிகாரங்களுக்கு மட்டுமே எண்ணிக்கை உண்டு. ஒரே ஒரு அகல் விளக்கை மட்டும் தீபம் ஏற்றி மூன்று முறை மூலவருக்கு காண்பித்து விட்டு கோவிலில் வைக்கலாம்.

நாம் ஏற்றும் தீபம் திரி மற்றும் எண்ணெயை சார்ந்தது ஆகும். எனவே அதில் மண் அகல் பங்கு கொள்வதில்லை.



அகல் விளக்கு புதிதாக ஒவ்வொரு முறையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த குழப்பம் பலருக்கும் இருக்கும். ஒவ்வொரு முறை கோவிலுக்கு செல்லும் பொழுதும் புது அகல் விளக்கு வாங்கி ஏற்ற வேண்டும் என்கிற அவசியம் எதுவும் இல்லை. நீங்கள் ஏற்றிய பழைய விளக்குகளை கூட சுத்தம் செய்து விட்டு மீண்டும் தீபம் ஏற்றி வழிபடலாம்.

அகல் விளக்கு தீபம் ஏற்றும் பொழுது ஒவ்வொரு திரியைப் போட்டு ஏற்றக்கூடாது. இரட்டைத் திரிகளை ஒன்றாக திரித்து அதில் தான் தீபம் ஏற்ற வேண்டும். அதே போல அடுத்தவர்கள் பயன்படுத்திய அகல் விளக்கை நாம் திரும்பவும் பயன்படுத்தலாமா? ஆம்! தாராளமாக மற்றவர்கள் பயன்படுத்திய அகல் விளக்கை நாம் பயன்படுத்தலாம் ஆனால் அதில் இருக்கும் எண்ணெயை ஒரு காகிதத்தால் துடைத்து விட்டு மீண்டும் புதிதாக எண்ணெய் ஊற்றி திரியிட்டு தீபம் ஏற்ற வேண்டும்.

நீங்கள் ஊற்றும் எண்ணெய் மற்றும் திரி மட்டுமே புதிதாக ஒவ்வொரு முறையும் இருக்க வேண்டும். விளக்கு ஏற்றிய எண்ணெய் மீண்டும் பயன்படுத்தக்கூடாது. அதே போல எரிந்த திரியை மீண்டும் பயன்படுத்தக்கூடாது. ஒவ்வொரு திரி போட்டு ஏற்றும் பொழுது ஒவ்வொரு விதமான பலன்கள் உண்டாகிறது. கோவிலில் ஏற்றப்படும் அகல் விளக்கில் பஞ்சு திரி இட்டு ஏற்றினால் நீங்கள் வேண்டிய வேண்டுதல் உடனே பலிக்கும்.

வாழைத்தண்டு திரி, தாமரைத் தண்டு திரி, சிவப்பு திரி, மஞ்சள் திரி, பச்சை திரி, கருப்பு திரி, நீல திரி என்று விதவிதமான திரி வகைகள் விற்பனைக்கு உள்ளன. இதில் சிகப்பு திரி போட்டு தீபம் ஏற்றினால் கடன் தொல்லை தீரும் என்பது ஐதீகம். அதுபோல நீல திரி போட்டுத் தீபம் ஏற்றினால் சனி தோஷங்கள் விலகும். கருப்பு நிற திரி போட்டுத் தீபம் ஏற்றினால் சகல தோஷங்களும் விலகுவதாக சாஸ்திரங்கள் குறிப்பிடுகிறது. இது போல ஒவ்வொரு திரியும் வெவ்வேறு பலன்களை நமக்கு கொடுக்கும்.

வீட்டில் ஏற்றும் தீபங்களில் இருக்கும் திரிகளை ஒருபொழுதும் குப்பையில் எறியக்கூடாது. அந்த திரிகளை ஒன்றாக சேர்த்து திருஷ்டி கழிக்க பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் சாம்ராணி போட பயன்படுத்தும் தூபக்காலில் இந்த திரிகளைப் போட்டு கொட்டாங்குச்சி உடன் சேர்த்து எரித்து விட வேண்டும். இதனால் கெட்ட அதிர்வலைகள், திருஷ்டி தோஷங்களும் எளிதில் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

தகவல்:
முனைவர்
**இராம.வேதநாயகம்.**

## தினம் ஒரு தலைவர்கள்

# பகத் சிங் வரலாறு


பகத் சிங் மார்ச் 23, 1931 இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரரும் இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க புரட்சியாளரும் ஆவார். இக்காரணத்திற்காக இவர் சாஹீது பகத் சிங் என அழைக்கப்பட்டார். சாஹீது என்றால் மாவீரர் எனப் பொருள்படும். இவரை இந்தியாவின் முதலாவது மார்க்சியவாதி எனவும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடப்படுவதுண்டு.

பகத் சிங் இந்தியாவில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராகப் போராடிய குடும்பமொன்றில் பிறந்தார். இளம் வயதிலேயே ஐரோப்பியப் புரட்சி இயக்கங்களைப் பற்றி படிக்கத் தொடங்கி பொதுவுடமைக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டார். பல புரட்சி இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, விரைவிலேயே இந்துஸ்தான் குடியரசு அமைப்பு என்ற புரட்சி அமைப்பின் தலைவர்களில் ஒருவரானார். 63 நாட்கள் சிறையில் இருந்தபோது ஏனைய பிரித்தானியக் கைதிகளுக்கு இணையாக இந்தியக் கைதிகளுக்கும் சம உரிமை பெறுவதற்காக உண்ணாநோன்பு இருந்ததில் இவரது செல்வாக்கு மக்களிடையே அதிகரித்தது.

பகத் சிங்,முதுபெரும் காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதி ராய் என்பவரின் இறப்புக்குக் காரணமாயிருந்த காவலதிகாரியைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக 24 வயதில் தூக்கிலிடப்பட்டார். இந்நிகழ்வானது மேலும் பல இளைஞர்களை இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவும் சோசலிசக் கொள்கைகள் இந்தியாவில் பரவவும் வழிவகுத்தது.[6] பகத் சிங் தூக்கில் இடுவதுற்கு முன் தன் தந்தைக்கு அவர் ஏன் கடவுள் மறுப்பு கொண்டவராக மாறினார் என்பதைக் கடிதம் மூலம் தெரிவித்தார். அக்கடிதம் பின்னர் WHY I AM AN ATHEIST என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. தமிழில் இந்நூல் நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற பெயரில் ப. ஜீவானந்தம் மொழிபெயர்ப்பில் வெளியானது.

இளமை பகத் சிங் பஞ்சாபில் உள்ள லாயல்பூர் மாவட்டத்தில், பங்கா என்னும் கிராமத்தில் சர்தார் கிசன் சிங், வித்தியாவதி ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவரது பிறந்தநாள் அவர் தந்தை மற்றும் அஜித் சிங், சுவரன் சிங் ஆகிய அவரது இரு மாமன்கள், சிறையிலிருந்து வெளியான நாளாக அமைந்தது. இவர் விடுதலைப்போராட்ட வீரர்களைக் கொண்ட சீக்கியக் குடும்பத்தில் பிறந்ததால் இளம் வயதிலே நாட்டுப்பற்று மிக்கவராக வளர்ந்தார். இவரது குடும்பத்தினர் சிலர் பஞ்சாபின் ரஞ்சித் சிங் மன்னரின் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். இவரது தாத்தா அர்ஜுன் சிங், சுவாமி தயானந்த சரஸ்வதியின் இந்து சீர்திருத்த இயக்கமான ஆர்ய சமாஜைப் பின்பற்றுபவராக இருந்தார். இது இளம் பகத்சிங்கின் மேல் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. பகத்சிங்கின் தந்தை மற்றும் மாமாக்கள், கர்தார் சிங் சரப் மற்றும் ஹர்தயாள் ஆகியோர் வழி நடத்திய கதர் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தனர். அஜித் சிங், தன்மீது பாக்கியிருந்த நீதிமன்ற வழக்குகளின் காரணமாக, பெர்சியாவிற்கு தப்பிச்செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டார். இவரது சிற்றப்பா அஜித் சிங், பஞ்சாப் சிங்கம் என்று அழைக்கப்பட்ட லாலா லஜ்பத் ராயின் அரசியல் வழிகாட்டியாக இருந்தவர்.

பகத்சிங் தன் வயதை ஒத்த பல சீக்கியர்களைப் போல பகத்சிங் கல்சா உயர்நிலைப்பள்ளிக்கு செல்லவில்லை. ஏனென்றால், அப்பள்ளி அலுவலர்கள் ஆங்கிலேயர்கள் மீது காட்டிய விசுவாசம் அவரது தாத்தாவிற்கு பிடிக்கவில்லை. ஆதலால் அவர் ஓர் ஆரிய சமாஜ பள்ளியான தயானந்த் ஆங்கிலோ வேதிக் உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டார்.
1919-இல், பகத்சிங்குக்கு பன்னிரெண்டு வயதாகும்போது, ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்த சில மணி நேரங்களில் அந்த இடத்தைப் பார்வையிட்டார். தனது பதினான்காம் வயதில் 1921ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் தேதியன்று குருத்வாரா நானா சாஹிபில் பல ஆயுதமற்ற மக்கள் கொல்லப்பட்டதை எதிர்க்க போராட்டக்காரர்களை வரவேற்றார். பகத்சிங் இளைய புரட்சி இயக்கத்தில் (YOUNG REVOLUTIONARY MOVEMENT) இணைந்து அகிம்சைக்கு மாறாக தாக்குதல் நடத்தி ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முனைந்தார்.
1923-இல், பகத்சிங் லாகூரில் உள்ள தேசிய கல்லூரியில் சேர்ந்தார். அப்பள்ளியில் நாடகக்குழுவினர் சங்கத்தில் இடம்பெற்றிருந்தார். அதே ஆண்டில், பஞ்சாப் ஹிந்தி சாஹித்ய சம்மேலன் நடத்திய கட்டுரைப் போட்டியில் பஞ்சாப்பின் பிரச்சனைகளைப் பற்றி எழுதி வெற்றி பெற்றார்.
மார்ச் 1926-இல் நவஜவான் பாரத சபாவை (ஹிந்தியில் இந்தியாவின் இளைஞர்கள் சங்கம்) நிறுவினார். ஒரு வருடம் கழித்து அவர் தன் குடும்பத்தினர் தனக்கு திருமணம் செய்து வைப்பதை தவிர்க்க அவர் தன் வீட்டிலிருந்து கான்பூருக்கு சென்றுவிட்டார். அவர் விட்டுச் சென்ற கடிதத்தில், தனது வாழ்க்கை தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக அர்பணிக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கொண்டுள்ளது என்றும் அதனால் தன்னை வேறு எந்த வாழ்வியல் ஆசைகளும் ஈர்க்காது என்றும் குறிப்பிட்டிருந்தார்.
பகத்சிங்கின் தாக்கம் இந்திய இளைஞர்களுக்கு தெம்பேற்றுவதைப் பார்த்து மே 1927-இல் பகத்சிங்கை ஆங்கிலேய அரசு முந்தைய ஆண்டு அக்டோபரில் நடந்த குண்டு வெடிப்பில் அவருக்கு தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சுமத்திக் கைது செய்தது. பிறகு அவர் ஐந்து வாரங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார்.
பகத்சிங் அம்ரித்சரிலிருந்து வெளியான உருது, பஞ்சாபி நாளிதழ்களில் எழுத்துப் பணியும் தொகுப்புப் பணியும் செய்தார். மேலும் அவர் கிர்டி கிசான் கட்சியின் (தொழிலாளர்கள் மற்றும் உழவர்கள் கட்சி) கிர்டி என்னும் பத்திரிக்கைக்கும் பங்களித்தார். செப்டம்பர் 1928-இல் அக்கட்சி அகில இந்திய புரட்சியாளர்கள் சந்திப்பொன்றை நடத்தியது. அதற்கு பகத்சிங்கே செயலராக இருந்தார். பின்பு அச்சங்கத்தின் தலைவரகாவும் உருவெடுத்தார்.



பிந்தைய புரட்சி நடவடிக்கைகள் லாலா லஜபதி ராயின் மரணமும் சாண்டர்சின் கொலையும் 1928-இல், ஆங்கிலேய அரசு இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றி அறிக்கையளிக்க சைமன் ஆணையக்குழுவை நிறுவியது. ஆனால், இக்குழுவில் ஒரு இந்திய உறுப்பினர் கூட இல்லாததால் இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் இதனைப் புறக்கணித்தன. அவ்வாணையம் 30 அக்டோபர் 1928-இல் லாகூர் வந்தபோது அவ்வாணையத்திற்கு எதிராக லாலா லஜபதி ராய் அற வழியில் ஒரு அமைதியான அணிவகுப்பை நடத்திச் சென்றார். ஆனால், காவல் மேலதிகாரி ஜேம்ஸ் ஏ ஸ்காட் காவலர்களைத் தடியடி நடத்த ஆணையிட்டதோடு மட்டுமல்லாமல் தானாகவே லாலா லஜபதி ராயைத் தாக்கினார். இத்தாக்குதலில் லஜபதி ராய் கடுமையாகக் காயமுற்றார். அவர் பின்னர் 17 நவம்பர் 1928-இல் காலமானார். இத்தாக்குதலைப் பற்றி ஆங்கிலேய பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டபோது, ஆங்கிலேய அரசு லஜபதி ராயின் மரணத்தில் எந்த பொறுப்பும் ஏற்கவில்லை. பகத்சிங் இச்சம்பவத்தை நேரில் காணவில்லை என்றாலும் பழி வாங்க உறுதி பூண்டு[20] சக புரட்சியாளர்களான சிவராம் ராஜ்குரு, சுக்தேவ் தபர், சந்திரசேகர் ஆசாத் ஆகியோருடன் ஸ்காட்டைக் கொல்லக் கூட்டு சேர்ந்தார். எனினும், பகத்சிங்கிற்கு தவறுதலாக துணை காவல் மேலதிகாரியான சாண்டர்சைச் சுட சமிக்ஞை காட்டப்பட்டது. அதனால் சிங்கும் ராஜ்குருவும் சாண்டர்ஸ் மாவட்ட காவல் தலைமையகத்திலிருந்து வெளிவரும்பொழுது 17 டிசம்பர் 1928 அன்று அவரைச் சுட்டுக்கொன்றனர்.


மகாத்மா காந்தி இக்கொலைச்சம்பவத்தைக் கண்டனம் செய்தார். ஆனால் நேரு கூறியதாவது,

பகத்சிங் பிரபலமடைந்தது அவரின் பயங்கரவாதச் செயலுக்காக அல்ல, ஆனால் அவர் லாலா லஜுபது ராயின் மரியாதையை, மேலும் அவர் மூலம் நம் நாட்டின் மரியாதையையும் நிலைநிறுத்த முயற்சித்ததற்காகவே. அவர் செயல் மறக்கப்பட்டது, ஆனால் அவர் ஒரு விடுதலை போராட்ட சின்னமாக உருமாறினார். சில மாதங்களிலேயே பஞ்சாபின் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் மற்றும் சற்று சிறிய வீரியத்துடன் பிற வடக்கு இந்தியப் பகுதிகளிலும் அவரது பெயர் எதிரொலித்துக்கொண்டே இருந்தது.

தப்பிச் செல்லுதல்
சான்டர்சை கொலை செய்த பின்பு, டி.ஏ.வி கல்லூரி வழியாக சிங்கும் குழுவினரும் தப்பிச் சென்றனர். தலைமை காவல் அதிகாரி சனன் சிங், அவர்களைத் துரத்திப் பிடிக்க முயற்சி செய்த போது, சந்திரசேகர ஆசாத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சனன் சிங்கைச் சுட்டதில் அவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் காயப்பட்டார்.

பகத்சிங்கின் தூக்குத்தண்டனை
பகத்சிங்கின் தூக்குத்தண்டனையின் போது வெள்ளையர்கள் கேட்ட தூக்குத்தண்டனை அங்கீகரிக்கும் பத்திரத்தில் காந்தி கையொப்பம் இட்டார். தி லெஜன்ட் ஆஃப் பகத்சிங் என்ற இந்தி திரைப்படத்தில் இந்தத் தண்டனைக்கான ஒப்பீட்டு பத்திரத்தில் (காந்தி இர்வின் பேக்ட்) கையெழுத்திட்டதற்காக காந்தியை மக்கள் கடுமையாக விமர்சிப்பது போல் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. அகிம்சையைப் பின்பற்றுபவர் எப்படி இம்சை தரும் தூக்குத்தண்டனைக்கு ஒப்பீடு அளிக்கலாம் என்பது போல கருத்துகள் மக்களால் பேசப்பட்டது.

# ராம் சரணின் ‘பெத்தி’ ரிலீஸ் தேதி அறிவிப்பு!



புச்சி பாபு இயக்கத்தில் ராம் சரண் நடிப்பில் உருவாகி உள்ளப் படம் பெத்தி. ராம் சரணுக்கு ஜோடியாக இப்படத்தில் ஜான்வி கபூர் நடித்துள்ளார். இப்படத்தில் பூஜா ஹெக்டே, மிருணாள் தாகூர் மற்றும் ஆயிஷா கான் ஆகியோர் ஒரு சிறப்பு பாடலில் தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஏ.ஆர்.ரஹ்மான் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். இப்படத்தின் முதல் பாடலான சிக்கிரி வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் இப்படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஜூன் 4ஆம் தேதி இப்படம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே இரண்டுமுறை அறிவிக்கப்பட்டு, ரிலீஸ் தேதி ஒத்திவைக்கப்பட்டு குறிப்பிடத்தக்கது.

இந்திய அளவில் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் பூஜா ஹெக்டே. இவர் நடிப்பில் அடுத்ததாக ஜனநாயகன், Hai Jawani Toh Ishq Hona Ha, காஞ்சனா 4 ஆகிய திரைப்படங்கள் வெளிவரவுள்ளன.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை பூஜா ஹெக்டே, தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது Hai Jawani Toh Ishq Hona Ha படத்தின் புரொமோஷனில் பங்கேற்றபோது அணிந்திருந்த ஆடையுடன் எடுத்துக்கொண்ட கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

பூஜா ஹெக்டே வெளியிட்டுள்ள இந்த போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.



# ‘பத்திக்கிச்சு ஒரு ராட்சச திரி’




நடிகர் அஜித்குமாரின் கார்ப்பந்தயப் பயணத்தை அடிப்படையாக கொண்டு உருவாகும் ஆவணப்படத்திற்கு ’கிளாடியேட்டர்ஸ்’ (Gladiators) என்று பெயரிடப்பட்டுள்ளது. அஜித்தின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் பயணம், அதில் அவர் சந்தித்த சவால்கள் மற்றும் கார் பந்தய மைதானத்தில் அவர் காட்டும் ஈடுபாடு ஆகியவற்றை இந்தப் படம் காட்சிப்படுத்துகிறது.

இப்படத்தை ஏ.எல். விஜய் இயக்க, ஜி.வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இந்நிலையில் நடிகர் அஜித்தின் 55வது பிறந்தநாளை ஒட்டி இன்று இப்படத்தின் அறிமுக வீடியோ வெளியாகியுள்ளது. இப்படம் தியேட்டர்களில் அல்லாமல் ஓடிடியில் வெளியாகும் எனக் கூறப்படுகிறது.
நடிகர் அஜித்குமார் இன்று தனது 55வது பிறந்தநாளை கொண்டாடிவரும் நிலையில், அவருக்கு ரசிகர்கள், திரைப்பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

# ‘பரிமளா அண்ட் கோ’!




இயக்குநர் பாண்டிராஜ் இயக்கவுள்ள புதிய படத்திற்கு பரிமளா அண்ட் கோ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் நடிகர்கள் ஜெயராம், ஊர்வசி, சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, யோகிபாபு, இயக்குநர் மிஷ்கின், சாண்டி, சிங்கம்புலி ஆகியோர் நடிக்கின்றனர். லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில், சுபாஸ்கரன் ஜி.கே.தமிழ்க்குமரன் ஆகியோர் படத்தை தயாரிக்கின்றனர்.

தலைப்பு டீசரை பார்க்கும்போது ஒரு குடும்பம் செய்யும் கொலையை மையமாக கொண்டு கதை நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாண்டிராஜ் இயக்கத்தில் கடைசியாக வெளிவந்தப் படம் தலைவன் தலைவி. விஜய் சேதுபதி, நித்யா மேனன் நடித்திருந்த இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றிருந்தது.

# ‘சட்டென்று மாறுது வானிலை’ டிரெய்லர் வெளியீடு!



பாபு விஜய் எழுத்து, இயக்கத்தில் ஜெய் மற்றும் மீனாட்சி கோவிந்தராஜன் நடிப்பில் உருவாகி உள்ள காதல் மற்றும் சஸ்பென்ஸ் கலந்த திரைப்படம் ‘சட்டென்று மாறுது வானிலை’.

இப்படத்தில் யோகி பாபு, கருடா ராம் மற்றும் ஸ்ரீமன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு க்ரிஷ் கோபாலகிருஷ்ணன் இசையமைத்துள்ளார்.

மே.15ஆம் தேதி இப்படம் வெளியாக உள்ளது. இந்நிலையில் இன்று இப்படத்தின் டிரெய்லரை இயக்குநர் முருகதாஸ் வெளியிட்டுள்ளார்.



நடிகை ராசி கண்ணா தற்போது Lukkhe என்ற வெப் சீரிஸில் நடித்து இருக்கிறார். அதன் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது.

அதற்கு பச்சை நிறத்தில் ட்ரெண்டியான ஹாட் உடையில் அவர் வந்திருந்தார். அந்த உடையில் அவர் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க. இந்த புதிய வெப் சீரிஸ் வரும் மே 8ம் தேதி அமேசான் ப்ரைம் தளத்தில் வெளிவர இருக்கிறது.

# OTT- யில் வெளியாகும் Lik...




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் ’LIK’ (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி). இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர்.

நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்ற நிலையில் கடந்த மாதம் 10-ந்தேதி திரையரங்கில் வெளியானது. படம் திரையரங்கில் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்ற நிலையில் வசூலையும் குவித்தது.


இந்த நிலையில், ’LIK’ படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாவது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ’LIK’ படம் வருகிற 6-ந்தேதி பிரபல ஓ.டி.டி. தளமான அமேசான் பிரைம் வீடியோவில் கண்டு களிக்கலாம்.

























## ATTENTION

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.





# புதுக் கவிதை பகுதிகள்



### நைதல் அகற்றிடு.!

நைந்து விடாதே..
பயந்து விடாதே..
நடப்பது நடக்கட்டுமே.!
ஓய்ந்து விடாதே..
ஒளிந்து கொள்ளாதே..
உன்மனம் ஒளிரட்டுமே.!

சாய்ந்தால் என்ன?
மரங்களும் கூட..
விறகாய் மாறிவிடும்.!
தேய்ந்தால் என்ன?
நிலவினைப் பாராய்
முழுமதி நாளைவரும்!
வீழ்ந்தால் என்ன?
விதைகளைப் பாரு..
விருட்சகம் எழுந்துவரும்!
வாழ்ந்தேக் காட்டு..
நைதலை அகற்று.. உலகம்
உன் கரத்தில் வரும்!

படுத்தேக் கிடந்தால்..
படுத்த இடத்தில் புற்கள்
முளைத்துவிடும்!
பாய்ந்து எழுந்தால்..
பாதை தெரிந்தே
கதவினைத் திறந்துவிடும்.!
உழைத்தால் போதும்..



உள்ளம்
சோராமல்..
உனக்கொரு
நாளும்வரும்.!
உன்னை
அறிந்தே..
பயம்தனை
தூக்கி ..
வீசுக.! வெற்றி வரும்.!

**வே.கல்யாண்குமார்.**



1. பைக் பெட்ரோலில் ஓடுது
கார் டீசலில் ஓடுது
டிவி கரண்டில் ஓடுது
நம்ம வாழ்க்கை மட்டும்
கடனில் ஓடுது

2. வெயிலில் சென்று
உழைப்பவர்களுக்கு தான்
தெரியும் ஒரு ரூபாயின்
அருமை என்னவென்று

3. வருந்தி அழும்போது
வராத தெய்வமும்
தேம்பி அழும்போது வராத
அன்பும் கல்லுக்கு சமம்

4 மனிதன் மிகவும்
சுயநலமானவன்
நேசித்தால் பிழைகளைப்
பார்க்க மாட்டான்
வெறுத்தால் நல்லதை பார்க்க
மாட்டான்

5. நீ செய்யும் தவறுக்கு
எதிர்பாராத நேரத்தில்



தண்டனையும்
நீ செய்யும்
நன்மைக்கு
தக்க
சமயத்தில்
உதவியும்
கிடைக்கும்

**நடேஷ் கன்னா**
**கல்லிடைக்குறிச்சி**



### புரியாத புதிர்

தலைவர்கள் கலைஞர்கள்
இலக்கியங்கள்
புதைப்பொருட்கள்
இவற்றைப்பற்றியெல்லாம்
ஆய்வுகள் நடக்கும்
அறிக்கைகளும் கிடைக்கும்
ஏழை எங்கள் வாழ்வு மட்டும்



எப்போதும்
புரியாத
புதிராகவே
இருக்கும்,

**நாகை**
**ஆசைத்தம்பி**
**கோவை**



### புதிய அனுபவம்

எண்ணிலடங்காத்
திருவிழாக்கள்
அத்தனையும்
நினைவலைகள்.

புத்தகத் திருவிழாவோ
புதுவித அனுபவங்களையும்,
அழகான அழகியலையும்,
அறிவான
படைப்பாற்றலையும்
விளக்கிய படையெடுப்பு.

புதுவித வியூகங்களை
வகுத்ததோடு நிற்காமல்,



நிகழ்கால
நிதர்சனங்
களையும்,
விளக்கமாக
கண்முன்னே
மனத்திற்குள்
நிறுத்தி
விட்டதே.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா செஞ்சிக்கோட்டை**

### திசையெட்டும் போற்றிடத் தேர்!

நேரிசை வெண்பா!

எல்லோர்க்கும் எல்லாமும்
எப்போதும் கிட்டிடவே
நல்ல வினைகளை
நாளுமே.. வல்ல
இசையோடு செய்திட்டால்
எந்நாளும் வாழ்வில்
திசையெட்டும்
போற்றிடத்தேர்!

குறிப்பறிந்து நாளுமே
கூர்மையாய் நன்கு
திறமையுடன்
காணவேண்டும் தேர்ந்து..
சிறப்பை அசைபோட்டே
அன்றாடம் அன்பாகக்
கண்டே திசையெட்டும்
போற்றிடத்தேர்!



### தொழிலாளரைப் போற்றுவோம்!

(மே நாள் வாழ்த்து)
நிலைமண்டில ஆசிரியப்பா!

உடலா லுழைப்பு
அறிவா லுழைப்பு
திடமாய்க் கண்டால்
தேர்ந்தே வாழலாம்!

கடமை செய்தால்
கண்ணிய மாக
உரிமை வேண்டி
உன்னத மாகலாம்!

மேன்மை யானநாள்
மேநாள் அன்றோ
பான்மை யானநாள்
பாங்கான நாளே!

தொழிலைப் போற்றும்
தேர்ந்த நாளே
அழகு மேநாள்
அறிவோம் நாமே!

உழைப்பின் மதிப்புத்
தழைக்க வேண்டின்
அழகாய் நாளும்
அன்பா யுழைப்போம்!

அனைத்துத் தொழிலையும்
அழகாய்ச் செய்யும்
மணக்கும் தொழிலா
ளர்களை வாழ்த்து!

எல்லாத் தொழிலும்
இங்குச் சமமே
வல்ல முறையில்
வாழ்த்துவோம் நாமே!



### குழந்தைப் பாடல்!

### பாப்பா!

அறத்தைப் புரிந்திடு பாப்பா
ஆசை துறந்திடு பாப்பா
இன்சொல் பேசிடு பாப்பா
ஈகை தெரிந்திடு பாப்பா

உண்மை பேசிடு பாப்பா
ஊக்கம் பெற்றிடு பாப்பா
எறும்பாய் உழைத்திடு பாப்பா
ஏற்றம் கொண்டிடு பாப்பா

ஐயம் போக்கிடு பாப்பா
ஒற்றுமை பெற்றிடு பாப்பா
ஓதுதல் செய்திடு பாப்பா
ஔவியம் போக்கிடு பாப்பா

அஃதே வழிதான் பாப்பா!

### நாற்று!

குறள்வெண் செந்துறை.

இளமைச் செடியைக்
குறித்திடுமே இனிமை நாற்றே
என்றிடுவோம் வளர்த்து
விட்டால் வளமாகும்
வண்ணக் கூலம் நலமாகும்!

தோட்டக் கலையில்



பார்த்திடலாம் தோட்டம்
முழுதும் சேர்ந்திருக்கும்
ஈட்டும் செல்வம்
இவைமூலம் என்றும்
கண்டு மகிழ்ந்திடலாம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

### உழைப்பவர் என்றும் உயர்திடுவார்...



உழவும் தொழிலும் செழிக்கவேண்டும்
உழைப்பவர் வாழ்வில் உயரவேண்டும்
நிலவும் மலரும் மலர்வதை போல
உழைப்பவர் மனதில் இனிமைவேண்டும்.

தேன்போல் அழியா சுவைஉருவாக
தேனீயாய் ஓய்வின்றி உழைத்திடவேண்டும்.
வான்போல் புகழும் உன்னிடம் சேர
மீன்போல் வாழும் சமநிலைவேண்டும்.

காண்போர் எல்லாம் உன்னைபாராட்ட
கனிவுடன் உழைப்பை மதித்திடவேண்டும்.
சேற்றில் பதியும் கால்களை வணங்கி
சோற்றில் கைகளை வைத்திடவேண்டும்.

ஆடைகள் தந்திடும் கரந்தனைபிடித்து
அன்பாய் முத்தம் பதித்திடவேண்டும்.
இருப்பிடம் கட்டி தந்திடுவோருடன்
பொறுப்புடன் நட்பாய் பழகிடவேண்டும்.

அருவருக்கும் கழிவை அகற்றிடுவோரிடம்
பாசமும் நேசமும் காட்டிடவேண்டும்.
தென்னை போல் நீ வான்னுயர்ந்தாலும்
இளநீர் சுவைபோல் இனித்திடவேண்டும்.

தொழிலின் வடிவம் வேரென்றாலும்
வியர்வை சிந்திட உயர்வை காண்பார்.
உழைப்பவர் எல்லாம் மனிதத்தை
மதித்தால் உயர்நிலை என்றும் அடைந்திடுவார்.



உழைப்பின் சிறப்பை உணர்ந்தவர் எல்லாம்
விண்ணும் மண்ணும் ஒன்றென அறிவார்.
இயற்கை போலே பயன்கருதாதார்
இறந்தபின்னும் நிலைத்து நிற்பார்.

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**



### ஹைக்கூ!

அழகிய ஓவியமானது
வெள்ளை காகிதம்
துரிகையால்

சக்தி மிக்கது அணுகுண்டு
அல்ல அன்பு

மழை நீர் அருவியாகும்
அருவி நீர் மழையாகும்
ஆதவனால்

ஒன்று சிலை ஆனது
ஒன்று அம்மிக்கல் ஆனது
பாறை கற்கள்

காட்டியது முகம்
உடைந்த பின்னும்
கண்ணாடி

உருவம் இல்லை
உணர்வு உண்டு தென்றல்

பாத்ததுண்டா
மல்லிகை
சிவப்பு நிறத்தில்
வாடா மல்லிகை

கூர்ந்து பாருங்கள்
சுறுசுறுப்பை
போதிக்கும்
வண்ணத்துப்பூச்சி

இல்லாவிட்டாலும் கவலை
இருந்தாலும் கவலை பணம்

உடல் சுத்தம் நீரால்
உள்ளத்தின் சுத்தம்
தியானத்தால்

மழலைகளிடம்
மூட நம்பிக்கை விதைப்பு
மயில் இறகு குட்டி போடும்

பரவசம் அடைந்தனர்
பார்க்கும் மனிதர்கள்
கவலையில் தொட்டி மீன்கள்

அம்மாவை விட
மழலைகள் மகிழ்ந்தன
அம்மாவிற்கு விடுமுறை

இளமையின் அருமை
தாமதமாகப் புரிந்தது
முதுமையில்



தோற்றம் மறைவு
சாமானியர்களுக்குதான்
சாதனையாளர்களுக்கு
இல்லை.

**கவிஞர் இரா.இரவி!**

# நூல் விமர்சனம்

புல் நுனிப் பூக்கள்
நூல் ஆசிரியர் : கவிதாயினி வ. விசயலட்சுமி
பூவரசு பதிப்பகம், 30/8, கன்னிக்கோவில் பள்ளம் அபிராமபுரம் முதல்தெரு, சென்னை–600 018. பக்கம் : 80 விலை. : ரூ. 80
நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி.

'புல் நுனிப் பூக்கள்' கவித்துவமான தலைப்பு. நூலாசிரியர் கவிதாயினி வ. விசயலட்சுமி அவர்கள் புதுவையின் பெருமைகளில் ஒன்றானவர். சமூக அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே சமூகத்தையும் ஆய்வு செய்து துளிப்பா ஹைக்கூ வடித்து வருபவர். பல்வேறு இதழ்களில் பிரசுரமான துளிப்பாக்களை தொகுத்து நூலாக்கி உள்ளார்.

பேராசிரியர் எ.மு. ராசன் பாவலர் புதுவைத் தமிழ் நெஞ்சன் மின்மினி இதழ் ஆசிரியர் கன்னிக்கோவில் இராசா ஆகியோரின் அணிந்துரை வரவேற்புத் தோரணங்களாக உள்ளன. நூலாசிரியர் 10 க்கு மேற்பட்ட நூல்கள் எழுது உள்ளார். பல்வேறு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளார்.

ஆற்றில் இறங்க / அழகர் வந்தார் / ஆறு? முதல் துளிப்பாவே மதுரையின் இன்றைய நிலையை எடுத்து இயம்புவதாக இருந்தது. அழகர் ஆற்றில் இறங்க ஆறு ஓடவில்லை. செயற்கையாக தொட்டிக்கட்டி தண்ணீர் நிரப்பி அதில் தான் அழகர் இறங்க வேண்டி உள்ளது.

நாடு கடத்தப்பட்டார் / புத்தர் / அன்பிலா நாடு!

அன்பை போதித்த புத்தரை கடவுளாக வணங்கிடும் சிங்களர் சிறிதும் அன்பின்றி இலங்கை இராணுவம் தமிழினப் படுகொலை நடத்திய நிகழ்வை நினைவூட்டும் விதமாக வடித்த




விதம் அருமை! சுத்தமாக கைகள் / கறையாகிப் போனது / தேர்தல்! வாக்களிக்க வருபவர்களுக்கு அழியாத மை வைத்து கறையாக்குகின்றனர் என்பது ஒரு பொருள். வாக்களிக்க பணம் வாங்கி கறையாகி விடுகின்றனர் என்பது ஒரு பொருள். உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாட்டில் இந்தியாவில் தேர்தலே கறையாகி விட்டது என்பது ஒரு பொருள். ஒரு துளிப்பா மூலம் பல பொருள் உணர்த்த முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆறு நிறைய / சரக்குந்துகள் / மணல் கொள்ளை. நீதிமன்றங்களில் பல தீர்ப்புகள் வழங்கிய போதும் மணல் கொள்ளை மட்டும் நின்றபாடில்லை. தண்ணீர் ஓட வேண்டிய ஆறுகளில் சரக்குந்துகள் ஓடுவது வருங்கால வாரிசுகளுக்கு வஞ்சம் செய்யும் செயலாகும். வளத்தை அழிக்கும் கொடூரமாகும். "திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் நினைவிற்கு வந்தது.


காட்டில் தீ / எரிந்து மடிந்தது / எத்தனை புல்லாங்குழல்களோ? முன்பே எழுதிய இந்த துளிப்பா குரங்கனி காட்டின் தீ விபத்தை நினைவூட்டியது. பலியான உயிர்களை புல்லாங்குழல் என்றும் பொருள் கொள்ளலாம். விடுமுறை இல்லை / பணி ஓய்வில்லை / இல்லத்தரசி! வீட்டில் சும்மா தான் இருக்கிறாள் என்று சொல்லி அறிமுகம் செய்து வைக்கும் இல்லத்தரசிக்கு ஞாயிறு விடுப்பு இல்லை. வருடம் முழுவதும் வேலை. தொல்லை அவர்களின் இன்னலை உணர்த்திய துளிப்பா நன்று. இல்லத்தில் துன்பம் / துன்பத்தில் இன்பம் / திருமணம்!

திருமணம் பற்றி மிக இயல்பாக எதார்த்தமாக சொற்-சிக்கனத்துடன் வழங்கிய விளக்கம் முற்றிலும் உண்மை. கற்றது கையளவு / மறந்ததோ கடலளவு / தேர்வு நேரம் புகழ்பெற்ற பொன்மொழியை சற்று மாற்றி மாணவர்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டிய விதம் அருமை. பாராட்டுக்கள். திருமணம் / சொர்க்கத்தில் / விவாகரத்து? திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கின்றனர். பிறகு ஏன் விவாகரத்து நடக்கின்றது என்று பகுத்தறிவுக் கேள்வி எழுப்பு உள்ளார்.

வறுமையை ஒழிப்போம் / முழங்கினார் தலைவர் / செழித்தனர் உறவினர்! உண்மை தான். இன்றைய அரசியல்வாதிகள் தான் மட்டும் கொள்ளையடிக்காமல் சம்பந்தி சொந்தம் பந்தம் அனைவரையும் கொள்ளையடிக்க விடும் நாட்டு நடப்பை துளிப்பாவாக்கியது சிறப்பு.

மழைக்கு வான் தரும் / வரவேற்பு மாலை / வானவில்! அழகு காட்டிடும் வானவில்லை வரவேற்பு மாலையாகக் கற்பனை செய்திட்ட விதம் அருமை புதிய சிந்தனை. எழுந்தது தமிழகம் / விழுந்தது அரசியல் / சல்லிக்கட்டு சல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திட்ட போது உலகத்தமிழர்கள் யாவரும் உலகம் முழுவதும் போராடி தடை தகர்த்தனர். அரசியல் இன்றி சாதித்துக் காட்டினார்கள். புகுந்த வீட்டிற்கு அனுப்பாமல் பிறந்த வீட்டிலேயே சிறை காவிரி! உச்சநீதிமன்றம் காவேரி ஆற்றுப் பிரச்சனைக்கு கடைசித் தீர்வாக காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட அறிவுறுத்திய போதும், சட்டைச் செய்யாமல் கர்நாடகாவின் தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காக போக்குக் காட்டி வருகின்றனர். கல்நெஞ்சம் படைத்த கர்நாடகமும் ஈவு இரக்கமின்றி காவிரியை சிறைப்பிடித்து வைத்துள்ளது பல சிந்தனைகளை விதைத்தது. பெருமழை அறிவிப்பு/ பள்ளிகளுக்கு விடுமுறை / அம்மாவுக்கு? வருடத்தில் 365 நாட்களும் அம்மாவிற்கு ஓய்வின்றி வேலை. எந்தவித விடுமுறையும் இன்றி குடும்பத்திற்காக உழைத்து வரும் உன்னத உறவு அம்மா. அம்மாவின் அளப்பரிய பணி போற்றுதலுக்கு உரியது.

கஞ்சக்கருமி / அழைத்தான் காக்கையை / அமாவாசை! தானம் தரும் எண்ணம் இல்லாத கஞ்சன் அமாவாசையன்று காக்கையை அழைத்து சோறு வைக்கும் முரண்பாட்டை உணர்த்தி பகுத்தறிவுச் சிந்தனையை விதைத்துள்ளார். அழகிய முகம் / உள்ளே நஞ்சு! / நாகம்! அழகு, அதில் ஆபத்து உள்ளது என்று உணர்த்தியது சிறப்பு. ஏவுகணைத் தந்தை / ஏகினார் விண்ணை / தேம்பிடும் இந்தியா! இந்தியாவின் கடைக்கோடியில் உள்ள இராமேசுவரத்தில் பிறந்து இந்தியாவின் முதற்குடிமகனாக உயர்ந்து, செய்தித்தாள் விற்றுப் படித்து தலைப்புச் செய்தியான மாமனிதர் அப்துல்கலாம் அவர்களின் மறைவிற்கு இந்தியா மட்டுமல்ல உலகமே அழுதது. தேர்வில் வெற்றி / வாழ்வில் தோல்வி / மனப்பாடக் கல்வி! புரிதல் இன்றி மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் கல்வி பயன்படுவதில்லை. இன்றைய கல்வியின் நிலையை உணர்த்திடும் துளிப்பா நன்று. M.A. உளவியல், M.A. தமிழ், M.Phil படித்த ஆசிரியர் படைப்பாளியாகவும் விளங்குவது சிறப்பு. அவர் பயின்றது பயனுள்ள கல்வி.




கோர்வையாக
பேசவும் தெரியாது–அவள்
பார்வையில் படாமல்
வாழ்தலும் தெரியாது!

எல்லாவற்றிற்கும் பிறகும் கூட
காதல் மட்டுமே
போதும் என்கிறது
அடிபட்ட மனசு!

உன் நெற்றி தொட்டமுத்தம்
வெற்றியோடு சொல்லும்
தூய காதலின் பரிசு
அதுவென்று!

கடவுளே கண் வைத்து
விடாதே அவள் கண் படுதலும்
வரம் தான்!

கல்லாமை
பெருங்குற்றமாம்
மரியாதையாக
கற்பித்து விடு
உன் காதல் பாடத்தை!



விடுதலை செய்யவே
வேண்டாம் அப்படியே
என்னை
கைதியாய் வைத்து கொள்
உன் மனச்சிறைக்குள்!

**லி.நௌஷாத் கான்**






### ஹைக்கூக்கள்

வெளி வாங்கும் வானம்/
உள்வாங்கும் கடல்/
பாசியுடன் பவளப் பாறைகள்/

பாதி சூரியன்தான்/
இரை தேடும் பறவைகட்கு /
தினமிரு அந்திகளில்./

மரங்கொத்திகளே/
மனம்போல் துளையிடுங்கள்/
கூட்டில் குஞ்சுகள் இல்லை./

மீண்டும் பிரிந்த
இடத்தில்......./
நேற்றைய இருட்டில் ஒளிந்த/
எனது நிழல்./


வானவில்லை
ரசிக்கிறார்/கருப்பு–
வெள்ளையைக்
காதலித்து/
பணி ஓய்வடைந்த
ஆசிரியர்/

இறுதி வெளிச்சத்தை/
இருட்டடிப்புச் செய்து /
மாயமாகிறான்
மாலைக் கதிரவன்/

காலாவதி ஆண்டின்
கடைசி நாள் / நம்பிக்கை
இழக்கவில்லை/
அன்றலர்ந்த டிசம்பர் பூக்கள்./

ஓய்வெடுக்கிறது/
அடுத்த மழைக்கான
இடைவெளியில் /
கார்க்கால காற்று./

இறுதி அடியை /
அறுதி இடுவதற்குள்
பறக்கிறது/ புத்தன் மேலமர்ந்த
பட்டாம்பூச்சி. /



அற்பாயுசு/ மயானத்தைக்
கடந்ததும்/ மரித்திடும்
மரண வைராக்கியம்./

**முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு.



### பள்ளி மாணவனின் நீர் வண்ண ஓவியமாய் வானம்!

சற்றே நாணப்பட்டு முகம் சிவந்தும்
பளிச்சிட்டு சிரித்து வெளிர்த்துமாய்!

பறவைகளின் சிறகசைப்பும், மேகங்களின் உருவும், காற்றின்
நீந்துதலும் தவிர்த்து வேறென்ன பெரிதாய் அங்கு!

இடையிடையிலான அவைகளின் சில்மிஷங்களும்
வேடிக்கைகளும் இல்லாதா?

கைகோர்க்கிறேன் அவற்றுடன், சற்றே நீண்ட பயணத்தின்
நினைவும் சாலையோர நிற்றலின் முடிவிலுமாய்!

சுவையறும்புகள் தொட்ட தேநீரின் மிடறுகளும், காற்றிழையில்
மிதந்து வந்த அவளின் பேச்சும்!


சுப ஓரைகள் எழுதப்பட்ட திருமணங்கள்
இரண்டும், இறப்பு நிகழ்வொன்றும்!

வாழ்த்தும், அஞ்சலியும் தவிர்க்கவும் முடியாதும் போன
நிஜத்தினுரசலாய்!

உடன் அவளிருப்பும் இருந்திருந்தால் இன்னும் ஷேமம்!

காலனிடமும், எப்பொழுதாவது அசரீரிக்கிற தேவதைகளிடமும்
அனுமதி வாங்கி நீந்தி திளைத்து வந்திருக்கலாம்!

பிள்ளைகள் அருகிலில்லா முதுமையின்
தனிமையை வேறெப்படி கழிக்க?!



இரண்டாவது முறையும் காற்றிழையில்
குரலனுப்பி!

வீடு விட்டு வீதி தொட்டு கிளம்பிய
பொழுதிலிருந்து என்னை நிரப்பி
காத்திருப்பவளைக் காண விரைகிறேன்
சடுதியாய்!

**விமலன்.**



### வாழவைக்கும் வாழ்க்கைக்கு ஜே!

வாழ்க்கைப் பயணத்தில் யாரும் தனித்து
விலகிப்போக வேண்டாம்,

உறவுகளின் கை பிடித்து ஒன்றாய் நடப்போம்!
தற்காலிகத் தடைகளுக்காகத் தனிமையை நாடுபவர்கள்,
தங்களை நேசிக்கும் இதயங்களின் நம்பிக்கையையும்
சேர்த்தே சிதைக்கிறார்கள். சிறு சிறு வருத்தங்களும்,
தற்காலிக மனச் சங்கடங்களும் – ஒருபோதும்
நிரந்தரப் பிரிவிற்கான காரணங்கள் ஆகக்கூடாது!

நேசித்த உறவுகளின் முகங்களை ஒருமுறை
நினைத்துப் பார்த்தால், விலகிச் செல்லும் எண்ணமே
நம் மனதிற்குள் உதிக்காது.

சட்டென்று எடுக்கும் தவறான முடிவுகளால் இங்கே சமாதிகள்
பெருக வேண்டாம்; தன்னம்பிக்கை விதைகளால் சாதனைகள்
மட்டுமே முளைக்கட்டும்! "புரிந்து கொள்வோரிடம் பேசுவோம்"
என்ற தெளிவான மனநிலை கொள்வோம்;

நமைப் புரிந்து கொள்ளும் நல் இதயங்களை நாமே தேடிக்
கண்டடைவோம்! பிடித்தவரிடம் மனந்திறந்து பேசுங்கள்;
பிடித்ததை மகிழ்ச்சியுடன் செய்யுங்கள்.

அன்பும், நம்பிக்கையும் உங்களைச் சிதைக்காமல் – உங்களை
ஒரு சிறந்த மனிதனாகச் செதுக்குவதாக அமையட்டும்!
வாழுங்கள்... எதற்காகவும் வீழ்ந்து விடாதீர்கள்!

உங்கள் வாழ்க்கை உங்களுக்கானது மட்டுமல்ல;
அதில் சில மலர்களும், மொட்டுகளும், இளம்
சிட்டுகளும்– உங்களை வழிகாட்டியாகக் கொண்டு மலரக்
காத்திருக்கின்றன!

சிகரங்களின் தூரம் மலைப்பானதுதான்...
அதை அடையலாம் எனக் கற்றுத்தந்த நீங்களே – பாதியில்
மறைந்து போவது பெரும் துயரல்லவா?
நினைவிருக்கட்டும்... சிலுவை என்பது வெறும்
இறப்பிற்கானது அல்ல; அது ஒரு புதிய
வாழ்வின் மீட்புக்கான அடையாளம்!
துணையாக நிற்போம்...



வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும்
கொண்டாடுவோம்!
வாழவைக்கும் வாழ்க்கைக்கு ஜே!

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.



### மே தினத்தில் வாழ்த்துவோமே

உதிரத்தை உழைப்பாக்கி உலகம் தன்னை
உயர்த்துகின்ற தொழிலாளர் தம்மைப் போற்று
கொதிக்கவைக்கும் பசிவயிற்று நெருப்பு தன்னைக்
குளிர்விக்கும் தொழிலாளர் தம்மைப் போற்று !
புதிதாக வளங்களினைப் பெருக்கி வாழ்வைப்
புலரவைக்கும் தொழிலாளர் தம்மைப் போற்று
அதிகாலை எழுந்திரவு வரும்வ ரைக்கும்
அனுதினமும் உழைக்கும்தோ ழரினைப்போற்று !

வியர்வையினைச் சிந்திசிந்தி வறுமை தன்னை
விரட்டுகின்ற உத்தமர்தாம் தொழிலாளர்கள்
அயர்வின்றி உழைத்துழைத்துத் துயரைப் போக்கும்
அற்புதத்தைச் செய்பவர்தாம் தொழிலாளர்கள் !
உயர்வாகச் சமூகத்தை உயர்த்து தற்கே
உடல்தேயும் சகோதரர்தாம் தொழிலாளர்கள்
முயற்சிக்குக் காட்டாக விளங்கி நம்மின்
முன்னேற்றும் கரங்கள்தாம் தொழிலாளர்கள்!

உழைப்பாலே நமைஉயர்த்தும் தொழிலாளர்தம்
உழைப்பிற்கே ஏற்றகூலி தருவோம் நாமே
உழைக்கின்ற தொழிலாளர் எல்லாம் நம்மின்
உடன்பிறந்தோர் எனஅணைத்தே மதிப்போம் நாமே !



உழைப்பவர்தாம் ஒளியேற்றி இருளை ஓட்டி
உலகிற்கு வழிகாட்டும் தேவ தூதர்
உழைப்பவரை உழைப்புதனைப் புகழ்ந்து போற்றி
உளமுவந்து மேதினத்தில் வாழ்த்துவோமே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

காலுக்கு எதற்கு செருப்பு
செருப்புத் தைப்பவர் வாழ
அவர் வாழ உனக்கென்ன



அக்கறை
அவர்களில்
ஒருவர் என்
அப்பா....

**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.




அடைமழை...
அக்னி வெயில்..என
பருவமாற்றங்களில் நிறம்



மாறா...
பட்டாம்பூச்சியைப்
போலவே....
நிலைத்த
வண்ணமாய்...
உன்
நினைவுகள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி




கைக்கடிகாரம் கூடத்
துடிக்குமோ. நான்கு
மணிக்கே மன முட்கள்
நகரத் துவங்கி விடும்.
பேருந்தின் இடப்புறம் நான்..
சாலைக்கு மறுபுறம் நீ..
ஒரு சில நொடிகளுக்காய்
ஒரு நாளின் தவம்..
நீ இருப்பாய்.. இருக்க
வேண்டும்.. பார்க்க
வேண்டும்.. ஜபிக்கும்
மனசுக்கு இறக்கைகள்
முளைக்கும்.. குறுக்கே வேறு
வாகனம் வாராதிருக்கவும்
கூடுதல் பிரார்த்தனை.
இதோ..உன்னிடம் வரப்
போகிறது.. எட்டிப் பார்க்கும்
பார்வைக்கு எக்ஸ்ரே
கண்கள்.. என் தூரப்
பார்வையில் நீ.. உன்
உடையின் வண்ணம்
சொல்லி என் குறுஞ்செய்தி..
நீ பார்த்திருப்பாய் என
நானும் நான் பார்த்திருப்பேன்



என நீயும்
காத்திருப்பில்
அர்த்தம்
கொள்கிறதென்
காதல் !

**ரிஷபன்**



### மே முதல் தேதி

உழைப்பாளிகள் பொன்னாள்
தொழில் பக்தி
முதலாளி விசுவாசம்
பணியில் ஈடுபாடு
செதுக்கலில் நேர்த்தி

பொருளாதார ஆணிவேர்
வளர்ச்சியின் முதுகெலும்பு
தன்னிறைவு தொடரட்டும்
புவனம் செழித்தோங்கட்டும்

**பி. பழனி,** சென்னை.




### " உயிரின் ஓசை "



மொழி சொல்லாத பல சேதிகளை,
விழி விரித்து எனை சொல்ல வைத்தாய்.
தீராத காதல் கதைகளை, தினம் /
திகட்டாது பேசியே களிக்கச் செய்தாய்.
பாராத ஏக்கங்களின் ஊடல் வெப்பம்
பக்கத்தில் நீயிருந்தால் வாழ்வில் சொர்கம்!
கவிதையாய் மலர்ந்த காதல் கதையில்,
புரிதலில்லா அகந்தை தான் இடையில் நுழைய,
தெரியாத மனிதனாய் எட்டிச் சென்றாய்.
தென்றல் கூட தீயான விந்தை செய்தாய்!
உன் குரலுக்கு ஏங்கி காத்திருக்கும்
இந்த உயிரின் ஓசை , சத்தமில்லாமல் உனக்கு,
உரக்கக் கேட்கட்டும், அன்பனே!

**மீனா சேகர்**



### இப்படிக்கு காதல்

கவிதை எழுதித் தரும்படி
உன் சுடிதார் துப்பட்டாவை
என்னிடம் நீட்டுகிறாய்!
நீ வந்த வேகத்தில்
உன் சங்குக் கழுத்திலும்
சந்தன முகத்திலும்
முத்து முத்தாய் வியர்த்திருக்க
உன் தாவணியால் எனக்கு
விசிறுகிறாய்!
என் மீது தோள் சாய்ந்து
நீ கொஞ்ச உனக்குப்
போட்டியாக என் மீது சரிந்து
விழுகிறது உன்
சேலை முந்தானை!
என் கவிதைகளுக்குத்
தலைப்பாகத்துடித்துத்
தவிக்கிறது!
உன் உதட்டுச் சுழிப்பு!
ஒவ்வொன்றிலும்
எனக்கு என்னமாய்த்
தெரிகிறதடி உன்னிடமிருந்து
எனக்குக் கிடைக்கின்ற
இந்தக் காதல்!
--------------------
உனக்குக்கோபம் வரும்
போதெல்லாம் என்னையும்
என் அலைபேசி எண்ணையும்
தடை செய்து விடுகிறாய்!
என்னை வெறுப்பேற்ற
எனக்குப்பிடிக்காததையெல்லாம்
யோசித்து யோசித்துச்
செய்கிறாய்!
எதிர்பாராத நேரங்களில்
திடீரென சந்திக்க நேரிட்டால்
முறைப்பைத் தெறிக்க
விடுகிறாய்!
தீண்டல்களைப் போலத்தான்
சீண்டல்களும் கா த லு க் கு
அழகு என்று என்ன
அழகாகவும் எத்தனை
ஆழமாகவும் சொல்கிறது
உனது சிணுங்கல்கள்!
உன் கோபத்தின் சதவீதம்
உச்சமாக இருப்பினும்
நம் நேர்காணலை
நீ தவற விட்டதேயில்லை!
தவற விடுவதுமில்லை!
வலியுடன் நொடிகள்
நகர்ந்தாலும்நமக்கென
நம்பிக்கையுடன்
காத்திருக்கிறது
அந்த சமாதான
மு த் த ங் க ள்!
----------------
இதயத்திற்கு ஆயிரம்
வாசல் என்று சொல்வார்கள்!
அது மட்டும் உண்மையாயின்
என் மகாராணி உன்
வரவிற்காக மட்டுமே
அத்தனை வாசல்களும்
உனக்காகத்திறந்திருக்கும்!
நான் ஓவியனாக இருந்தால்
உன்னைத்தான்
சித்திரமாக்குவேன்!
நான் கவிஞனாக இருந்தால்
உன்னைத்தான்
கவிதையாக்குவேன்!
நான் பாடகனாக இருந்தால்
உன்னைத்தான் பாடுவேன்!
என்ன செய்வது ஒன்றும்
தெரியாமலே உன்னைத்
தானாக விரும்பி
உன்னைத்தான் கா த லி த் து
வி ட் டே ன்!
எனக்கு ஒரே ஓர் ஆசைதான்!
எனக்கு இந்தப் பிறவியில்
மட்டுமல்ல எந்தப் பிறவியிலும்
நீயும் உன் கா த லு ம்
வேண்டும்!
--------------------
அன்பே! ஆருயிரே!
கண்ணே! கனியமுதே!
என்றெல்லாம் உன்னைக்
கொஞ்சுவதை விட
ஆப்பிள் ஐ போனே!
இந்த் சுஜ்கியே!
குமுதம் சிநேகிதியே!
அவள் விகடனே! என
இப்படியெல்லாம் உன்னை
ட்ரெண்டியாக அழைப்பது
தான் உனக்குக்கொள்ளை
கொள்ளையாய்ப் பிடிக்கிறது!
அழைத்தால் இனிக்கும்
கா த லி க ள் தா ன்
அகிலத்தில் அதிகம்!
ஆனால் என் கா த ல்
த ங் க ம் நீயோ
நினைத்தாலே இனிப்பவள்!
முத்து கா கசம்
ஆனந்த் கா ஹுகூம்
வ ந் தி டு கா த லி யே
என்று நான் மனதில்
எண்ணினால் கூடப் போதும்!
அந்த வினாடியின்



இறுதியில் என்
இல்லத்தின் அழைப்பு
மணியைத் தொடுபவள் நீ!
நீயே என் வாழ்நாள் வரம்!
இப்படிக்கு உன் காதல்
நான்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

# WANTED
- சமையல்
- வீட்டுவேலை
- குழந்தை பராமரிப்பு
- நோயாளி கவனிக்க உண
- இடம் (Accomodation/Place)
- சென்னை

தொடர்புக்கு: 9380476241 / 9790766391

# ADVERTISE WITH US
CONTACT US
9438610756

# WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

# Vilambaram
We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

# டீலர்கள் தேவை
## மைலேஜ் பூஸ்டர்
## 20% ~ 30%

மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு

நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்

Manufactured By: Dlag Technologies, Chennai 33

போன் 63746 73041

# Annai Violet Arts & Science College
Seek Strive Succeed

(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)

Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College

**Key Features**
- Modern Infrastructure | Extensive Library
- Expert Faculty | Result-Oriented Curriculum
- Well-Equipped Labs | Competitive Exam Preparation
- Sports & Skill Development | English Training
- Prime Location | Strong Security
- Seminar Hall | Personalized Student Support
- Inter-College Competitions | Scholarships
- Counseling & Mentoring | Industrial Visits
- Interactive Learning | Strong Placement Support
- Community Radio Station

Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate

EDUCATIONAL BANK LOAN AVAILABLE

Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students

FM 88.8 VIOLET WAVES

**UG & PG COURSES**

SHIFT I
- B.C.A
- B.B.A
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc BIOCHEMISTRY
- B.Sc MICROBIOLOGY
- B.A TAMIL
- B.A ENGLISH
- B.A ECONOMICS
- B.COM (GENERAL)
- B.COM (ACCOUNTING & FINANCE)
- B.COM (CORP. SECRETARYSHIP)
- M.A ENGLISH
- M.COM
- M.Sc BIOCHEMISTRY

SHIFT II
- B.Com (GENERAL)
- B.Com (ISM)
- B.Sc PHYSICS
- B.Sc CHEMISTRY
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc VISUAL COMMUNICATION
- M.Sc COMPUTER SCIENCE
- M.Sc MICROBIOLOGY

CERTIFICATE COURSE
- DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
- CERTIFICATE COURSE IN MEDICAL CODING
- PHOTOSHOP • COREL DRAW • TALLY PRIME

The Other Clubs Present in the College are: Eco Club, Expo Club, Prayer Cell, Innovation & ED Cell, Comedy Club, Reporter's Club, Counseling Cell, Fine Arts Club, Citizen Consumer Club, Anti Ragging Cell, Grievance Cell, Women's Cell, Service Club (NCC/NSS/RRC/YRC/Rovers & Rangers), Placement & Career Guidance Cell

UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE

Get great education with us!

ADMISSIONS OPEN

Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.

info@violetcollege.in www.violetcollege.in

# keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

# நிலம் தேவை
## தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு

1 to 2 ஏக்கர்

தொடர்புக்கு:
Ph. 6384617773

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce

நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.

பொது மேலாளர்:
7092069555 / 7092047555

# WANTED
## FEMALE TELECALLER
- EXP : FRESH / EXPERIENCED
- SKILL : GOOD COMMUNICATION SKILL
- LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
- AGE : 18 YRS -60 YRS
- SALARY – 10,000 & ABOVE
- LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE

PadmaMedia House Call/Whatsapp 94386 10756

# WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107

Call now for more details and interview.

APPLY NOW

# SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

# SUN SHINE PROPERTY
(Property & Developers)

லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை

மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft

முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

# EMI 50% 50% OFFER
PLOT FOR SALE

SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை

SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.

OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.

CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

# PLOTS FOR SALE SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை

EMI Available
BANK LOAN Available

CONTACT: 8220711499, 8870158259

# PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில் வீட்டு மனைகள் விற்பனைக்கு

BANK LOAN AVAILABLE

Contact: 9841495210

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துனை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துனை

# ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

# WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM

CALL US 7550093245 / 7358696451

# WANTED
OFFICE BOY

GUINDY

CALL US 7550093245 / 7358696451

# WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN

EGMORE, MOUNT ROAD

CALL US 7550093245 / 7358696451

# WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106























**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.









THANIGAI

**WANTED** ISO

**REAL ESTATE MARKETING**

**PART TIME & FULL TIME**

☑ Flexible work ☑ No Age Limit / No Investment

☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target

Simple work – just refer customers only


Office Location : Near Perambur Railway Station

K. Ramakrishnareddy | 90879 55111


































திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

## ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**


தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com





# பல்சுவை களஞ்சியம்




## தர்மயாத்திரை

மகாபாரதம் முடிந்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா ? இல்லை உண்மையான முடிவு இப்போதுதான் தொடங்குகிறது கலியுகத்தில் மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகள் தனிமனித வாழ்க்கைக்கு தேவைப்படும் தர்ம நெறிகள் இவை அனைத்திற்கும் இந்த பயணம் மிகப்பெரிய பாடமாக அமைகிறது. தர்மம் மட்டுமே மனிதனை உயர்த்தும் ஆனால் தர்மத்தின் பாதையில் செல்லும் சோதனைகள் எவ்வளவு கடுமையானவை என்பதை இந்த கதையின் மூலம் உணரலாம்.

பாண்டவர்கள் தர்மயுத்தத்திற்கு பிறகு அவர்களின் கடைசி பயணம் எப்படி அமைந்தது? ஏன் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தார்கள் ? இறுதியில் யார் சொர்கத்தை அடைந்தார் ? எந்த காரணத்திற்காக பாண்டவர்கள் உயிரிழந்தார்கள்? இந்த பயணத்தின் உண்மைகளை நீங்கள் அறிந்த பிறகு உங்கள் வாழ்க்கையைப் பற்றிய பார்வையே மாறிவிடும். இந்த கட்டுரையின் இறுதியில் உங்கள் மனதை நெகிழ வைக்கும் ஒர் ஆழமான உண்மை வெளிப்படும், அது தர்மத்தை பற்றியே உங்கள் எண்ணங்களை முற்றிலும் மாற்றக்கூடும். அதனால் ஒரு வரிகூட தவறவிடாமல் இந்தக் கட்டுரையை கடைசிவரை கவனமாக வாசிக்கவும்.



கிருஷ்ணர் மறைந்த பிறகு அர்ஜுனன, வியாச முனிவரின் வார்த்தைகளால் வாழ்க்கையின் உண்மையான நோக்கை உணர்கிறான்.

"அர்ஜுனா நீங்களும் உங்கள் சகோதரர்களும் தர்மத்தை நிலை நிறுத்த கிருஷ்ணருக்கு உதவினீர்கள். இப்போது தர்மம் நிலைத்திருப்பதால் உங்கள் கடமையும் முடிந்தது. அடுத்த தலைமுறையினருக்காக நீங்கள் மீதம் உள்ளதை விட்டுச் செல்லுங்கள்" என்று கூறுகிறார் வியாச முனிவர்.

தர்மர் இதனை ஏற்றுக்கொண்டு, "கிருஷ்ணரின் பணி முடிந்தது. இப்போது நாங்கள் உலகத்தை துறந்து அமைதியாக வாழ நேரம் வந்துவிட்டது" என்று கூறினார். இது ஒரு தீர்க்கமான முடிவு.

பாண்டவர்கள் திரவுபதியுடன் அஸ்தினாபூரிலிருந்து புறப்பட்டு துவாரகாவை அடைந்தனர். அழிந்த துவாரகா நகரத்தைக் கண்டு மனம் உடைந்தனர். பின்னர் ரிஷிகேஷ் வழியாக இமயமலையை நோக்கி பயணித்தனர். ஆனால் அவர்கள் எதிர்கொள்ள இருந்த சோதனைகள் எந்த அளவிற்கு கடுமையானவை என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. மேரு மலையை கடந்து சொர்க்கத்தை அடைய அவர்கள் திட்டமிட்டனர். அப்போது ஒரு நாயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. பாண்டவர்களும் திரவுபதியும் அந்த நாயுடன் இமயமலையில் ஏறும் போது மேரு மலையை அடைவதற்கு முன் திரவுபதி கீழே விழுந்து உயிரிழந்தாள்.

அதிர்ச்சியடைந்த பீமன், "தர்மா..... திரவுபதி ஏன் சொர்க்க பயணத்தை முடிக்க முடியவில்லை ?" என்று கேட்டான்.

தர்மர் அமைதியாக கூறினார் "அவள் அனைவரையும் சமமாக நேசிப்பேன் என்று உறுதி அளித்திருந்தாள். ஆனால் அவள் அர்ஜுனனை மட்டுமே அதிகமாக நேசித்தாள். அதனால் தான் அவள் முதலில் உயிரிழந்தாள்"

தர்மர் நாயுடன் நீண்ட பயணத்தை தொடர்ந்தார். அவர்கள் மேரு மலையின் உச்சியை அடைய இருந்தபோது இந்திர பகவான் தனது தேரில் வந்தார். "தர்மத்தை பின்பற்றுவதில் உங்கள் நடைமுறைகள் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் மனைவியும் சகோதரர்களும் பாவம் செய்ததால் நரகத்தில் உள்ளனர். அவர்கள் தங்கள் பாவங்களுக்காக நரகத்தில் தங்கள் நேரத்தை கழித்த பிறகு சொர்க்கத்தை வந்தடைவார்கள். இனி நடக்க வேண்டிய அவசியமில்லை. நான் தேறில் எற்றி சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வேன். தேரில் அமருங்கள்" என்று இந்திர பகவான் தர்மரை அழைத்தார்.

"நான் ஆசிர்வதிக்கப்பட்டவன். ஆனால் தயவு செய்து எனது மன்னிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் காரணமாகவே நான் தர்மாவை பின்பற்றினேன். அவர்கள் ஒருபோதும் என்னை மாற்ற முயற்சிக்கவில்லை. அவர்கள் என் வார்த்தைகளை நம்புவதை ஒருபோதும் நிறுத்தவில்லை. அது சொர்க்கமாக இருந்தாலும், எனது மனைவிக்கும் சகோதரர்களுக்கும் இடம் இல்லாத இடத்தில் நான் இருக்க விரும்பவில்லை" என்று தாழ்மையுடன் தர்மர் கூறினார்.

இந்திரன் புன்னகைத்து "நீங்கள் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. அவர்கள் தங்கள் நேரத்தை நரகத்தில் கழித்த பிறகு இப்போது அவர்கள் அனைவரும் சொர்க்கத்தில் உள்ளனர். எனவே நீங்கள் தேரில் ஏறுங்கள். நான் உங்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன்" என்று கூறினார்.
ஆனாரல் தர்மர் ஒரு கேள்வி கேட்டார். அவர் ராஜ்யத்தை துறந்த நாளில் இருந்து தன்னை பின்தொடர்ந்த நாயை பார்த்தார். இந்த நாயும் தன்னுடன் தேரில் வரமுடியுமா என்று இந்திரனிடம் கேட்டார்.

இந்திரன் மறுத்துவிட்டார். "நாய்கள் ரதத்திற்குள் நுழைய முடியாது. உங்கள் சொந்த நிலை மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொள்ளுங்கள். நீங்கள் நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள், தேரில் ஏறுங்கள், நாயைக் கை விடுங்கள்" என்று இந்திரன் வலியுறுத்தினார்.

"தயவு செய்து என்னை மன்னியுங்கள். நான் நாயை விட்டு போகமுடியாது. நான் ராஜ்ஜியத்தை விட்டு வெளியேறிய தருணத்தில் இருந்து இந்த நாய் என்னை பின்தொடர்ந்து வருகிறது. என் சகோதரர்கள் மற்றும் திரவுபதியின் மரணத்திற்குப் பிறகும் என்னுடன் உள்ளது. நான் தனியாக இருந்தபோது அது எனக்கு ஒரு நிலையான தோழனைப் போல இருந்தது. நான் ஒரு நண்பரை கைவிட முடியாது, ஏனென்றால் ஒரு நண்பனை விட்டுக் கொடுப்பது ஒரு பெரிய பாவமாகும். நான் எவ்வளவு நேரம் எடுத்தாலும் நாயுடன் நடந்து செல்வேன் என்று தாழ்மையுடன் தர்மர் கூறினார்.

இந்த வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த அந்த நாய் திடீரென்று எமதர்மராஜனாக மாறியது. "அன்புள்ள மகனே, நான் உன்னை பற்றி பெருமிதம் கொள்கிறேன். நீ மிகவும் தாழ்மையான, எளிமையான மற்றும் நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்தாய். வாழ்நாள் முழுவதும் எல்லா சூழ்நிலைகளிலும் தர்மத்தை பின்பற்றினாய். ஒரு மனிதன் எந்த குடும்பத்தை சேர்ந்தவர், அவருக்கு எத்தனை அன்புக்குரியவர்கள் மற்றும் உறவினர்கள் இருந்தாலும், வாழ்வதற்காக அவர் என்ன செய்தாலும் இறுதியில் அவரது தர்மம் மட்டுமே அவரை பின்பற்றி சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். உன் மகிழ்ச்சியையும் வளமான வாழ்க்கையையும் இழந்தாலும் நீ அத்தகைய வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறாய். தேரில் ஏறிச் செல், இந்திரன் சொர்க்கத்திற்கு உன்னை அழைத்துச் செல்வார்" என்று எமதர்மர் பெருமையுடன் கூறினார்.

இறுதியில் தர்மர் இந்திரனுடன் தேறில் ஏறி சொர்க்கத்திற்குச் சென்றார். அங்கு அவரது சகோதரர்களும், திரவுபதியும், கர்ணனும் இருந்தனர். இறுதியாக அவர் சொர்க்கத்தில் நித்திய அமைதியை கண்டார்.

தருமத்தின் பாதையை பின்பற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதை மானிடர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து நமது வாழ்க்கையை செம்மைப் படுத்த உறுதி கொளவோம்.

## மீம்ஸ்










தமிழ் நாடகத் தந்தையார் பம்மல் சம்மந்த முதலியார் 1873ம் ஆண்டில் பிறந்தார். தமிழ் நாடகங்களை முதன் முதலாக உரைநடையில் எழுதியவர். வழக்கறிஞர், நீதியரசர்,. நாடகாசிரியர், மேடை நாடக நடிகர், எழுத்தாளர், இயக்குனர் என்று பல பரிணாமங்களை கொண்டவர். முதன் முதலாக 1883ம் ஆண்டில் புஷ்பவல்லி எனும் சமூக நாடகத்தை எழுதி நடித்தார். 1959ம் ஆண்டில் பத்மபூஷன் என்ற தேசிய விருதைப் பெற்றார்....

## சிறுகீரையின் மருத்துவப் பயன்கள்

**சிறுகீரையின் மருத்துவப் பயன்கள்**

இந்தக் கீரையை தினமும் சமைத்துச் சாப்பிட இரும்புச் சத்து உடலில் பரவும்.

இந்த கீரையை சாப்பிட்டால் காச நோய் குணமாகும். நீர்க்கடுப்பு, வீக்கம், பித்தநோய் சரியாகும்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் இக்கீரையை தினமும் சாப்பிட்டால் இன்சுலின் இயல்பாக சுரக்கும்.

இதில் கால்சியம் அடங்கியிருப்பதால் எலும்பைப் பலப்படுத்துகிற ஆற்றல் இதற்கு உண்டு.

இந்தக்கீரை

நினைவாற்றலுக்கு மிகவும் உதவும். நல்ல உடற்கட்டுடன் திகழ, சிறுகீரையோடு துவரம்பருப்பு, சிறிய வெங்காயம் போட்டு நெய்யை வேண்டிய அளவு சேர்த்து சாப்பிட்டு வர வேண்டும்.



நீர் எரிச்சல் தணியும். காசநோயைக் கட்டுப்படுத்தும். மூலநோயைக் கட்டுப்படுத்தும். வாயுவை அகற்றும். வாதநோயை அகற்றும். மாலைக்கண், வெள்ளெழுத்து போன்ற நோய்களை நீக்கும்.



## விடுகதை


| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



## ஜோக்ஸ்

காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஒடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?



அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு

இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## கணைய பாதிப்பு எதனால்?



கணையம் என்பது மனித உடலில், வயிற்றுக்கு பின்னால் உள்ள ஒரு முக்கிய உறுப்பாகும்.

இது உணவு செரிமானம் மற்றும் ரத்த சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைக்க முக்கிய பங்கு வகிக்கிறது. செரிமான சுரப்பி மற்றும் உட்சுரப்பி என்று 2 விதமாக செயல்படும். செரிமான சுரப்பியாக செயல்படும் நிலையில், என்சைம்கள் என்ற நொதிகளை உற்பத்தி செய்து உணவை செரிக்க உதவுகிறது. உடலில் அமிலம், புரதம், கொழுப்பு ஆகியவற்றை உடைக்கவும், சிறுகுடலில் செரிமானத்தை மேம்படுத்தவும் செய்கிறது.

உட்சுரப்பி நிலையில் செயல்படும்போது, ரத்த சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்த இன்சுலின் மற்றும் குளுகோகான் என்ற ஹார்மோன்களை சுரக்கிறது. கணையத்தில் இருக்கும் பீட்டா செல்கள், கணையத்தின் லாங்கர்ஹான்ஸ் என்ற பகுதியில் இருக்கும் சிறப்பு நாளமில்லா செல்கள், ஹார்மோன்களை சுரந்து உடலில் சர்க்கரையின் சமநிலையை பேண உதவும் வகையில் இன்சுலினை வெளியிடுகின்றன.

அதிகமாக மது குடிப்பது, பித்தக்கற்கள், கணைய சாற்றுநீர் வெளியேறும் பாதை தடைபடுவது, அழற்சி ஏற்படுவது போன்றவற்றால் கணையம் வலுவிழக்கிறது. புற்றுநோய், இன்சுலின் உற்பத்தி குறைந்து ரத்த சர்க்கரை சமநிலை இழந்தாலும் கணையம் பாதிக்கப்படுகிறது. அதிக கொழுப்பு, கணையச் செல்களுக்கு நேரடி காயம், தொற்று போன்றவையும் கணைய செயல் இழப்புக்கு காரணமாக வாய்ப்பு உள்ளது.


## தேன் கெட்டுப்போவதில்லை... ஏன் தெரியுமா?



தேன் எத்தனை ஆண்டுகளானாலும் கெட்டுப்போகாது என்பார்கள். அது தூய்மையானதாகவும், முறையாக மூடி பாதுகாக்கப்பட்ட நிலையிலும் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமானது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்திய கல்லறைகளுக்குள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முந்தைய தேன் ஜாடிகளை கண்டுபிடித்தனர். அவை கெட்டுப்போகாமல் ருசிக்கக்கூடிய நிலையிலேயே இருந்தது. தேன் கெட்டுப்போகாமல் இருக்க என்ன காரணம் தெரியுமா?

தேனில் ஈரப்பதம் குறைவாகவே இருக்கும். அதாவது குறைந்த நீர் உள்ளடக்கத்தை கொண்டிருக்கும். அதனால் பாக்டீரியா, பூஞ்சை வளர அனுமதிக்காது. அத்துடன் தேன் இயற்கை அமிலத்தன்மையை கொண்டிருக்கும். அது நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை தடுத்துவிடும். தேனீக்கள், தேனில் என்சைம்களை சேர்க்கின்றன. அவை ஹைட்ரஜன் பெராக்சைடை உற்பத்தி செய்கின்றன. இது இயற்கை கிருமி நாசினியாகும். நுண்ணுயிர் வளர்ச்சியை மேலும் தடுத்துவிடும். இதுபோன்ற காரணங்கள் தேனை கெட்டுப்போகாமல் பாதுகாக்கின்றன.

## இதய ஆரோக்கியத்திற்கான சிறந்த பயிற்சிகள்



கரோனரி இதய நோய், செரிப்ரோவாஸ்குலர் நோய், புற தமனி நோய், வாத இதய நோய், பிறவி இதய நோய், ஆழமான நரம்பு ரத்த உறைவு மற்றும் நுரையீரல் தக்கையடைப்பு, மாரடைப்பு, பக்கவாதம் போன்ற இதய நோய்களை கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க உடல் தகுதியுடன் இருப்பது முக்கியம்.

உடற்பயிற்சி இதய தசைகளை வலுப்படுத்த உதவுகிறது. பி.எம்.ஐ.யை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதிக கொழுப்பு, உயர் ரத்த சர்க்கரை மற்றும் உயர் ரத்த அழுத்தம் காரணமாக தமனி சேதமாவதின் அபாயத்தை குறைக்கிறது.

மாரடைப்பு ஏற்படுவதை தவிர்க்கிறது. வெவ்வேறு வகையான உடற்பயிற்சிகள் இருதய நோய்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

விறுவிறுப்பான நடைபயிற்சி, ஓட்டம், நீச்சல், சைக்கிள் ஓட்டுதல், டென்னிஸ் விளையாடுதல் மற்றும் கயிறு குதித்தல் போன்ற ஏரோபிக் பயிற்சிகள் சுழற்சியை மேம்படுத்துகின்றன. இதன் விளைவாக ரத்த அழுத்தம் மற்றும் இதய துடிப்பு குறைகிறது. இது இதய உந்துதலை மேம்படுத்துகிறது. நீரிழிவு கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

உடல் பருமன், அதிக வயிறு மற்றும் கொழுப்பு அதிகம் உள்ளவர்களுக்கு எதிர்ப்பு பயிற்சி உதவுகிறது. எதிர்ப்பு பயிற்சி கெட்டகொழுப்பை குறைக்கிறது. நல்ல கொழுப்பை மேம்படுத்துகிறது. கை எடைகள், டம்ப்பெல்ஸ் அல்லது பார்பெல்ஸ், வெயிட் மெசின்கள், புஷ்-அப்கள், குந்துகைகள் மற்றும் சின்-அப்கள் போன்ற இலவச எடைகளுடன் வேலை செய்வது எதிர்ப்பு பயிற்சிக்கான சிறந்த தேர்வாகும்.

நீட்சி, நெகிழ்வு மற்றும் சமநிலை நீட்டித்தல் போன்ற நெகிழ்வு தன்மை உடற்பயிற்சிகள் இருதய நோய் நிலைகளுக்கு நேரடியாக பங்களிக்காது. ஆனால் இது நெகிழ்வானதாகவும், மூட்டு வலி, தசைப்பிடிப்பு மற்றும் பிற தசை பிரச்சனைகளிலிருந்து விடுபடவும் உதவுகிறது.

## தோலுக்கு மினுமினுப்பை தரும் பீட்ரூட்



சைவ உணவுகளை எடுத்துக்கொள்வது உங்களது உடல் நலனுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் நல்லது என்பது குறித்து மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் தரும் விளக்கம் இங்கே:

**நச்சுக்களை அகற்றுபவை:**
நார்சத்து மிகுந்த சுரைக்காய், பூசணி, பசலைக்கீரை மற்றும் முட்டைகோஸ் ஆகியவை சைவ உணவு வகைகளில் மிக முக்கியமானவை. உடலில் சேரும் நச்சுகளை அகற்றும் திறன் மேற்கூறிய காய்கறிகளுக்கு உண்டு. அதே சமயம் முட்டை, மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றில் புரதச்சத்து இருக்கும் அளவுக்கு நார்ச்சத்து இருப்பதில்லை.

**எலும்புகளை வலுவாக்குபவை:**
இறைச்சி உடலில் புரதத்தை அதிகமாக்கி, கொழுப்பை கூட்ட வழி வகுக்க கூடியது. மேலும் நமது சிறுநீரகத்திற்கு அதிக வேலைப்பளுவை ஏற்படுத்த செய்வதோடு, எலும்பிலுள்ள கால்சியத்தையும் உறிஞ்சி விடுகிறது. அதே சமயம் சைவ உணவில் இந்த பிரச்சனை இல்லை.

**கார்போஹைட்ரேட் பற்றாக்குறை:**
அசைவ உணவு அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கு கார்போ ஹைட்ரேட் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பும் அதிகம் உண்டு. இதனால் உடல் தனது இயக்கத்திற்கு தேவையான சக்தியை கார்போஹைட்ரேட்டில் இருந்து பெறுவதற்கு பதிலாக சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பிலிருந்து எடுத்துக்கொள்ளும் கீட்டோனியம் என்ற நிலை ஏற்படும். சைவ உணவுகள் மூலமாக கிடைக்கும் ஹார்போஹைட்ரேட் படிப்படியாக ஜீரணமாக உடலுக்கு தேவையான குளுகோஸ் சத்தை சீராக அளிக்கும். அதே சமயம் கொழுப்பும், புரதமும் அதிகம் நிறைந்த இறைச்சி உணவு ஜீரணமாகவே அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். சில சிமயங்களில் சிலருக்கு அது சிரமமாக கூட ஆகிவிடும்.

**ஆரோக்கியமான மேனி:**
பீட்ரூட், தக்காளி, பூசணி, பாகற்காய் போன்ற சைவ உணவுகள் ரத்தத்தை நன்கு சுத்திகரிப்பதோடு, தோலுக்கு மினு மினுப்பையும் கொடுக்கிறது. அத்துடன் கொய்யா, ஆப்பிள், பேரிக்காய் போன்ற பழங்களை உண்பதும் மேனிக்கு மினுமினுப்பை கூட்டும்.

## இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது- ஏன் தெரியுமா?



மனித குலத்துக்கு இயற்கை தந்த பொக்கிஷம் இளநீர். இது சுத்தமான சுவையான பானம் ஆகும். இளநீரில் செவ்விளநீர், பச்சை இளநீர், ரத்த சிவப்பில் உள்ள இளநீர் என பல்வேறு வகைகள் உள்ளன. இளநீரில் எல்லா வகையிலும் மருத்துவ குணங்கள் நிறைந்து உள்ளன.

அளவுக்கு அதிகமாக உள்ள வாதம், பித்தம், கபத்தை தீர்க்கும் மருந்து இளநீர். வெப்பத்தைத் தணிக்கும். உடலில் நீர்ச்சத்து குறையும் நிலையில் அதை சரி செய்யும்.

ஜீரண சக்தியை அதிகரிக்கும். சிறுநீரகத்தை சுத்திகரிக்கும். விந்துவை அதிகரிக்கும். மேக நோய்களை குணப்படுத்தும். ஜீரணக் கோளாறால் அவதிப்படும் குழந்தைகளுக்கு இளநீர் நல்ல மருந்து. உடலில் ஏற்படும் நீர் - உப்புப் பற்றாக்குறையை இளநீர் சரி செய்கிறது.

இளநீர் குடல் புழுக்களை அழிக்கிறது. இளநீரின் உப்புத்தன்மை, வழுவழுப்பு தன்மை காரணமாக காலரா நோயாளிகளுக்கு நல்ல சத்து. ஆற்றல் வாய்ந்த கரிமப் பொருள்கள் இளநீரில் உள்ளன. அவசர நிலையில் நோயாளிகளுக்கு இளநீரை நரம்பு மூலம் செலுத்தலாம். ரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவுக்கு சிறந்த மாற்று பொருளாக இளநீர் பயன்படுத்த ப்படுகிறது. ரத்தத்தில் கலந்துள்ள நச்சு பொருள்களை அகற்ற இளநீர் பயன்படுகிறது.

இளநீரில் அதிக அளவில் சத்துகள் உள்ளன. சர்க்கரை சத்துடன் தாது பொருள்களும் நிறைந்துள்ளன. பொட்டாஷியம், சோடியம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, செம்பு, கந்தகம், குளோரைடு போன்ற தாதுக்கள் இளநீரில் உள்ளன. இளநீரில் உள்ள புரதச்சத்து, தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக்கு இணையானது. இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. ஏனெனில் அதில் உள்ள அமிலத்தன்மை வயிற்றில் புண்ணை உருவாக்கும். ஏதாவது ஆகாரம் எடுத்த பின்னரே சாப்பிடவேண்டும்.

## டூத் பிரஷை மாதக்கணக்கில் உபயோகிப்பவரா நீங்கள்... இதை தெரிஞ்சிக்கோங்க



காலையில் எழுந்ததும் முதல் வேலையாக பல் துலக்கும் பழக்கத்தைத்தான் அனைவரும் பின்பற்றுவோம். வாய் சுகாதாரத்தை பராமரிப்பதற்கு பல் துலக்குவது அவசியமானது. ஆனால் பல் துலக்குவதில் காட்டும் ஆர்வத்தை பலரும் பிரஷ் விஷயத்தில் காண்பிப்பதில்லை. நிறைய பேர் பிரஷை மாதக்கணக்கில் உபயோகிப்பார்கள். அதில் இருக்கும் இழைகள் தேய்ந்து போகும் வரை உபயோகிப்பவர்களும் இருக்கிறார்கள்.

பல் மருத்துவர்களின் கருத்துப்படி, மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை பிரஷை கண்டிப்பாக மாற்றியாக வேண்டும். பிரஷை நீண்ட நாட்கள் பயன்படுத்தினால் அதிலிருக்கும் இழைகள் அதன் வடிவத்தை இழந்துவிடும். தேய்ந்தோ, உடைந்தோ போய்விடும். அதனை பயன்படுத்தினால் பற்களுக்கு இடையே இருக்கும் உணவுத்துகள்களை அகற்றும் செயல்திறன் குறைந்து போகும். ஈறுகளுக்கும் சேதம் ஏற்படுத்தும். ஏனென்றால் பிரெஷில் இருக்கும் இழைகள் நேராக, தொய்வடையாமல் இருந்தால்தான் பற்களுக்கு இடையேயும், ஈறு பகுதிகளிலும் சிறப்பாக செயல்படும். பழைய இழைகள் ஈறுகளை பாதுகாப்பதற்கு பதிலாக எரிச்சலடைய செய்யும்.

அத்துடன் பழைய இழைகளில் பாக்டீரியா, ஈஸ்ட் மற்றும் பூஞ்சை காளான்கள் படியக்கூடும். அவை வாய்வழி சுகாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும். பற்களில் கிருமிகள் பெருக காரணமாகி ஈறுகளை சிதைக்கக்கூடும். பிரஷ் இழைகள் தேய்ந்தாலோ, சேதம் அடைந்தாலோ 3 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டியதில்லை. உடனே மாற்றிவிடுவதுதான் பற்களுக்கு பாதுகாப்பானது.

குறிப்பாக குழந்தைகள் அதிக அழுத்தம் கொடுத்து பல் துலக்குவார்கள் என்பதால் அவர்களின் பிரஷ் இழைகள் வேகமாக தேய்ந்துவிடும். பிரஷ்களை மூடிய நிலையில் வைக்கக்கூடாது. ஏனெனில் ஈரப்பதம் பாக்டீரியா, வைரஸ் படிவதற்கு காரணமாகிவிடும். காற்றோட்ட சூழல்தான் சிறந்தது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## தொழிலாளர்கள் நினைவு பூங்காவில் மலர் வைத்து மரியாதை





தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு தொழிலாளர்கள் நினைவு பூங்காவில் மலர் வைத்து மரியாதை செலுத்தினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு செல்வப் பெருந்தகை வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் திருமதிமதராமா கனி பாரூக்.

## மதுரை: நடிகர் ரஜினி கோவிலில் 16 வகையான பொருட்களை கொண்டு சிறப்பு அபிஷேகம்



**மதுரை, மே 02:** தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலத்தில் நடிகர் ரஜினிகாந்துக்காக தனியாக கோவில் ஒன்று கட்டப்பட்டு உள்ளது. ஸ்ரீ அருள்மிகு ரஜினி கோவில் என பெயரிடப்பட்ட அந்த கோவிலில் தொடர்ந்து 4-வது ஆண்டாக இன்று தொழிலாளர் தினத்தில் சிறப்பு அபிஷேகங்கள் நடத்தப்பட்டன.

அப்போது பால், மஞ்சள், பன்னீர், இளநீர், உள்ளிட்ட 16 வகையான பொருட்களை கொண்டு ரஜினிகாந்தின் சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. பஸ் கண்டக்டராக இருந்து தமிழ் திரையுலகில் உச்ச நடிகராக வளர்ச்சியடைந்த அவரை கவுரவிக்கும் வகையில், ரசிகர் கார்த்திக் என்பவர் இந்த கோவிலை கட்டியுள்ளார்.அதில், 3 அடி உயர கற்சிலையும் உள்ளது. ரசிகர்கள், அதற்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர். அந்த கோவிலில், பல்வேறு இந்து கடவுள்களின் உருவம் போன்று ரஜினிகாந்த் முகத்துடன் கூடிய கடவுள்களின் உருவங்கள் இடம் பெற்றுள்ளதுடன், அவர் பல்வேறு படங்களில் நடித்த தோற்றங்களின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன

## வாகனங்களுக்கு 2 நாள் இலவச அனுமதி




கொடைக்கானலில் வாகனங்களுக்கு 2 நாள் இலவச அனுமதி!

## காமநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியருக்கு பணி நிறைவு பாராட்டு விழா





**கோவில்பட்டி, மே 02:** கோவில்பட்டி அருகே உள்ள காமநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற மணிமதிக்கு பணி நிறைவு பாராட்டு விழா ரேவா பிளாசா கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு மகிழ்வோர் மன்ற நிறுவனர் மருத்துவர் வெங்கடேஷ் தலைமை வகித்தார்.

நாடார் மேல்நிலைப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் ஜான் கணேஷ் முன்னிலை வகித்தார். திருவள்ளுவர் மன்றத் தலைவர் கருத்த பாண்டி, செயலர் நம் சீனிவாசன், பசும்பொன் அறக்கட்டளை தலைவர் பரமசிவம், ஜே டிவி கேபிள்ஸ் இராஜு, முத்தமிழ் மன்ற தலைவர் வரகவி முருகேசன், இலக்கியசாரல் தினகரன், கோவில்பட்டி இசை எப்எம் இயக்குனர் சுரேஷ்குமார், மன்ற காப்பாளர்கள் சேர்மத்துரை மற்றும் செல்வின், கம்பன் கழகச் செயலாளர் சரவணச் செல்வன், தூத்துக்குடி காமராஜ் கல்லூரி பேராசிரியர் நவநீதன், ஆசிரியர்கள் அருணாச்சலம், கனகராஜ், ஆனந்த், முருக சரஸ்வதி, விநாயாசுந்தரி, கிருஷ்ணன், ராதா செல்வம் உள்பட பலர் கலந்து கண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் மேனாள் தலைமை ஆசிரியை மணிமதி ஏற்புரை வழங்கினார்.தொடர்ந்து மகிழ்வோர் மன்ற காப்பாளர் துரைராஜ் நன்றி கூறினார்.

**செய்தியாளர்
கோவில்பட்டி
கோ. சுரேஷ்குமார்.**

## ஐபிஎல் டிக்கெட்டை காட்டி சென்னை மாநகர பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம்



**சென்னை, மே 02:** சென்னை M.A.சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் நாளை நடைபெற உள்ள ஐபிஎல் கிரிக்கெட் போட்டியை காணவரும் பார்வையாளர்கள், தங்களது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து மாநகர பேருந்துகளில் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம் என்று சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்ப தாவது:-

சென்னை M.A.சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் 2026-ம் ஆண்டுக்கான ஐபிஎல்-2026 கிரிக்கெட் போட்டியை காணவரும் பார்வையாளர்கள், தங்களது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து மாநகர பேருந்துகளில் (குளிர்சாதன பேருந்து நீங்கலாக) பயணம் மேற்கொள்ளலாம். இப்போட்டியை முன்னிட்டு மாநகர போக்குவரத்துக் கழகம் சிறப்பு பேருந்துகள், சிற்றுந்துகள் (Shuttle service) இயக்கிட உள்ளது.

சென்னையில் 2026-ம் ஆண்டுக்கான ஐபிஎல்-2026 கிரிக்கெட் போட்டி M.A. சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது. போட்டி நாள் அன்று போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாகவும், பொது போக்குவரத்து பயன்பாட்டினை அதிகரிக்கும் விதமாகவும் Chennai Super Kings Cricket Limited நிறுவனத்திடம் மாநகர போக்குவரத்துக் கழகம் உரிய பயண கட்டணம்பெற்றுக்கொண்டதன் அடிப்படையில், பயணிகள் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டு வைத்திருந்தால் அதை நடத்துனரிடம் காண்பித்து மா.போ.கழக பேருந்துகளில் (குளிர்சாதன பேருந்து நீங்கலாக) போட்டி நடைபெறும் நேரத்திற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பும், போட்டி முடிந்த பின்னர் மூன்று மணி நேரத்திற்கும் கட்டணமின்றி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

மா.போ.கழகம் ஐபிஎல்-2026 கிரிக்கெட் போட்டிக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துள்ளது. சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து பார்வையாளர்கள் மாநகர பேருந்துகளில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து வரலாம். மேலும், பல பேருந்துகளை பயன்படுத்தி மைதானத்திற்கு பயணம் செய்து வரலாம். மேலும், பார்வையாளர்கள் வசதிக்காக போட்டி முடிந்த பின்பு தமது இருப்பிடம் செல்ல, மாநகர போக்குவரத்துக் கழகம் அண்ணா சதுக்கம் பேருந்து நிலையம், தீவுத்திடல் தற்காலிக பேருந்து நிறுத்தம், சென்னை பல்கலைக்கழக பேருந்து நிறுத்தம், அண்ணா சாலை ஓமந்தூரார் மருத்துவமனை அருகில் ஆகிய இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடங்கள் M.A. சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் இருந்து 500 மீட்டருக்குள் உள்ளது. மேலும், அண்ணாசாலையில் உள்ள அண்ணா சிலை முதல் M.A. சிதம்பரம் கிரிக்கெட் மைதானம் வரை மா.போ. கழக சிற்றுந்துகள் (Shuttle service) இயக்கப்பட உள்ளது. எனவே, பார்வையாளர்கள் இப்பேருந்து இயக்கத்தினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## போளூரில் 140 ஆவது மே தின விழா




**திருவண்ணாமலை, மே 02:** திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் 140 ஆவது மே தின விழா நேற்று மாலை 5மணியளவில் ஒருங்கிணைப்பாளர் பி.கிருஷ்ண மூர்த்தி தலைமையில் போளூர் எல்ஐசி அலுவலகம் எதிரில் சி ஐ டி யு சார்பில்ஊர்வலம் தொடங்கியது.

ஊர்வலம் அண்ணா பூங்கா அருகில் நிறைவு பெற்றது. அதன் பின் திறந்தவெளி அருகில் கூட்டம் நடைபெற்றது. தொழிற்சங்க நிர்வாகிகள் ஓய்வு பெற்ற ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். 1886-ஆம் ஆண்டு அமெரிக்கா வின் சிகாகோ நகரில் 8 மணி நேர வேலை 8 மணி நேர ஓய்வு 8 மணி நேர உறக்கம் கேட்டு பேரிழ்ச்சியோடு போராடினார்கள் பின்னாளில் மற்ற நாடுகளுக்கும் தொழிலாளர்கள் எழுச்சி என்பது ஏற்பட்டது .

இந்தப் போராட்டமே தொழிலாளர்களின் உரிமை போராட்டத்திற்கு வழி வகுத்தது இந்தியாவில் 1923 ஆம் ஆண்டு சிந்தனை சிற்பி தோழர் மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னை மெரினா கடற்கரையில் மே தின விழா என்பது எழுச்சியோடு கொண்டாடப்பட்டது .

இன்றளவும் கூட முதலாளிகளின் லாப வேட்டைக்கு தொழி லாளர் களை சுரண்டுகின்ற போக்கு நீடிக்கிறது.

## தெலுங்கானா கார்-லாரி மோதலில் 6 பேர் பலி

**ஐதராபாத், மே 02:** தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தில் பெதகோல்கொண்டா பகுதியில், ஷம்ஷாபாத் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில், ஓ.ஆர்.ஆர். இடத்திற்கு அருகே சென்று கொண்டிருந்த கார் ஒன்று லாரியின் மீது மோதி விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் சிக்கி 6 பேர் பலியானார்கள். சம்பவம் பற்றி அறிந்த ஷம்ஷாபாத் போலீசார் அந்த பகுதிக்கு சென்று உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்திற்கான காரணம் பற்றி உடனடியாக தெரிய வரவில்லை. இதுபற்றி ஷம்ஷாபாத் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

## நீட் தேர்வை முன்னிட்டு 'நட்புடன் உங்களோடு' திட்டம் மூலம் மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள்

**சென்னை, மே 02:** நீட் தேர்வு நாளை (மே 3) நடைபெற உள்ளது. இந்த நிலையில் மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் "நட்புடன் உங்களோடு" திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

மருத்துவ பட்டப்படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (நீட் தேர்வு) வருகின்ற 03.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற உள்ளது. மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் "நட்புடன் உங்களோடு" திட்டம் மூலம் தொலைபேசி வழியாக




மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே 'டெலி கவுன்சிலிங்' (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரவுசு மணி

ஒரு வட்டம் போட்டு அதற்குள் வாழ நினைப்பது தவறே இல்லை... ஆனால்.... அந்த வட்டம் தான் வாழ்க்கை என்று முடிவு சொல்வது தான் மிக மிக தவறு...



V. முத்து ராமகிருஷ்ணன்

## தெலங்கானாவில் மருந்து ஆலையில் வெடிவிபத்து: ஒருவர் பலி, 8 பேர் காயம்

தெலங்கானாவில் மருந்து ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் பலியானார், 8 பேர் காயமடைந்தனர்.

தெலங்கானாவின் நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள மருந்து ஆலையில் வெள்ளிக்கிழமை உலை(ரியாக்டர்) திடீரென வெடித்தது. இந்த சம்பவத்தில் ஒருவர் பலியானார். மேலும் 8 பேர் காயமடைந்தனர் என்று போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மாடிக் கட்டடத்தின் முதல் தளத்தில் இந்த வெடிவிபத்து ஏற்பட்டது. சம்பவத்தின்போது, பத்து பேர் அந்த இடத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அவர்களில் 9 பேர் காயமடைந்தனர். வெடிவிபத்திற்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

இருவர் லேசான காயங்களுடன் தப்பிய நிலையில், மற்றவர்கள் மேல் சிகிச்சைக்காக ஹைதராபாத்தில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இருப்பினும் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி பலியானார்.

வெடிவிபத்தைத் தொடர்ந்து கட்டடத்தின் இரண்டாவது மாடியில் இருந்து குதித்ததில் ஏற்பட்ட பலத்த காயங்களால் அவர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. காயமடைந்த மற்றவர்களின் உடல்நிலை சீராக உள்ளது என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே ஆலையில் ஏப்ரல் மாதம் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

## 10-ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை - தனியார் பள்ளி ஆசிரியர் கைது



**கள்ளக்குறிச்சி, மே 02:** கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள மேல்நாறியப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி மகன் சுரேஷ் என்பவர் சின்னசேலம் அருகே உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பணியில் இருந்து விலகிய அவர் அதே பள்ளியில் படித்த பத்தாம் வகுப்பு மாணவி வீட்டில் தனியாக இருந்ததை அறிந்து அவரது வீட்டிற்கு சென்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

அந்த மாணவி இது குறித்து அவரது தந்தையிடம் கூறிய நிலையில், அவர் அளித்த புகாரின் பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், ஆசிரியர் சுரேஷை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## தொடர் விடுமுறையை முன்னிட்டு தஞ்சை பெரிய கோவிலில் குவிந்த பக்தர்கள்



தஞ்சாவூர், மே 02: தமிழகத்தில் பள்ளிகளுக்கு தற்போது கோடை விடுமுறை விடப்பட்டுள்ள நிலையில், இன்று மே தினம் என்பதாலும், தொடர்ந்து வார விடுமுறைகள் வருவதாலும், பொதுமக்கள் தங்கள் குடும்பத்தினரோடு பல்வேறு சுற்றுலா தளங்களுக்கும், கோவில்களுக்கும் படையெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் உலகப் புகழ் பெற்ற தஞ்சை பெரிய கோவிலில் இன்று பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோவிலின் கட்டிடக்கலை, சிறப்ப கலை மற்றும் பிரம்மாண்ட அழகை பொதுமக்கள் வியப்புடன் பார்வையிட்டனர். யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக விளங்கும் பெரிய கோவிலில், நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

# சுற்றுலா: உறையும் அதிசய நீர்வீழ்ச்சி இந்தியாவில் எங்குள்ளது தெரியுமா?



காஷ்மீர் என்றதும் நம் கண்களுக்கு முன்னால் விரியும் காட்சி என்னவாக இருக்கும். வெள்ளைபனிப்படர்ந்தமலைகள், குளுகுளு தட்பவெட்பநிலை, அழகு கொஞ்சும் இயற்கை என சொல்லிக்கொண்டே போகலாம். தேனிலவு செல்ல வேண்டும் என்றாலோ அல்லது சுற்றுலா செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தாலோ முதலில் மனதில் தோன்றுவது காஷ்மீராக தான் இருக்கும். அந்த அளவிற்கு மக்களுக்கு மிகவும் பிடித்த இடமாக இருக்கிறது. அப்படிப்பட்ட காஷ்மீரில் இருக்கும் ஒரு அதிசய அருவியை பற்றி தான் இன்று பார்க்க உள்ளோம்.

காஷ்மீரில் இருக்கும் அழகான கிராமமான டிராங், குல்மார்கில் இருக்கிறது. இது தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த அழகான கிரமாமானது ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுக்கிறது. பசுமையான காடு, அழகான மலைத்தொடர், சாரல் வீசும் அருவிகளென்று பார்ப்பதற்கு கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

DIRANG FALLS காஷ்மீர் குல்மார்க்கில் உள்ள தங்மார்க் டென்சில் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இது மிகவும் புகழ்பெற்ற சுற்றுலாத்தளமாகும். மற்ற அருவிகளை ஒப்பிடுகையில் டிராங் எந்த விதத்தில் தனித்துவத்துடன் இருக்கிறது என்றால், குளிர்காலங்களில் இந்த அருவியானது முழுமையாக உறைந்து காணப்படும். இத்தகைய அதிசய நிகழ்வை காண்பதற்காகவே எண்ணற்ற சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகிறார்கள். அந்த சமயம் இந்த நீர்வீழ்ச்சியை பார்ப்பதற்கு ஒரு FAIRY TALE படத்தில் இருப்பது போன்ற உணர்வை தரக்கூடியது.

டிராங் நீர்வீழ்ச்சி வருடம் முழுவதுமே மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டிருந்தாலும், இந்த நீர்வீழ்ச்சியை காண சிறந்த மாதம் குளிர்க்காலமேயாகும். டிசம்பர் முதல் மார்ச் மாதம் இந்த நீர்வீழ்ச்சி முழுவதுமாக உறைந்த நிலையில் காட்சி தரும் என்று சொல்லப்படுகிறது.

இன்னொரு வியப்பான விஷயம் என்னவென்றால், இது இயற்கையாக உருவான நீர்வீழ்ச்சி கிடையாது. மனிதர்களால் அணையிலிருந்து வரும் அதிகமான தண்ணீரை வெளியிட உருவாக்கப்பட்ட நீர்வீழ்ச்சியாகும்.

இந்த நீர்வீழ்ச்சியை சென்றடைவது சுலபமாகவே இருக்கும் என்று கூறுகிறார்கள். இங்கே சாலைகள் நன்றாக அமைக்கப்பட்டிப்பதால் பனிகாலங்களில் கூட இங்கு செல்வதற்கு தடை விதிக்க மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அருவிக்கு செல்ல கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

குளிர்காலத்தில் நல்ல கதகதப்பான ஆடைகளை அணிந்து செல்வது சிறந்தது. பனிப்படர்ந்து இருக்கும் அருவியின் அருகில் செல்ல வேண்டும் என்று முயற்சிக்க வேண்டாம்.

ஏனெனில், பனி வழுக்கும் தன்மையோடு இருக்கக்கூடும். அழகான புகைப்படங்கள் எடுப்பதற்கு இது ஒரு சிறந்த தலமாக விளங்குகிறது.

'நார்னியா' போன்ற படங்களில் பார்த்த உறைந்த பனிமலையையும், நீர்வீழ்ச்சியையும் நேரில் பார்க்க வேண்டும் என்று விரும்பினால் கட்டாயம் இந்த நீர்வீழ்ச்சியை ஒருமுறையாவது சென்று பார்வையிடுவது அவசிய மாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### பொதுத்துறை வங்கியில் பாதுகாப்பு மேலாளர் பணி

பொதுத்துறை வங்கியான பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியில் காலியாக உள்ள 27 பாதுகாப்பு மேலாளர் எம்எம்ஜிஎஸ் II பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து வரும் மே 5 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி: இளநிலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் முப்படைகள் ஏதாவதொன்றில் குறைந்தது 5 ஆண்டுகள் அதிகாரியாக பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது துணை ராணுவப் படையில் குறைந்தது 5 ஆண்டுகள் அதிகாரியாக பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 1.4.2026 தேதியின்படி 20 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஒபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளி பிரிவினருக்கு 10 ஆண்டுகளும் சலுகை வழங்கப்படும்.


தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் முறையில் நடத்தப்படும் எழுத்துத்தேர்வு, நேர் முகத்தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்படுவர். பணிக்குத் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ஒரு ஆண்டு பயிற்சி வழங்கப்படும். பின்னர் பணி வழங்கப்படும். எழுத்துத்தேர்வு நடைபெறும் இடம், தேதி பற்றிய விவரம் அடங்கிய அட்மிட் கார்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். தமிழ்நாட்டில் தேர்வு நடை பெறும் இடங்கள்: சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், நாகர்கோவில், விருது நகர், திருவண்ணாமலை, ஈரோடு, திருநெல்வேலி .

எழுத்துத் தேர்வில் ஆங்கிலம், பொது அறிவு, தொழில்முறை அறிவு பாடப்பிரிவுகளில் இருந்து 100 மதிப்பெண்களுக்கு கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத்தேர்விற்கான பாடத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரம் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பக்கட்டணம்: எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு ரூ.100 மட்டும். இதர பிரிவினர்களுக்கு ரூ.850. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்தவும்.

விண்ணப்பிக்கும் முறை: www.punjabandsind.bank.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 5.5.2026

## இணைத் தயாரிப்பாளர் பி.எல்.தேனப்பனுக்கு தங்கச் சங்கிலி : ரஜினி பரிசளித்தார்



**சென்னை, மே 2:**

ரஜினிகாந்த்தின் 75-வது பிறந்த நாளை முன்னிட்டு கடந்தாண்டு தமிழகம் முழுவதும் 'படையப்பா' அதிக திரைகளில் மறுவெளியீடானது. எதிர்பார்த்ததை விட, மிகப்பெரிய வெற்றியைப் பெற்று மறுவெளியீட்டிலும் ரூ. 20 கோடிக்கும் அதிகமாக வசூலித்தது. முக்கியமாக, இப்படத்தை பார்க்காத இன்றைய இளைஞர்கள் பலரும் படத்தைப் பார்த்து உற்சாகம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

25 ஆண்டுகள் கழித்து மறுவெளியீட்டிலும் வசூல் வெற்றியைப் பெற்ற நிலையில், இணைத் தயாரிப்பாளரான பி.எல். தேனப்பனை நேரில் அழைத்து நடிகர் ரஜினிகாந்த் 5 பவுன் தங்கச் சங்கிலியைப் பரிசாக அளித்தார்.

## வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க 234 வெளிமாநில பார்வையாளர்களை நியமித்தது தேர்தல் ஆணையம்

**சென்னை, மே 2:**

தமிழகவாக்குஎண்ணிக்கயை கண்காணிக்க 234 வெளிமாநில பார்வையாளர்களை நியமித்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்கள் 2-ந் தேதி தமிழகம் வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களில் 4-ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்த பணிகளை, நேர்மையாக கண்காணிக்கவும், துல்லியமான முடிவுகளை உறுதி செய்யவும் ஒரு தொகுதிக்கு ஒரு பார்வையாளர்களை, தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. இவர்கள் அனைவரும் வெளிமாநிலத்தில் பணியாற்றி வரும் மூத்த அதிகாரிகள் ஆவார்கள். அதில் பீகார் மாநிலத்தில் இருந்து 34 பேரும், உத்தரபிர தேசத்தில் இருந்து 31 பேரும், மராட்டியம், ஒடிசா மாநிலங்களில் இருந்து தலா 26 பேரும், ராஜஸ்தானில் இருந்து 22 பேரும், மத்திய பிரதேசத்தில் இருந்து 15 பேரும் அரியானாவில் இருந்து 12 பேரும் உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகிறார்கள்.




வாக்கு எண்ணும் தினத்தன்று. இவர்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள ஒவ்வொரு சட்டசபை தொகுதி வாரியாக எண்ணப்படும் வாக்குகள், தேர்தல் ஆணையத்தின் விதிப்படி நடக்கிறதா என்பதை நேரடியாக மேற்பார்வை யிடுவார்கள். மேலும் வாக்கு எண்ணிக்கையின் போது ஏதேனும் ஒரு சுற்றில் வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களது முகவர்களுக்கோ சந்தேகம் ஏற்பட்டால், இந்தப் பார்வையாளர்களிடம் உடனடியாக முறையிடலாம். அவர்களின் தலையீட்டின் பேரில் உடனடித் தீர்வு காணப்படும்.

ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கை முடிந்ததும், அந்தத் தரவுகளை சரிபார்த்து பார்வையாளர் ஒப்புதல் அளித்த பின்னரே தேர்தல் நடத்தும் அலு வலர் அதிகாரப்பூர்வமாக அந்தச் சுற்று முடிவை அறிவிப்பார். மேலும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள 'ஸ்ட்ராங் ரூம்' எனப் படும் பாதுகாப்பு அறைகளைத் திறக்கும்போது. இந்தப் பார்வையாளர்களின் முன்னிலையில்தான் திறக்கப்பட வேண்டும் என்பது விதியாகும்.

## ஈரோடு மாவட்டத்தில் வாக்கு மையங்களின் பாதுகாப்பு பணிகளை கலெக்டர் ஆய்வு

**ஈரோடு, மே 2:**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான ச.கந்தசாமி ஆய்வு செய்தார்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் 23-ம்தேதி 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு கருவிகள் (ஈவிஎம், விவிபேட்), சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் கோபிசெட்டிபாளையம் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொகுதிவாரியாக பாதுகாப்புடன் வைக்கப்பட்டு சீலிடப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் மூன்றடுக்கு பாதுகாப்புடன், கண்காணிப்பு கேமிராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆட்சியர் செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வரும் மே 4-ம் தேதி காலை 8 மணி முதல் இந்த இரு மையங்களிலும் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. 8 தொகுதிகளுக்கான வாக்குகள் மொத்தம் 112 மேசைகளில் எண்ணப்படவுள்ளன.

வாக்கு எண்ணும் பணிக்காக ஒவ்வொரு தொகுதியிலும் 17 மேற்பார்வையாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண்பார்வையாளர்கள் என மொத்தம் 408 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தபால் வாக்குகளை எண்ணுவதற்காக 56 மேற்பார்வையாளர்கள், 112 உதவியாளர்கள், 56 நுண்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, 48 மேசைகளில் எண்ணிக்கை மேற்கொள்ளப்படும்.

## கிருஷ்ணகிரியில் வாக்கு எண்ணும் மையத்தை பார்வையிட்டார் மாவட்ட கலெக்டர்

**கிருஷ்ணகிரி, மே 2:**

கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில், மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஊத்தங்கரை (தனி), பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனஹள்ளி, ஒசூர், தளி ஆகிய 6 தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனித்தனி பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறைகளுக்கு மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை மற்றும் காவல் துறையினர் மூலம் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் தெரிவித்தார்.



மேலும், பாதுகாப்பு அறைகள், கல்லூரி வளாகம் மற்றும் நுழைவாயில்களில் 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிப்பு நடைபெற்று வருகிறது. வேட்பாளர்களின் முகவர்கள், தங்களது தொகுதிக்கான பாதுகாப்பு அறைகளை சிசிடிவி மூலம் கண்காணிக்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். வாக்கு எண்ணிக்கை நாளன்று செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடகப் பணியாளர்களுக்காக தனி ஊடக மையமும் அமைக்கப்பட உள்ளது. தொடர்ந்து, பாதுகாப்பு அறைகள், காவல் கட்டுப்பாட்டு அறை மற்றும் வேட்பாளர்களின் முகவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அறைகளையும் கலெக்டர் ஆய்வு செய்தார்.

## பூங்காவில் கிடந்த 3 பவுன் தாலி செயின் மீட்பு

**சென்னை, மே 2:**

நொளம்பூர், மங்கலேரி பூங்காவில் அதே பகுதியைச் சேர்ந்த வீரபாண்டியன் மற்றும் தாமோதரன் ஆகியோர் நடைபயிற்சி சென்றபோது கேட்பாரற்று கீழே கிடந்த சுமார் 3 சவரன் ஒரு தாலி செயினை கண்டெடுத்துள்ளார். இதைத் தொடர்ந்து அந்த நகையை உரியவரிடம் ஒப்படைக்குமாறு நொளம்பூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

நொளம்பூர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில், தாலிச்செயின் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஜானகி (63) என்பவருக்கு சொந்தமானது என்பது தெரிய வந்தது. அதனை துணை ஆணையாளர் எஸ்.ஈஸ்வரன் உரியவர்களிடம் ஒப்படைத்தார். செயினைப்பெற்றுக்கொண்ட ஜானகி காவல்துறைக்கும், நகையை கொடுத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## சென்னை ரெயில்வே கோட்டத்தில் 11 இடங்களில் நடை மேம்பாலங்கள்

**சென்னை, மே 2:**

பயணிகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், ரெயில் நிலைய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்தில் 202526ம் நிதியாண்டின் 11 புதிய நடைமேம்பாலங்களை அமைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் தண்டவாளங்களைக் கடக்கும் ஆபத்தான முறையைத் தவிர்த்து, ஒரு நடைமேடையிலிருந்து மற்றொரு நடைமேடைக்கு பாதுகாப்பாகவும் வசதியாகவும் செல்வதை உறுதி செய்யும் வகையில் இந்த நடைமேம்பாலங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தனது ரயில்வே வலைப்பின்னல் முழுவதும் பயணிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் சென்னை கோட்டத்தின் தொடர் முயற்சியை இந்த நடவடிக்கை பிரதிபலிக்கிறது. இந்த 11 நடைமேம்பாலங்களில் ஒன்று 'அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின்' கீழ் கட்டப்பட்டுள்ளது. சென்னை கோட்டம் முழுவதும் சீரான பாதுகாப்பு தரத்தை உறுதி செய்யும் வகையில், முக்கிய ரயில் நிலையங்கள் மற்றும் சிறிய நிலையங்கள் என இரண்டிலுமே இந்த நடை மேம்பாலங்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் முக்கிய சிறப்பம்சமாக, 2026 மார்ச் மாதம் திருத்தணி ரயில் நிலையத்தின் 12 மீட்டர் அகலமுள்ள பிரம்மாண்டமான நடைமேம்பாலம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதிக அளவிலான பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம், குறிப்பாக கூட்ட நெரிசல் அதிகமுள்ள நேரங்களிலும் திருவிழாக் காலங்களிலும் பயணிகள் தடையின்றி பாதுகாப்பாகச் செல்ல உதவுகிறது. திருத்தணி ஒரு முக்கிய ஆன்மீகத் தலம் என்பதால், அங்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் கூட்டத்தை மேலாண்மை செய்யவும், நெரிசலைக் குறைக்கவும் இந்த வசதி பெரும் உதவியாக உள்ளது. இதேபோல், பயணிகள் நடமாட்டம் அதிகமுள்ள வாலாஜாபாத், திருமால்பூர் மற்றும் அன்வர்திகன்பேட்டை ஆகிய நிலையங்களிலும் புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# மலிவான சீன இறக்குமதியால் நஷ்டம்: 2,800 தனியார் நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம்

**புதுடெல்லி, மே 2:**

சமூக வலைதளமான 'ரெடிட்' பக்கத்தில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் பகிர்ந்துள்ள பதிவு தொழில் துறை வட்டாரத்தில் பெரும் விவாதத்தைக்கிளப்பியுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது: கடந்த 34 ஆண்டுகளாக இயங்கி வரும் எங்களது நிறுவனத்துக்கு, மை தயாரிப்பதற்கான 3 ஆலைகள் உள்ளன.

இந்த நிலையில், சமீப காலமாகவே இந்தியச் சந்தையில் சீனாவில் இருந்து மிகக் குறைந்த விலையில் மை இறக்குமதி செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. அவர்களது விலையோடு ஒப்பிடுகையில் எங்களால் போட்டியிட முடிவதில்லை. இதனால் கடந்த 3 ஆண்டுகளாக எங்களது நிறுவனம் கடும் நஷ்டத்தைச் சந்தித்து வருகிறது. வேறு வழியின்றி 2 ஆலைகளை மூட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.



இந்த கடினமான முடிவின் காரணமாக 1,934 நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் 896 ஒப்பந்தத் தொழிலாளர்கள் என மொத்தம் சுமார் 2,800-க்கும் மேற்பட்டோர் வேலை இழந்துள்ளனர். மேலும், 72 பேர் கொண்ட நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் குழுவும் வெறும் 8 பேராகக் குறைக்கப்பட்டுள்ளது. பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை குறித்தும் எனக்கு வருத்தம் உள்ளது. ஊழியர்களுக்கு 3 முதல் 5 மாத கால ஊதியத்தை இழப்பீடாக வழங்க நான் பரிந்துரை செய்தேன். ஆனால் நிர்வாகம் மிகக் குறைந்த தொகையையே (2 வார ஊதியம் + பணிக்காலத்திற்கு ஏற்ப கூடுதல் தொகை) மட்டுமே அங்கீகரித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையில் கடும் அதிருப்தி அடைந்த அந்த அதிகாரி, அந்நிறுவனத்திலிருந்து விலகி ஜெர்மனிக்குச் செல்ல முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.





## க்ரைம் கார்னர்

### தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அதிரடி சோதனையில் 200 கிலோ கஞ்சா பறிமுதல்: 6 பேர் கைது

**சென்னை, மே 2:**



தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு தெலங்கானா போலீசாருடன் இணைந்து ஒடிசா ஆந்திரப் பிரதேசம் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட அதிரடி சோதனையில் கடந்த 26-ம் தேதி தமிழ்நாட்டில் நல்லூர் டோல் பிளாசா அருகே ஒரு ஐஷர் லாரியில் கடத்தி வரப்பட்ட 200 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் கும்பலின் தலைவராக கருதப்படும் நாகேந்திரன் என்கிற ரகு (திருப்பூர்) உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாகேந்திரன் மீது முன்பு விருதுநகர் மாவட்டத்தில் 2022-ஆம் ஆண்டு நடந்த இரட்டை கொலை வழக்கு, 2024-ல் மதுரை ஆயுதச் சட்ட வழக்கு, 2025-ல் கரூர் போதைப்பொருள் வழக்கு உள்ளிட்ட பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. முதல் கட்ட விசாரணையில், ஒடிசாவில் இருந்து ஆந்திரப் பிரதேசம் வழியாக தமிழ்நாட்டுக்குள் கஞ்சா கடத்தப்பட்டு, அதை கோயம்புத்தூருக்கு கொண்டு சென்று விநியோகம் செய்ய திட்டமிட்டிருந்தது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்த கடத்தல் கும்பலில் தொடர்புடைய மற்ற உறுப்பினர்கள், பணப் பரிவர்த்தனை வழிகள் ஆகியவற்றை கண்டறிய தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டின் தொடக்கம் முதல், சென்னை தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு மொத்தம் 1703.35 கிலோ கஞ்சா, 87.64 கிலோ ஹஷிஷ் எண்ணெய், 1.045 கிலோ அம்பெட்டமின் ஆகியவற்றை பறிமுதல் செய்து14 பேரை கைது செய்துள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ.15.15 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், முன்னைய வழக்குகளில் 8 பேர் தண்டனை பெற்றுள்ளனர். போதைப்பொருள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் 1933 என்ற 'மனஸ்' தேசிய உதவி எண்ணில் தெரிவிக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### நடத்தையில் சந்தேகம்: மனைவியை கழுத்தை நெரித்து கொன்ற இளைஞர் - அதிர்ச்சி சம்பவம்

**திருவனந்தபுரம், மே 2:**

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் ஆவினசேரி பகுதியை சேர்ந்தவர் உன்னி மாயா (வயது 30). இவர் அனக்கல் பகுதியை சேர்ந்த சிவபிரசாத்தை (வயது 35) காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிக்கு 4 வயதில் பெண் குழந்தை உள்ளது. சிவபிரசாத் அப்பகுதியில் உள்ள சந்தையில் வேலை செய்து வந்தார். அதேவேளை, உன்னி மாயா திருச்சூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இதனிடையே, உன்னி மாயாவின் நடத்தையில் சிவபிரசாத் சந்தேகப்பட்டுள்ளார். இது தொடர்பாக இருவருக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம், சண்டை ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், உன்னி மாயா நேற்று காலை வேலைக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தார். அப்போது, உன்னி மாயாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு சிவபிரசாத் மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த உன்னி மாயா மனைவியை கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

பின்னர், மனைவியை கொலை செய்தது குறித்து சிவபிரசாத் தனது தாயாரிடம் கூறியுள்ளார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக அக்கம்பக்கத்தினருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற அக்கம்பக்கத்தினர் வீட்டில் மயங்கிய நிலையில் கிடந்த உன்னி மாயாவை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமத்திதனர். அங்கு உன்னி மாயாவை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கன்வே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், விரைந்து சென்று மனைவியை கழுத்தை நெரித்து கொலை செய்த சிவபிரசாத்தை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### ராணுவ வீரர்களுக்கான மாரத்தான் போட்டி

**குன்னூர், மே 2:**

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் ராணுவ முகாம் சார்பில் ராணுவ வீரர்களுக்கான மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது. வெலிங்டனில் 36-வது படைப்பிரிவு ராணுவ அதிகாரிகள் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. இதையொட்டி, ராணுவ பயிற்சி கல்லூரி அருகிலுள்ள உலகப்போர் நினைவுத்தூணில், போரில் உயிர்நீத்த வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தென்மேற்கு படைப்பிரிவின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங், மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் கமாண்டன்ட் பிரிகேடியர் கிருஷ் நேந்து தாஸ் உள்ளிட்டோர் இதில் பங்கேற்று மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து, மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் சார்பில் தங்கராஜ் மைதானத்தில் 10 கிலோமீட்டர் மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. போட்டியை பிரிகேடியர் கிருஷ் நேந்து தாஸ் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில், 118 ராணுவ வீரர்கள் 17 அணிகளாகப் பிரிந்து பங்கேற்றனர். கடும் போட்டிக்குப் பிறகு 10 மெட்ராஸ் அணி முதலிடத்தையும், 18 மெட்ராஸ் அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தன. வெற்றி பெற்ற அணிகளுக்கு லெப்டினன்ட் ஜெனரல் மஞ்சிந்தர் சிங் சுழற்கோப்பைகள் மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டினார்.

### மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: காஸ்பர் ரூட் தோல்வி

**மாட்ரிட், மே 2:**

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் நார்வே வீரர் காஸ்பர் ரூட் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகரில் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் கால் இறுதிப் போட்டியில் போட்டித் தரவரிசையில் 12-ம் இடத்தில் உள்ள காஸ் பர் ரூடும், பெல்ஜிய வீரர் அலெக்சாண்டர் பிளாக்ஸூம் மோதினர். இந்தப் போட்டியில் அலெக்சாண்டர் பிளாக்ஸ் சிறப்பாக விளையாடி புள்ளிகளைக் குவித்தார். இறுதியில் பிளாக்ஸ் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் முன்னிலை வீரரான காஸ்பர் ரூட்டை தோல்வியுறச் செய்தார். இதன்மூலம் அலெக்சாண்டர் பிளாக்ஸ் அரை இறுதிக்கு முன்னேறினார்.

### ஷூப்மன் கில் அதிரடியில் ஆர்சிபி அணியை வீழ்த்தியது குஜராத் டைட்டன்ஸ்

**அகமதாபாத், மே 2:**


அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று (ஏப்ரல் 30) நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்று முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்த குஜராத் அணி, ஆரம்பம் முதலே பெங்களூரு வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தது. விராட் கோலி (28) அதிரடியாகத் தொடங்கினாலும், ககிசோ ரபாடா அவரை விரைவில் வெளியேற்றினார். தேவ்தத் படிக்கல் (40) ஓரளவிற்குப் போராடிய நிலையில், மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இதனால் பெங்களூரு அணி 19.2 ஓவர்களில் 155 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. குஜராத் தரப்பில் அர்ஷத் கான் 3 விக்கெட் வீழ்த்தினார்.

## திருவண்ணாமலையில் சித்திரை பவுர்ணமி கிரிவலம்



திருவண்ணமலையில் சித்ரா பவுர்ணமியையொட்டி நேற்று (1ம் தேதி) கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கிரிவலம் செல்லும் பக்தர்கள்.

## தமிழ்நாட்டில் 4 நாள்களுக்கு கன மழை எச்சரிக்கை!



**சென்னை, மே 2:**

தமிழ்நாட்டில் இன்று முதல் மே 4 வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுமார் 1.5 கிமீ உயரம்வரை, தெற்கு ஒடிசா முதல் மன்னார் வளைகுடா தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (TROUGH) நிலவுகிறது.

மே 1ல் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கன மழை பெய்யக்கூடும்.

மே 2ல் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கன மழை பெய்யக்கூடும்.

மே 3ல் நீலகிரி, கோயம்புத்தூர் மலை பகுதிகள், திருப்பூர் மலை பகுதிகள், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கன மழை பெய்யக்கூடும்.

மே 4ல் நீலகிரி, கோயம்புத்தூர் மலை பகுதிகள், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கன மழை பெய்யக்கூடும்.

மே 2 முதல் 5 தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசௌகரியம் ஏற்படலாம்.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை..**

மே 2 வடக்கு ஆந்திர கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## வணிகச் செய்திகள்

### கடல் மீன் உற்பத்தி 3% உயர்வு: குஜராத்தை பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடம்

**கொச்சி, மே 2:**

கொச்சி: இந்தியாவின் கடல் மீன் உற்பத்தி கடந்த 2025-ம் ஆண்டில் 3 சதவீதம் அதிகரித்து 35.7 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதில் குஜராத் மாநிலத்தைப் பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இது குறித்து மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனம் நேற்று வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டில் 6.85 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் தமிழகம் நாட்டின் முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது. இதற்கு முன்பு முதலிடத்தில் இருந்த குஜராத், மோசமான வானிலை மற்றும் புயல் பாதிப்புகள் காரணமாக 15 சதவீத சரிவைச் சந்தித்து இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. கேரளம் 6.24 லட்சம் டன் உற்பத்தியுடன் (2 சதவீத உயர்வு) மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது.

கர்நாடகா 44 சதவீதமும், மகாராஷ்டிரா 18 சதவீதமும் மீன் உற்பத்தியில் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. தேசிய அளவில் கானாங்கெளுத்தி 2.70 லட்சம் டன்களுடன் அதிகம் பிடிபட்ட மீன் வகையாக முதலிடத்தில் உள்ளது.

இதற்கு அடுத்தபடியாக கணவாய் மீன்கள் (2.57 லட்சம் டன்) மற்றும் மத்தி மீன்கள் (2.53 லட்சம் டன்) ஆகியவை உள்ளன. கேரளத்தைப் பொறுத்தவரை மத்தி மீன்கள் 1.68 லட்சம் டன் பிடிபட்டு சாதனை அளவு எட்டப்பட்டுள்ளது.

# 2025-26-ல் அந்நிய நேரடி முதலீடு ரூ.8.56 லட்சம் கோடி தாண்டும்

**புதுடெல்லி, மே 2:**

கடந்த மார்ச் மாத்துடன் முடிவடைந்த 2025-26-ம் நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த அந்நிய நேரடி முதலீடு 90 பில்லியன் டாலரை (சுமார் ரூ. 8.56 லட்சம் கோடி) விஞ்ச வாய்ப்புள்ளதாக மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.





இது குறித்து மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் செயலாளர் அமர்தீப் சிங் பாட்டியா செய்தியாளர்களிடம் கூறியதாவது: அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்காக மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு சீர் திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் பலனாக, கடந்த 2025 ஏப்ரல் முதல் 2026 பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு 88 பில்லியன் டாலரைக் கடந்துள்ளது.

தற்போது மார்ச் மாத புள்ளிவிவரங்கள் கணக்கிடப்பட்டு வரும் நிலையில், கடந்த 2025-26 முழு நிதியாண்டில் இந்த முதலீடு 90 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அரசின் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள், பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் நாட்டின் வேகமான பொருளாதார வளர்ச்சி ஆகியவை அதிகளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கப் பெரிதும் உதவி வருகின்றன.


இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்தியாவில் இருந்து திருடப்பட்ட 657 பழங்கால சிலைகளை திருப்பி அளித்தது அமெரிக்கா

புதுடெல்லி, மே 2:

இந்தியாவில் இருந்து திருடப்பட்ட 657 பழங்கால சிலைகளை அமெரிக்கா திருப்பி அளித்திருக்கிறது. அவற்றின் மதிப்பு ரூ.133 கோடி ஆகும். இந்தியாவில் இருந்து திருடப்பட்ட பழங்கால சிலைகள், புராதன பொருட்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்பட்டு உள்ளன. பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்போது, பழங்கால அரிய பொருட்களை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு அந்த நாடுகளின் அரசுகளிடம் வலியுறுத்தி வருகிறார். இதன்படி பல்வேறு பழங்கால சிலைகள் மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன.

இந்த வரிசையில் இந்தியாவில் இருந்து திருடப்பட்டு அமெரிக்காவுக்கு கடத்தப்பட்ட 657 பழங்கால சிலைகள், அரிய பொருட்கள் திருப்பி அளிக்கப்பட்டு உள்ளன. அவற்றின் மதிப்பு ரூ.133 கோடி ஆகும். அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கடந்த 28-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் 657 பழங்கால சிலைகளை இந்திய தூதரக அதிகாரி ராஜலட்சுமி கடாம் பெற்றுக் கொண்டார்.



இது குறித்து அமெரிக்க அரசு வழக்கறிஞர் ஆல்வின் எல். பிராக் ஜூனியர் கூறும்போது, "அமெரிக்கா முழுவதும் இதுவரை 6,200-க்கும் மேற்பட்ட கலாச்சார பொக்கிஷங்கள் மீட்கப்பட்டு உள்ளன. அவற்றில் 5,900-க்கும் மேற்பட்ட அரிய பொருட்கள் 36 நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளன. இந்த வரிசையில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 657 தொல் பொருட்கள் இந்திய மக்களிடம் திருப்பி அளிக்கப்பட்டு உள்ளன. இந்த பொருட்கள் சுபாஷ் கபூர், நான்சி வீனர் உள்ளிட்டோரால் அமெரிக்காவுக்கு பல்வேறு காலகட்டங்களில் கடத்தி வரப்பட்டவை" என்று தெரிவித்தார்.

சிலைகளின் விவரங்கள்: சிங்கங்கள் இருபுறமும் அமர்ந்திருக்கும் சிம்மாசனத்தின் மீது இரட்டைத் தாமரை பீடத்தில் அமர்ந்திருக்கும் அவலோகிதேஸ்வரரின் வெண்கலச் சிலை இந்தியாவிடம் திருப்பி வழங்கப்பட்டு இருக்கிறது. ராய்ப்பூரில் உள்ள மஹந்த் கசிதாஸ் நினைவு அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்ட அவலோகிதேஸ்வரர் சிலை 1982-ம் ஆண்டில் அமெரிக்காவுக்கு கடத்தப்பட்டது. இந்த பழங்கால சிலைகள், அரிய பொருட்கள் விரைவில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட உள்ளன.

## மராட்டியத்தில் ரூ. 1 ஆயிரத்து 745 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்




மும்பை, மே 2:


நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றங்களை தடுக்க மத்திய , மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்நிலையில், மராட்டிய மாநிலம் மும்பையில் 349 கிலோ எடையுள்ள உயர்தர போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் மதிப்பு ரூ. 1 ஆயிரத்து 745 கோடி ஆகும். சிறிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் தொடர்பான விசாரணையின்போது மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் கும்பல் சிக்கியுள்ளது.

இந்த போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக தேசிய போதைப்பொருள் தடுப்பு முகமை விசாரணை நடத்திவருகிறது. ரூ. 1 ஆயிரத்து 745 கோடி மதிப்புள்ள போதைப்பொருளை பறிமுதல் செய்த அதிகாரிகளுக்கு உள்துறை மந்திரி அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

## சாதிவாரி கணக்கெடுப்பை தாமதப்படுத்த முயற்சி: ஜெய்ராம் ரமேஷ்

புதுடெல்லி, மே 2:



காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதிவாரி கணக்கெடுப்பும் சேர்க்கப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது. ஆனால் தற்போது பிரதமர் நரேந்திர மோடி 'யு-டர்ன்' அடித்திருக்கிறார். கடந்த 2024 ஏப்ரல் 28-ம் தேதி தனியார் தொலைக்காட்சிக்கு பிரதமர் நரேந்திர மோடி அளித்த பேட்டியில், "சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த காங்கிரஸ் கோரிக்கை விடுப்பது, நக்சல் சிந்தனையின் அறிகுறியாகும்" என்று விமர்சித்தார்.

ஆனால் கடந்த 2025-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி பிரதமர் மோடி வெளியிட்ட அறிவிப்பில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியாகி ஓராண்டாகிவிட்டது. ஆனால் இது குறித்த வழிகாட்டு நெறிகள் இன்னும் வெளியிடப்படவில்லை. நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் அண்மையில் நடைபெற்றது.

இதில் சாதி வாரி கணக்கெடுப்பை தாமதப்படுத்தும் பிரதமரின் நோக்கம் மிகத் தெளிவாகப் புரிந்தது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விலைவாசி உயர்வின் நாயகன்: காங்கிரஸ் கடும் விமர்சனம்

புதுடெல்லி, மே 2:

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயம் செய்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலையை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகின்றன.

இதனிடையே, மாதத்தின் முதல் நாளான நாடு முழுவதும் கியாஸ் சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ. 993 உயர்த்தப்பட்டு ரூ. 3 ஆயிரத்து 237-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாடு முழுவதும் வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ. 993 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வணிகர்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த விலை உயர்வு நுகர்வோருக்கு (வாடிக்கையாளர்கள்) நேரடி பாதிப்பை ஏற்படுத்த உள்ளது. இந்நிலையில், கியாஸ் சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மோடி விலை உயர்வின் நாயகன் என்று காங்கிரஸ் விமர்சனம் செய்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், விலை உயர்வின் நாயகன் மீண்டும் சாட்டையால் அடித்துள்ளார். இன்று வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலையை மேலும் ரூ. 993 உயர்ந்துள்ளார். கடந்த 4 மாதங்களில் வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ. 1 ஆயிரத்து 518 உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இன்னும் 8 மாதங்கள் உள்ளன.

இவ்வாறு பதிவிட்டுள்ளது.

# சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை உயர்த்தியது மத்திய அரசு

புதுடெல்லி, மே 2:

அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரான் இடையே நடைபெற்ற போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் இழுபறியாகவே தொடர்ந்து வருகிறது. உலகின் 20 சதவிகிதம் கச்சா எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹார்முஸ் ஜலசந்தியில், அமெரிக்காவும் ஈரானும் தங்கள் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் போட்டியில் இருப்பதால் உலகளவில் எண்ணெய் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விமான எரிபொருள் விலை அதிகமாகி இருப்பதால் விமான நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது.

இந்தநிலையில், சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை 5 சதவீதம் உயர்த்தியது மத்திய அரசு எரிபொருள் விலை உயர்வால் சர்வதேச விமான டிக்கெட் விலை உயர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வரும் விமான நிறுவனங்கள் விமான எரிபொருள் உயர்வு கூடுதல் சுமையாக மாறியுள்ளது.

பாகிஸ்தான் வான்வெளி மூடல் காரணமாக ஐரோப்பா, வட அமெரிக்கா செல்லும் விமானங்கள் சுற்று பாதையில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது எரிபொருள் செலவை மேலும் அதிகரிப்பதாக கூறப்படுகிறது.

# உ.பி.யில் திருமண ஊர்வல இசைக் கச்சேரியில் அதிக ஓசையால் 140 கோழிகள் உயிரிழப்பு

புதுடெல்லி, மே 2:

உ.பி.யில் ஒரு கோழிப் பண்ணையில் 140 கோழிகள் இறந்தது தொடர்பாக இசைக் கச்சேரி நிர்வாகி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கச்சேரியின் அளவுக்கு அதிகமான ஓசையால் கோழிகள் மாரடைப்பால் இறந்ததாக காரணம் கூறப்படுகிறது.

உ.பி.யில் திருமண நிகழ்ச்சியின் மாப்பிள்ளை ஊர்வலத்தில் டிஜே எனும் இசைக் கச்சேரி இடம்பெறுவது வழக்கம். இந்நிலையில் உ.பி.யின் சுல்தான்பூர் மாவட்டம், தரியாபூர் கிராமத்தில் கடந்த ஏப்ரல் 25-ம் தேதி ஒரு திருமண ஊர்வலம் டிஜே கச்சேரியுடன் நடைபெற்றது. அதில் கிளம்பிய அளவுக்கு மீறிய ஓசை அதன் வழியில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

கச்சேரியின் ஓசை தாங்காமல் இங்கு 140 கோழிகள் இறந்தன. இது தொடர்பாக தரியாபூர் காவல் நிலையத்தில் கோழிப்பண்ணை உரிமையாளர் சாபீர் அலி, புகார் அளித்தார்.

இதையடுத்து உயிரிழந்த கோழிகளுக்கான உடற்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. இதில் டிஜே இரைச்சல் கோழிகளுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியதாகவும் இதனால் ஏற்பட்ட மாரடைப்பால் 140 கோழிகள் இறந்ததாகவும் தெரியவந்தது.

# உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் 10 முதல் 50 வயது வரை சபரிமலைக்கு செல்வதில்லை: உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி, மே 2:

உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் 10 முதல் 50 வயது வரை சபரிமலைக்கு செல்வதில்லை என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் பி.வி நாகரத்தினா, எம் எம் சுந்தரேஷ், ஏ.அமானுல்லா, ஏ ஜி மசி, பிபி வர்லே, ஆர் மகாதேவன், ஜோய்மால்யா பக்ஷி ஆகியோரை கொண்ட ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.



இந்த விசாரணையின் போது, கடவுள் நம்பிக்கையற்றவர்கள், கோயிலில் விதிக்கப்பட்டுள்ள மத ரீதியான கட்டுப் பாடுகளை எதிர்த்து வழக்கு தொடர முடியுமா ? பெரும்பான்மையான நம்பிக்கையாளர்களின் நம்பிக்கை புண்படலாமா ? என்று நீதிபதிகள் கேட்டனர்.

தீர்ப்புக்கு ஆதரவாகவும், தீர்ப்புக்கு பிறகு சபரிமலைக்கு சென்று எதிர்ப்புகளை சந்தித்த கனக துர்கா, பிந்து அம்மினி சார்பிலும் மூத்த வழக்குரைஞர் இந்திரா ஜெய்சிங் வாதிடுகையில், "நம்பிக்கை உள்ளதோ, இல்லையோ ஆனால் கோயிலுக்கு செல்லும் போது மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். சட்ட ரீதியான உரிமையை இந்த இருவரும் மீறவில்லை. சட்ட ரீதியான உரிமையை மீட்கவே போராட வேண்டி உள்ளது" என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி எம்.எம். சுந்தரேஷ், "உங்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் இப்படி தான் வழிபாடு இருக்க வேண்டும் என சொல்ல தொடங்குவார்கள். அதற்கு முடிவே இல்லாமல் போகும்" என்று குறிப்பிட்டார்.

மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், "10 முதல் 50 வயது வரையிலான பெண்கள் மிகவும் ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் இருக்கின்றனர் இந்த வயதுடைய பெண்களுக்கு சபரிமலையில் அனுமதி மறுக்கப்படுவது வழிபாட்டு உரிமை என்ற அடிப்படை உரிமையை மறுப்பதாகும். சபரிமலை தீர்ப்புக்குப் பிறகு இரு பெண்களும் சபரிமலைக்கு சென்று திரும்பியபோது கோயிலை தூய்மைப்படுத்த வேண்டும் என்று சிலர் பேசினார்கள்.

ஒவ்வொரு மதத்திற்கும் தன்னகத்தே சீர்திருத்தம் செய்து கொள்ளும் பண்புகள் உள்ளன" என வாதிட்ட போது, நீதிபதி பிவி நாகரத்தினா, "கடவுள் நம்பிக்கையற்ற வட இந்தியர் எப்படி வழிபாட்டு உரிமையை கோர முடியும்? வேற்றுமையில் ஒற்றுமையாக இருப்பது தான் நமது நாட்டின் பலம். 10 முதல் 50 வரையிலுள்ள உண்மையான ஐயப்ப பெண் பக்தர்கள் சபரிமலைக்கு செல்வதில்லை" என்று குறிப்பிட்டார்

# இஸ்ரோ தற்காலிக தொழிலாளரை பணி நிரந்தரம் செய்ய உத்தரவு

புதுடெல்லி, மே 2:

மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோவின் திரவ உந்து அமைப்புகள் மையத்தில் பொருள்களை ஏற்றி இறக்கும் தினக்கூலிகளாக 1991-1997 காலக் கட்டத்தில் சேர்ந்து சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆர். ஐயப்பன், பி. ஆறுமுகன், ஆர். சண்முக ரவி, வி. ராஜேஷ் குமார், எஸ். சுயம்பு, ரவிதுரை, எஸ்.எம். நீல ராமன் உள்ளிட்டோர் பணியாற்றி வந்தனர். இதனிடையே, தற்காலிக தொழிலாளர்களை நிரந்தப்படுத்தும் திட்டத்தை உருவாக்க மத்திய பணியாளர் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவைச் சென்னை உயர் நீதிமன்றமும் கடந்த 2011-ம் ஆண்டு, உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது.

ஆனால் மத்திய அரசு, தொழிலாளர்களை நிரந்தப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதற்கு பதிலாக மீண்டும் தற்காலிக பணியை உருவாக்கியது. இத்திட்டத்தை எதிர்த்துத் தற்காலிக தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அடங்கிய அமர்வு விசாரித்து அளித்துள்ள தீர்ப்பில் கூறியிருப்பதாவது: நாட்டின் முக்கியமான வளர்ச்சியில் மறைமுகமாகப் பங்களிப்பு செய்யும் தொழிலாளர்களைச் சமவுரிமையுடன் முன் மாதிரியான பணி அமர்த்துநராகச் செயல்பட வேண்டிய அரசே பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது. தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற உத்தரவை மத்திய அரசு ஏற்று நடக்கவில்லை.

இந்த மேல்முறையீடு மனுக்கள் ஏற்கப்படுகின்றன. தற்காலிக தொழிலாளர்களைக் கடந்த 2010, செப்டம்பர் 9-ம் தேதி தொடங்கி பின் தேதியிட்டு 4 வாரங்களுக்குள் நிரந்தரமாக்க மத்திய அரசுக்கு உத்தரவிடப்படுகிறது. இத்தீர்ப்பு இஸ்ரோவில் பணியாற்றும் தற்காலிக தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். பொறியாளர்கள், அறிவியலாளர்களின் பங்களிப்பால் மட்டும் இந்திய விண்வெளித் திட்டம் வெற்றி பெறவில்லை. உதவிப் பணியாளர்களின் பங்களிப்பும் இந்த வெற்றியில் உண்டு. பணி அங்கீகார விவகாரத்தில் அத்தகைய பணியாளர்களைப் பாகுபாட்டுடன் நடத்துவதோ, அலட்சியம் காட்டுவதோ, நிலவுக்கும், அதற்கு அப்பாலும் இந்தியாவைக் கொண்டு சென்ற கூட்டு முயற்சி என்னும் பண்பைக் குலைப்பதாகிவிடும். இவ்வாறு தீர்ப்பில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

# 'நெட்வொர்க்' வரைபடத்தில் பிழை: மன்னிப்பு கேட்டது நேபாள ஏர்லைன்ஸ்

புதுடெல்லி, ஏப்.2:

ஒரு நெட்வொர்க் வரைபடத்தில் ஜம்மு காஷ்மீரை பாகிஸ்தானின் ஒரு பகுதியாக காட்டியதற்காக நேபாள ஏர்லைன்ஸ் மன்னிப்பு கோரியுள்ளது.

இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் நேபாள ஏர்லைன்ஸ் வெளியிட்டுள்ள பதிவில், "எங்கள் சமூக ஊடக சேனல்களில் சமீபத்தில் பகிரப்பட்ட நெட்வொர்க் வரைபடத்தில் உள்ள பிழைக்காக நாங்கள் மனப்பூர்வமாக மன்னிப்பு கோருகிறோம். அந்த வரைபடத்தில் சர்வதேச எல்லைகள் தொடர்பான வரைபடவியல் பிழைகள் இருந்தன. அவை நேபாளம் அல்லது நேபாள ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை, நாங்கள் உடனடியாக அந்தப் பதிவை நீக்கிவிட்டோம், மேலும் எங்கள் தகவல்கள் மிக உயர்ந்த துல்லிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். அந்தப் பதிவு ஏற்படுத்திய மன வருத்தத்துக்கும் வருந்துகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மேற்கு வங்க வாக்காளர்கள் கருத்து சொல்ல மறுப்பு: ஆக்சிஸ் மை இந்தியா தகவல்

புதுடெல்லி, ஏப்.2:

மற்ற மாநிலங்களின் தேர்தல் கருத்துக் கணிப்புகளை வெளியிட்ட ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனம் மேற்கு வங்கத்தின் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பை வெளியிட மாட்டோம் என அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனர் பிரதீப் குப்தா கூறியதாவது: மேற்கு வங்கத்தில் உள்ள 294 சட்டப்பேரவை தொகுதிகளிலும் பயிற்சி பெற்ற 80 சர்வேயர்கள் மூலம் கருத்து கணிப்பு தகவலை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டோம். ஆனால், அந்தப் பணி சவாலாக இருந்தது.

சுமார் 70% வாக்காளர்கள், தாங்கள் யாருக்கும் வாக்களித்தோம் என்ற தகவலை தெரிவிக்க மறுத்துவிட்டனர். சிலர் தயக்கத்துடன் கூறினர். இதனால் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பை வெளியிட வேண்டாம் என முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு: சத்தீஸ்கர் அரசு தீர்மானம்

புதுடெல்லி, ஏப்.2:

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா மக்களவையில் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்து பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்தக் கோரி தீர்மானம் நிறைவேற்ற சத்தீஸ்கரில் ஒரு நாள் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நேற்று கூட்டப்பட்டது. சத்தீஸ்கர் சட்டப்பேரவையில் 4 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சி தலைவர் சரண் தாஸ் மகந்த், மக்களவையில் தற்போதுள்ள எம்.பி.க்களின் எண்ணிக்கையிலேயே பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை வழங்க வேண்டுகோள் விடுத்து மற்றொரு தீர்மானத்தை தாக்கல் செய்தார்.

இதை அனுமதிக்க முடியாது என சபாநாயகர் ரமண் சிங் கூறினார். இதேபோல் மத்திய பிரதேச சட்டப்பேரவையில் கடந்த திங்கள் கிழமை, பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை உடனே அமல்படுத்த கோரி தீர்மானம் நிறைவேற்றியது.

## நேபாளத்தில் வேன் விபத்து: 20 பேர் உயிரிழப்பு

**காத்மாண்டு, மே 2:**

நேபாளத்தின் இமய மலையில் சுமார் 4,580 மீட்டர் உயரத்தில் ரோல்பா நகர் அமைந்துள்ளது. அங்குள்ள புகழ்பெற்ற இந்து கோயிலில் வழிபடுவதற்காக ருகம்கோட் பகுதியில் இருந்து சுமார் 20 பக்தர்கள் ஒரு வேனில் சென்று கொண்டிருந்தனர். அவர்களின் வேன், தவாங் பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்து 800 மீட்டர் ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் 20 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுனில் தபா கூறும்போது, "முதல்கட்ட விசாரணையில் சிறிய வேனில் அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் பயணம் செய்தது தெரியவந்துள்ளது. கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக சாலையோர பள்ளத்தில் வேன் கவிழ்ந்திருக்கிறது. உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. உயிரிழந்தவர்களின் விவரங்கள் உடனடியாக தெரியவில்லை" என்றார்.

## இந்தியா - பாகிஸ்தான் போரில் 5 கோடி பேர் காப்பாற்றப்பட்டனர்: டிரம்ப்

**வாஷிங்டன், மே 2:**




இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் அரசின் ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களுடன் டிரம்ப் பேசியதாவது, "நான் 8 போர்களை நிறுத்தியுள்ளேன்.

இந்தியாவைப் பொருத்தவரையில், நான் 3 கோடி முதல் 5 கோடி பேரை காப்பாற்றியதாக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் கூறினார். ஆனால், எண்ணிக்கை அவர் கூறுவதைவிட அதிகமாக இருந்திருக்கலாம்.

இரண்டு அணுசக்தி நாடுகள் மோதிக் கொண்டிருந்தன. 11 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆனால், நீங்கள் தொடர்ந்து சண்டையிட்டால், உங்கள் மீது வரியை விதிப்பேன் என்று நான் கூறினேன்.

'ஐயோ, தயவுசெய்து அப்படிச் செய்யாதீர்கள்,' என்று அவர்கள் சொன்னார்கள். வரிகளை விதித்து சண்டையைத் தீர்த்து வைத்தேன்" என்று தெரிவித்தார். 2025 ஏப்ரலில் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் பலியாகினர். இதனையடுத்து, 2025 மே மாதத்தில் பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து, இந்தியா மீது பாகிஸ்தானும் தாக்குதல் நடத்தியது.

தொடர்ந்து, இரு நாடுகளுக்குமிடையேயான போரை நிறுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்தியதால், இந்தியா போரை நிறுத்திக் கொண்டது.

இதனிடையே, இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக டிரம்ப் கூறினார். இந்தியா போர் குறித்த டிரம்ப்பின் பேச்சுக்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்தது.

இருப்பினும், போரை நிறுத்தியதாக டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக இதுவரையில் 80-க்கும் மேற்பட்ட முறை டிரம்ப் கூறிவிட்டார்.

## ஹார்முஸ் ஜலசந்தியின் பெயரை 'டிரம்ப் ஜலசந்தி' என்று மாற்றி டிரம்ப் சமூக வலைதளத்தில் பதிவு




**வாஷிங்டன், மே 2:**

ஹார்முஸ் ஜலசந்தியின் பெயரை மாற்றலாம் என்று பரிந்துரைக்கும் ஒரு பதிவை, அமெரிக்க அதிபர் டிரம்ப் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். ஹார்முஸ் ஜலசந்தியை 'டிரம்ப் ஜலசந்தி' என்று பெயரிட்ட ஒரு வரைபடத்தை தன் சமூக வலைதளத்தில் அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ளார். ஹார்முஸ் ஜலசந்தி, ஈரான் மற்றும் ஓமனுக்கு இடையே அமைந்துள்ளது. இது, பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவை இணைக்கிறது. இந்த ஹார்முஸ் ஜலசந்தி என்பது, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற எண்ணெய் உற்பத்தி நாடுகள் மற்றும் அதை சுற்றியுள்ள நாடுகளுக்கு மிகவும் முக்கியமாகும். இந்த ஜலசந்தி என்பது மிகவும் குறுகியதாகும். அதன் மிகவும் குறுகிய பகுதி, 33 கி.மீ., அகலம் மட்டுமே உள்ளது. அதிலும், கப்பல்கள் செல்லும் பகுதி, 3 கி.மீ., தூரம் மட்டுமே உடையவை. உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதியில் 20 சதவீதம் இந்த வழித்தடம் வழியாகத்தான் நடைபெறுகிறது. ஹார்முஸ் என்ற பெயர், அப்பகுதியில் 13 முதல் 16ம் நூற்றாண்டுகளில் செல்வாக்குடன் திகழ்ந்த பண்டைய துறைமுக நகரமான 'ஹார்முஸ்' நகரிலிருந்து உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது டிரம்ப் வெளியிட்டுள்ள இந்த பதிவு இணையத்தில் கேலியான விமர்சனங்களை கிளப்பியுள்ளது.

## அமெரிக்காவில் இந்திய வாலிபர் தற்கொலை; போலீசார் தீவிர விசாரணை

**கர்னூல், மே 2;**

ஆந்திர பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தில் வசித்து வந்தவர் சந்து இராகனாபொய்னா (வயது 26). அமெரிக்காவிற்கு மேல்படிப்பு படிப்பதற்காக சென்ற இவர், சிகாகோ நகரில் உள்ள டேபால் பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்பை கடந்த ஆண்டு மார்ச்சில் முடித்து விட்டு, ஜூன் மாதத்தில் டெல் நிறுவனத்தில் கணினி பிரிவில் வேலை செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில், திடீரென அவர் தற்கொலை செய்துள்ளார். பண நெருக்கடி காரணம் என கூறப்படுகிறது. இதுபற்றி அவருடைய நண்பர் ராஜேஷ் குர்ராம் நிதி திரட்டுவதற்காக வெளியிட்ட செய்தியில், பல சர்வதேச மாணவர்களை போன்று நம்பிக்கை மற்றும் நோக்கம் ஆகியவற்றுடன் பெரிய கனவுகளுடன் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தவர் சந்து. அற்புத மனிதர். பெருந்தன்மையான, பழகுவதற்கு இனிமையான மற்றும் நண்பர்களுக்கும், இளைய சகோதரருக்கும் ஆதரவாக இருந்தவர். ஆனால், பெரிய அளவில் தாங்க முடியாத சவால்களை எதிர்கொண்டார் என தகவலை பகிர்ந்து உள்ளார். அவருடைய உடலை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்காக நேற்று வரை ரூ.56.90 லட்சம் நிதி திரண்டுள்ளது. சந்துவின் மரணத்திற்கான காரணம் பற்றி உள்ளூர் போலீசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

## மியான்மர்: ஆங் சான் சூகிக்கு மீண்டும் தண்டனை குறைப்பு

**நியூயார்க், மே 2:**



மியான்மரின் முன்னாள் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகிக்கு (80) விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையில் மீண்டும் ஒரு பகுதி குறைக்கப்பட்டுள்ளது.

மியான்மர் புத்தாண்டை முன்னிட்டு அண்மையில் அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஆங் சான் சூகியின் நெருங்கிய கூட்டாளியான அந்நாட்டின் முன்னாள் அதிபர் வின் மியின்ட் விடுவிக்கப்பட்டார்.

ஆனால், ஆங் சான் சூகிக்கு விதிக்கப்பட்ட 27 ஆண்டுகள் சிறைத்தண்டனையிலிருந்து 4.5 ஆண்டுகள் மட்டும் குறைக்கப்பட்டது.

தற்போது மேலும் 4.5 ஆண்டுகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், அவர் இன்னும் 18 ஆண்டுகளுக்கும் மேல் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியுள்ளது.

இருப்பினும், ஆங் சான் சூகி தற்போது எங்கு சிறைவைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்த எந்த தகவலும் இல்லை. அவர் நலமுடன் இருப்பதாகவும், அவருக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படுவதாகவும் ராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

## ஆர்டெமிஸ்-2 சந்திரப் பயண வீரர்கள் அமெரிக்க அதிபர் டிரம்ப்புடன் சந்திப்பு

**பெர்லின், மே 2:**



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஆர்டெமிஸ்-2 விண்வெளி பயணத்தின் நான்கு விண்வெளி வீரர்களையும் வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் வரவேற்றார்.

நாசா நிறுவனத்தின் ஆர்டெமிஸ்-2 சந்திரப் பயண வீரர்கள், அமெரிக்க அதிபர் டொனால்ட்டிரம்ப்பை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

ஏப்ரல் 29 அன்று, ஆர்டெமிஸ்-2 குழுவினரையும், நாசா நிர்வாகி ஜாரெட் ஐசக்மேனையும் (Jared Isaacman) வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்திற்கு டிரம்ப் அழைத்திருந்தார். வெள்ளை மாளிகை இதை ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பாக அறிவித்தது. வரலாற்றுச் சாதனை படைத்த விண்வெளி வீரர்களான ரீட் வைஸ்மேன், விக்டர் குளோவர், கிறிஸ்டினா கோச் மற்றும் கனடிய விண்வெளி அமைப்பின் ஜெரமி ஹான்சன் ஆகியோரை டிரம்ப் பாராட்டினார்.

"இப்படிப்பட்டவர்கள்தான் நமது நாட்டை மகத்தானதாக ஆக்குகிறார்கள். இவர்களின் துணிச்சல் அளப்பரியது," என்று அவர் தெரிவித்தார்.

பின்னர், தாமும் விண்வெளிக்குச் செல்ல விருப்பம் இருப்பதாக நகைச்சுவையுடன் கூறிய டிரம்ப், "அதற்குத் திறமையும் உடல் தகுதியும் வேண்டும். எனக்கு அதில் எந்த சிரமமும் இருக்காது," என்றார்.

அதற்கு பதிலளித்த ஜாரெட் ஐசக்மேன், "அதற்கான ஏற்பாடுகளை செய்யலாம், அதிபரே," என்று சிரிப்புடன் கூறினார்.

ஆர்டெமிஸ்-2 பயணம் ஏப்ரல் 1 அன்று விண்ணில் புறப்பட்டு ஏப்ரல் 10 அன்று பூமிக்குத் திரும்பியது. இந்தப் பயணத்தில், மனிதர்கள் 1972-ம் ஆண்டு அப்பல்லோ -17க்குப் பிறகு முதன்முறையாக பூமியின் சுற்றுப்பாதையை விட்டு வெளியேறினர். மேலும், 1970-ம் ஆண்டு அப்பல்லோ-13 ஏற்படுத்திய சாதனையையும் முறியடித்து, மனிதர்கள் இதுவரை சென்றிராத அளவுக்கு தொலைவில் பயணித்தனர்.

22 நிமிடங்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆர்டெமிஸ்-2 வீரர்கள் எதுவும் பேசவில்லை. அவர்கள் அதிபரின் பின்னால் அமைதியாக நின்றனர்.

ஜாரெட் ஐசக்மேனுக்கு டிரம்ப் தனிப்பட்ட பாராட்டுக்களையும் தெரிவித்தார். நாசா தலைமையகத்தை வாஷிங்டனிலிருந்து மாற்றுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கும் ஐசக்மேன் பதிலளித்தார்.

மேலும், அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள் (UFO) தொடர்பான ஆவணங்களை விரைவில் வெளியிட இருப்பதாக டிரம்ப் தெரிவித்தார். நிலவில் மனிதர்களை மீண்டும் தரையிறக்குவது குறித்து கேட்கப்பட்டபோது, "நாங்கள் திட்டத்துக்கு முன்னதாகவே இருக்கிறோம். அதற்கான நல்ல வாய்ப்பு உள்ளது," என்றார்.

இந்நிகழ்ச்சியில், தாம் உருவாக்கிய United States Space Force குறித்து டிரம்ப் பெருமிதத்துடன் பேசினார். மேலும், நாசாவை மீண்டும் வலுப்படுத்தியதற்கும் தாமே காரணம் என குறிப்பிட்டார்.

## கோஹினூர் வைரத்தை திருப்பி அளிக்கும்படி இங்கிலாந்து மன்னர் சார்லஸிடம் கூறுவேன்: மம்தானி தகவல்

**நியூயார்க், மே 2:**

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ், அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். இங்கிலாந்து மன்னர் சார்லஸ், ராணி கமிலா ஆகியோருக்கு வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விருந்தளித்தார்.



அமெரிக்காவின் நியூயார்க், மான்ஹாட்டன் உட்பட பல இடங்களுக்கு சார்லஸ் செல்கிறார். நியூயார்க் வரும் சார்லஸை, அதன் மேயர் ஜோரன் மம்தானி வரவேற்க வேண்டும். அப்போது அவரிடம், மன்னர் சார்லஸை சந்தித்து பேசினால், அவரிடம் என்ன கூறுவீர்கள் என நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த மம்தானி, 'மன்னர் சார்லஸை தனியாக சந்தித்து பேசும் வாய்ப்பு கிடைத்தால், கோஹினூர் வைரத்தை திருப்பி அளிக்கும்படி கூறுவேன்" என்றார். கோஹினூர் வைரத்தை இங்கிலாந்து ராணி விக்டோரியாவுக்கு, இந்தியாவின் சீக்கிய மன்னர் துலீப் சிங் கடந்த 1849-ம் ஆண்டு வழங்கினார்.

இது 105.6 கேரட் மதிப்புடையது. இதை இங்கிலாந்து ராணி கடந்த 1937-ம் ஆண்டு தனது கிரீடத்தில் பொருத்தி அணிந்தார். தற்போது இது லண்டன் டவரில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து இங்கிலாந்து ராணியிடம் சென்ற கோஹினூர் வைரத்தை திரும்ப பெறும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

இந்நிலையில், இங்கிலாந்து மன்னர் சார்லஸை தனியாக சந்தித்து பேசினால், கோஹினூர் வைரத்தை இந்தியாவிடம் திரும்பத் தரும்படி கூறுவேன் என நியூயார்க் மேயர் மம்தானி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகிதத்தில் மாற்றமில்லை!



**நியூயார்க், மே 2:**

அமெரிக்க மத்திய வங்கியான 'ஃபெடரல் ரிசர்வ்', தனது வட்டி விகிதங்களை மாற்றமின்றி 3.50 முதல் 3.75 சதவீதம் என்ற அளவிலேயே நீட்டிப்பதாக அறிவித்துள்ளது.


வட்டி வகிதத்தைத் தீர்மானிக்கும் மத்திய வங்கியின் 'எஃப்ஓஎம்சி' குழுவின் கடந்த புதன்கிழமை நிறைவடைந்த 2 நாள்கள் கூட்டத்தில், இக்கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அதேநேரம், வாக்கெடுப்பில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

8 உறுப்பினர்கள் தற்போதைய வட்டி விகிதமே தொடர வேண்டும் என வாக்களித்தனர். ஆனால், ஸ்டீபன் மிரான், பிலிப் ஜெஃபர்சன், அன்னா பால்சன் உள்ளிட்ட4 உறுப்பினர்கள் வட்டி விகிதத்தைக் குறைக்க ஆதரவு தெரிவித்தனர். 1992-ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு பெரிய அளவிலான கருத்து வேறுபாடு கூட்டமைப்பில் நிலவுவது இதுவே முதல் முறையாகும். மத்திய கிழக்கு போர், பொருளாதார நோக்கில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய கிழக்கு போர் காரணமாக உலக அளவில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதன் விளைவாக, அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யாமல் தற்போதைய நிலையே தொடரும் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், அமெரிக்காவின் நுகர்வோர் விலை குறியீட்டு (சிபிஐ) அடிப்படையில் பணவீக்கம் 3.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது கடந்த 22 மாதங்களில் இல்லாத உச்சமாகும். பிப்ரவரியில் இது 2.4 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள திடீர் உயர்வு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## "அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள ஈரான் துடித்துக்கொண்டிருக்கிறது" - ட்ரம்ப்

**பெர்லின், மே 2:**



தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொள்ள ஈரான் தீவிரமாக விரும்புவதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, "போர்நிறுத்தத்தை மீறுவதற்கு நீங்கள் அவசரப்படுகிறீர்களா?" என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த ட்ரம்ப், "போரை மீண்டும் தொடங்க வேண்டிய தேவை நமக்கு இருப்பதாக நான் கருதவில்லை. அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகள் ஈரான் பாதுகாப்புப் படைகளின் திறன்களை கடுமையாகப் பலவீனப்படுத்தியுள்ளன. அவர்களின் கடற்படை அழிந்துவிட்டது. அவர்களின் விமானப்படை அழிந்து விட்டது.

அவர்களின் ஆளில்லா விமான (drone) தொழிற்சாலைகளின் செயல்பாடு சுமார் 82 சதவீதம் குறைந்துவிட்டது. அவர்களின் ஏவுகணை உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஏவுகணைத் தொழிற்சாலைகள் ஏறக்குறைய 90 சதவீதம் முடங்கிவிட்டன. அவர்களின் அணுசக்தித் திறனை நாங்கள் முற்றிலுமாக அழித்துவிட்டோம்.

ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா முற்றுகையிட்டதன் காரணமாக, ஈரானின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது.

எண்ணெய் விற்பனை மூலம் அவர்களுக்கு எந்த வருவாயும் கிடைப்பதில்லை. இந்தச் சிக்கலுக்கு மிக விரைவில் ஒரு தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன்.

அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொள்ள ஈரான் தீவிரமாக விரும்புகிறது.

இது தொடர்பாக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் விவரங்கள் என்ன என்பது எனக்குத் தவிர, வேறு ஓரிரு நபர்களுக்கு மட்டுமே தெரியும்; மற்ற யாருக்கும் தெரியாது" என தெரிவித்துள்ளார்.

# மேற்கு வங்காளத்தில் 15 வாக்குச்சாவடிகளில் இன்று மறுவாக்குப்பதிவு: தேர்தல் ஆணையம் அறிவிப்பு




# மதுரை சித்திரை திருவிழா: பச்சை பட்டுடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார் கள்ளழகர்!

## மலிவான சீன இறக்குமதியால் நஷ்டம்:

# 2,800 தனியார் நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம்

# 2025-26-ல் அந்நிய நேரடி முதலீடு ரூ.8.56 லட்சம் கோடி தாண்டும்

## ஜபல்பூரில் சுற்றுலாப் பயணிகள் படகு கவிழ்ந்து 9 பேர் பலி, 5 பேர் காணவில்லை!

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 02.05.2026 சனிக்கிழமை இலவச இ–பேப்பர்